வாழ்க வையகம்
வாழ்க வளமுடன்
வாழ்க வளமுடன்

சித்தர்களும் வேதாத்திரி மகரிசியும்.

அருள்நிதி
மன்னார்குடி பானுகுமார் M.A.,H.D.C

பொருளடக்கம்.

1. மனிதர்கள் யார்?
2. வேதாத்திரி மகரிசி யார்?
3. வேதாத்திரி மகரிசி பார்வையில் சித்தர்கள்.
4. சித்தர் பாடல்களும் வேதாத்திரியமும்.
5. யார் சித்தர் - யார் துறவி?
6. ஜீவன் முகத்தர்களின் வாழ்க்கை நெறி
7. உயிரை உணர்த்திய சித்தர்கள்.
8. கனவில் வந்த போகர்
9. கோள்களை வென்ற சித்தர்கள்
10. அழுகண்ணி சித்தரும் வேதாத்திரியும்.
11. சித்தர்கள் நெறியில் நாம்.
12. சித்தர்கள் போற்றும் வாலை
13. இறையுணர்வு தந்த சித்தர்
14. பெண்கள் இல்லாமல் ஆணும் இல்லை
15. காய கல்ப யோகம் தந்த சித்தர்கள்
16. மனவளக்கலையில் சித்தர் நெறி தீட்சைகள்
17. சும்மா இருக்கும் சுகம்
18. சித்தர்கள் தந்த கராத்தே
19. சித்தர்கள் நெறியே மனவளக்கலை

என்னுரை

மானிடர்களின் சிக்கல்களுக்குத் தீர்வுகாணச் சித்தர்கள் பலர் அவ்வப்போது தோன்றி, தீர்வாக இருந்திருக்கிறார்கள்.

சித்தர்கள் தாங்கள் கண்ட மெய்யறிவினை அழகிய பாடல்களாக எழுதி வைத்துள்ளார்கள்.

அவைகளில் யோகம், ஞானம், இரசவாதம், ஜோதிடம், வைத்தியம், பஞ்சபட்சி, மூச்சுப்பயிற்சி என்னும் சரநூல், வர்மம், சாமுத்திரிகா இலட்சணம், மனையடி சாத்திரம், வானியல் போன்ற எண்ணற்ற அறிவார்ந்த செய்திகளை சித்தர் நூல்களில் எழுதி வைத்துள்ளார்கள்.

சித்தர்கள் யாரும் ஏடும், எழுத்தாணியும் கொண்டு பாடல்களைப் இயற்றி வைத்துவிட்டுச் செல்லவில்லை.

இறையுணர்வு பெற்ற அவர்களது கருணையினால் வாய்மொழி உபதேசங்களை அவர்களின் சீடர்களால் தொகுக்கப்பட்டுள்ளன.

இருப்பினும் அன்றைய இலக்கிய வாணர்களின் அலட்சியத்தால் மிகப் பெரிய அளவில் சித்தர் பாடல்கள் நமக்கு கிடைக்காமல் போய்விட்டன.

சில சித்தர்கள் சில இரகசியங்களை மானுடத்திற்கு வழங்காமலும் மறைந்தும் உள்ளனர்.

சித்தர்கள் என்றால் சித்தி பெற்றவர்கள், பேரறிவாளர்கள், மெய்யறிவாளர்கள் என சங்க இலக்கியங்களில் குறிப்பு உள்ளது.

சித்தர்கள் வாழ்ந்ததால் தமிழ்நாட்டை அறிவன் தேயம் என இலக்கியங்கள் தெரிவிக்கின்றன.

தமிழ் சித்தர்கள் மரபில் தொடர்ந்து தோன்றியவர்களில் தாயுமானவர், வள்ளலார் பாடல்களும் நமக்கு பொக்கிஷமாக அமைந்துள்ளன.

நம் நாட்டில் வாழ்ந்த சித்தர்கள் எல்லோருமே ஞான யோகிகள் தாம். சித்தர்களை நாம் பார்த்ததில்லை. அவர்களுடைய பாடல்கள் மூலம் அவர்களைப் பார்க்கிறோம்.

நம்மிடையே வாழ்ந்த சித்தரான வேதாத்திரி மகரிசியைப் பலர் பார்த்திருக்கிறோம். பழகியிருக்கிறோம்.

உலக அமைதிக்காக உலக சமுதாய சேவா சங்கத்தை நிறுவி, போரில்லா உலகம் காணவேண்டி, உலகம் முழுவதும் அறிவுத் திருக்கோவில், மனவளக்கலை மன்ற அறக்கட்டளைகள் மூலம் தனிமனித அமைதி, குடும்ப அமைதி, சமூக அமைதி, உலக அமைதி என்ற உயரிய குறிக்கோள்களோடு இலட்சக்கணக்கான அருட்தொண்டர்களை உருவாக்கி இருக்கிறார்கள்.

மனவள கலைஞர்களுக்கு உடல்நலம் காண எளிய உடற்பயிற்சியும், மனநலம் காண எளிய குண்டலினயோகமும், வாழ்நாள் அதிகரிக்க காயகலப் பயிற்சியும், மெய்விளக்கம் பெற பிரம்மஞானப் பயிற்சியும் வழங்கி, சித்தர்கள் மரபில் வாழ்வாங்கு வாழ்ந்து மற்றவர்களுக்கும் வழிகாட்டி வருகிறார்கள்.

சித்தர்கள் சமூக அக்கறை உள்ளவர்கள். உலகம் உய்ய உயரிய கருத்துக்களை அழகிய தமிழ்ப்பாடல்களாக வழங்கி உள்ளார்கள்.

சித்தர் மரபில் தோன்றிய அருட்தந்தை வேதாத்திரி மகரிசி அவர்களும் சித்தர்கள் கருத்துக்கு இணையாக சித்தர் வழியில் உலகுக்கு ஞானக்களஞ்சியத்தை அருந்தமிழ்ப் பாடல்களாக வழங்கி வருகிறார்கள்.

தமிழ்நாட்டில் வாழ்ந்த சித்தர்கள் சுருங்கிய முறையில் கொண்டு வந்ததை நீண்ட காலமாக ஆராய்ச்சி செய்து, மேலும் காலத்திற்கேற்ற வகையில் தேவையான மாற்றம் செய்து, பாதுகாப்பு சேர்த்து வெண்ணெயைப் போல் சத்தாக (Essence) திரட்டிக் கொடுத்துள்ளார்கள்.

இனி எப்பொது வேண்டும் என்றாலும் நல்ல முறையிலே பயன்படுத்திக் கொள்ளலாம்.

உங்கள் வாழ்வை வளமாக்கிக்கொண்டு பிறர்க்கும் தொண்டு செய்து மன நிறைவும் பெருமையும் பெறலாம்.

யான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகமும் பெற வேண்டும் என்ற எண்ணத்தில் வாசகர் கரங்களில் இந்த ஒப்பாய்வு நூலை ஒப்படைக்கிறோம்.

இதனை படித்தின்புறும் நீங்களும் உங்கள் அன்புக் குடும்பமும், உடல்நலம், நீளாயுள், நிறைசெல்வம், உயர்புகழ், மெய்ஞ்ஞானம் ஓங்கி வாழ்க வளமுடன் என இறைநிலையோடு இணைந்து வாழ்த்துகிறேன் - பிராத்திக்கிறேன்.

குருவின் தொண்டில்

மன்னார்குடி பானுகுமார்.

Mail id. banukumar.v @gmail.com

1. சித்தர்கள் யார்?

சித்தர்கள் என்பவர்கள் யார்? அவர்களது நோக்கம் என்ன? நாமும் சித்தராக முடியுமா? இது அவ்வப்பொழுது சிலருக்குத் தோன்றும் கேள்விகள்தான்.

ஆமாம், சித்தர்கள் என்பவர்கள் யார்? சித்தத்தை அடக்கியவர்கள் மட்டும் சித்தர்கள் இல்லை.

இந்த உலக இயக்கத்தை, பிரபஞ்சத்தை, இறை ஆற்றலை, உயிர் தத்துவத்தை, பிரபஞ்ச ரகசியத்தை என அனைத்தையும் ஆராய்ந்து அறிந்தவர்களே சித்தர்கள்.

சித்தர்கள் "சித்தர்" என்ற சொல்லுக்கு *சித்தி பெற்றவர்* என்பது பொருள். இயமம், நியமம், ஆதனம், பிராணாயாமம், பிரத்தியாகாரம், தாரணை, தியானம், சமாதி முதலிய எட்டு வகையான யோகாங்கம் முலம் எண் பெருஞ் சித்திகளை பெற்றவர்கள் சித்தர்கள் ஆவார்.

சுருக்கமாகச் சொன்னால், இயற்கையோடு இயற்கையாக வாழ்ந்து, இயற்கையை முற்றிலும் அறிந்தவர்களே சித்தர்கள்.

மனிதன் முயன்றால், சித்தர் வழி நடந்தால் அவனும் சித்தனாகலாம் என்பதே உண்மை.

ஏனெனில், சித்தர்களும் மனிதனாகத் தோன்றி இவ்வுலகில் வாழ்ந்தவர்களே. ஆனால், இக்கலிகாலத்தில், அது மிகக் கடினமான ஒன்றாகும்.

அந்த சித்தர்களை குருவாக ஏற்று அவர் வழி நடப்பவர்களுக்குக்கூட அது ஓரளவு மட்டுமே சாத்தியம்.

சித்தராவதற்கு முதற்படி தன்னையும், இந்த உலகையும், இயற்கையையும் பற்றி முழுமையாக அறிந்துகொள்வதாகும். இதைத் தான் திருமூலரும்...

"தன்னை அறியத் தனக்கொரு கேடில்லை;

தன்னை அறியாமல் தானே கெடுகின்றான்;

தன்னை அறியும் அறிவை அறிந்தபின்

தன்னையே அர்ச்சிக்கத் தானி ருந்தானே! “

என்கிறார். இது முழுமையாக உணர்ந்து கொள்ள வேண்டியதாகும்.

அகத்தியரும்,

“மனமது செம்மையானால் மந்திரஞ் செபிக்க வேண்டா;

மனமது செம்மையானால் மந்திரஞ் செம்மையாமே!”

என்கிறார்.

முதலில் தன் மனதை அறிந்து, பின் தன்னை அறிந்து, பின் இறையை அறிந்து இறுதியில் சித்த நிலைக்கு உயரலாம் என்பது தெளிவு.

மிகக் கடினமான இந்த முறையைப் பின்பற்ற முடியாத நிலையில் வாழ்பவர்கள் என்ன செய்வது?

வாழ்வில் ஏற்படும் துன்பங்களிலிருந்தும், துயரங்களிலிருந்தும் நம்மை எவ்வாறு காத்துக்கொள்வது? யார் உதவுவார்கள்?

ஏனெனில், அவரவர் செய்த ஊழ்வினையை அவரவர்களே அனுபவிக்க வேண்டும் என்பது விதி.

மனிதனின் கர்மவினை பலம் அதிகமாக இருக்குமானால், அவன் அவற்றை அனுபவித்தே ஆக வேண்டும் என்ற நிலைப்பாடு இருக்குமானால் அவ் வகைத் துன்பங்களிலிருந்து தப்பிப்பது எப்படி? யார் உதவி செய்வார்கள்?

இது மாதிரி நேரத்தில் மனிதனுக்கு உதவி செய்வது சித்த புருஷர்கள் மட்டுமே!

சித்தர்களுக்கு மனிதனிடம் எதிர்பார்ப்பு என்று எதுவுமே இல்லை. அவர்கள் வலியுறுத்துவது உண்மை, நேர்மை, கருணை, அன்பு, தூய்மையான வாழ்க்கை மட்டுமே.

மற்றவர்களுக்கு உதவும் நல்ல எண்ணம், நல்ல செயல், நல்ல சிந்தனையோடு செயல்படுபவர்களுக்கு சித்தரின் அருள் நிச்சயம் கிடைக்கும்.

வெறும் 18 பேர் மட்டுமல்ல; பல்லாயிரக்கணக்கான சித்தர்கள் உலகில் அருள்பாலித்துக் கொண்டிருக்கின்றனர்.

அவர்களை வெறும் தமிழர்கள், இந்துக்கள் என்ற குறுகிய வட்டத்துக்குள் அடைக்க நாம் முயலக் கூடாது.

நாடு, நகரம், மொழி, இனம் என அனைத்தையும் கடந்து தூய அற வாழ்வு வாழ்ந்தவர்கள், இன்னமும் சூட்சுமமாக வாழ்ந்து கொண்டிருப்பவர்கள் சித்தர்கள்.

அவர்கள் நம்முடைய தகுதிக் கேற்ப அவர்கள் உதவத் தயாராகக் காத்துக் கொண்டிருக்கிறார்கள். அவர்களின் அருள் கிடைக்க நாம் செய்ய வேண்டியது தூய்மை யான வாழ்வு வாழ வேண்டியது மட்டுமே.

அவர்களின் கடைக்கண் பார்வைபட்டால், திருக்கரத்தால் ஆசிர்வதித்தால், மனிதனிடமிருந்து ஏதேனும் பொருளை வாங்கிக் கொண்டால், மனிதனின் கர்மவினையை அவர்கள் ஏற்றுக் கொண்டு, மாற்றுகிறார்கள் என்பது பொருள்.

அதன் பின் அம்மனிதனின் வாழ்க்கையே தலைகீழாக மாறிவிடும்.

ஆனால் ஒன்று. அத்தகைய சித்தர்களின் அருளைப் பெற மனிதனுக்கு முதலில் வேண்டியது நல்ல தகுதி. தகுதியற்றோருக்கும், நல்லெண்ணம் இல்லாதவர்களுக்கும் சித்தர்கள் உதவ மாட்டார்கள்.

உண்மையாய், நேர்மையாய், சுயநலமின்றி வாழ்ந்து, உலகின் உயர்வுக்கும், நலனுக்குமே எப்போதும் சிந்திப்பவர்களுக்கு சித்தர்களின் அருள் தரிசனம் கிட்டும். ஆனால் அதற்கான கொடுப்பினை, நல்வினை நமக்கு இருக்க வேண்டும்.

சித்தர்கள் தங்கள் ஆராய்ச்சிமூலம் ஸர்வநோய்களுக்கும் மருந்து கண்டுபிடித்துள்ளனர். நமக்கு தெரியாத இனிவரப்போகும் வியாதிகளுக்கும் எளிமையான மருந்தைக்கூறியிருக்கின்றனர்.

மேலும் இவர்களின் அற்புதமான கண்டுபிடிப்புகளில் கண்ணிமைக்கும் நேரத்திற்குள் வேறுகிரகங்களுக்கு சென்றுவரும் மிகச்சிறிய விமானமாம்.

இந்த விமானத்தைக்கொண்டு ஒருமணிநேரத்திற்க்குள் அடுத்த பிரபஞ்சத்திற்க்கு சென்றுவரலாம்.

இதற்கடுத்து இவர்களின் மற்றொரு கண்டுபிடிப்பு உலோகமாற்று,அதாவது ஒரு உலோகத்தின் மூலகூறுகளை இரசாயனத்தைக்கொண்டு மாறுதலுக்கு உட்படுத்தி அதை மற்றொரு உலோகமாக மாற்றுவதாகும்.

இதன்மூலம் இரும்பை தாமிரமாகவும்,ஈயமாகவும், தங்கமாகவும்,மாற்றும் முறையை கூறியிருக்கின்றனர்.

இதோடுமட்டுமல்லாமல் மரத்தின் இலைச்சாருகளிகிருந்து தங்கம் ,வெள்ளி, ஈயம், செம்பு, போன்ற உலோகங்களை பிரித்தெடுக்கும் முறையையும் கூறியிருக்கின்றனர்.

இது மற்றுமின்றி இறந்தவர்களை உயிரூட்டும் மூலிகைகள்,வெட்டுண்ட உறுப்புக்களை பழுதில்லாமல் அதேயிடத்தில்முன்போன்றே பொருத்தும் மூலிகைகள், யார்கண்களுக்கும் தெரியாமல் மறைக்கச் செய்யும் மூலிகைகள்,உருவத்தை மாற்றும் மூலிகைகள்,

தாம்பத்யத்தில் பல நாட்கள் பலபெண்களுடன் விந்தை வெளிப்படுத்தாமல் இன்பமாக உடலுறவில் ஈடுபடக்கூடிய மூலிகைகள், வசியமூலிகைகள்,

பணக்காரணாக யோகம் தரும் மூலிகைகள், பேய் பில்லி துஷ்ட சக்திகளை விறட்டும் மூலிகைகள், மனோவியாதிகளை போக்கும் மூலிகைகள்,

பூமியில் புதையுண்ட பொருட்களைக் காட்டும் மூலிகைகள் போன்ற கோடிகணக்கான கண்டுபிடிப்புக்களை தங்கள் ஆறாய்ச்சிமூலம் சித்தர்கள் வெளிப்படுத்தியுள்ளனர்.

108 சித்தர்களும் இவர்கள் உறைந்த இடங்களும்.

1. திருமூலர் - சிதம்பரம்.
2. போகர் - பழனி என்கிற ஆவினன்குடி.
3. கருவூர்சித்தர் – கருவூர், திருகாளத்தி, ஆணிலையப்பர் கோவில்.
4. புலிப்பாணி - பழனி அருகில் வைகாவூர்.
5. கொங்கணர் - திருப்பதி, திருமலை
6. மச்சமுனி - திருப்பரங்குன்றம், திருவானைக்கால்
7. வல்லப சித்தர் என்னும் சுந்தரானந்தர் - மதுரை.
8. சட்டைமுனி சித்தர் – திருவரங்கம்.
9. அகத்தியர் – திருவனந்தபுரம், கும்பகோணத்திலுள்ள கும்பேஸ்வரர் கோவில்.
10. தேரையர் - தோரணமலை (மலையாள நாடு)
11. கோரக்கர் – பேரூர்.
12. பாம்பாட்டி சித்தர் - மருதமலை, துவாரகை, விருத்தாசலம்.
13. சிவவாக்கியர் - கும்பகோணம்.
14. உரோமரிசி - திருக்கயிலை
15. காகபுசுண்டர் - திருச்சி, உறையூர்.
16. இடைக்காட்டுச் சித்தர் - திருவண்ணாமலை
17. குதம்பைச் சித்தர் - மயிலாடுதுறை
18. பதஞ்சலி சித்தர் - சிதம்பரம், அழகர் கோவில், இராமேஸ்வரம்.
19. புலத்தியர் - பாபநாசம், திருஆலவுடையார் கோவில்.
20. திருமூலம் நோக்க சித்தர் - மேலை சிதம்பரம்.
21. அழகண்ணி சித்தர் - நாகப்பட்டினம்.
22. நாரதர் - திருவிடைமருதூர், கருவை நல்லூர்.
23. இராமதேவ சித்தர் - அழகர் மலை
24. மார்க்கண்டேயர் - கருவை நல்லூர்.

25. புண்ணாக்கீசர் - நண்ணாசேர்.
26. காசிபர் - ருத்ரகிரி
27. வரதர் - தென்மலை
28. கன்னிச் சித்தர் - பெருங்காவூர்.
29. தன்வந்தரி – வைத்தீஸ்வரன் கோவில்
30. நந்தி சித்தர் - காசி, திருவாவடுதுறை, காளங்கி.
31. காடுவெளி சித்தர் - திருக்காஞ்சிபுரம்.
32. விசுவாமித்திரர் - காசி, திருவாவடுதுறை, காளங்கி.
33. கௌதமர் - திருவருணை, திருவிடைமருதூர்.
34. கமல முனி - ஆரூர்
35. சந்திரானந்தர் - திருவாஞ்சியம்.
36. சுந்தரர் - வாரிட்சம், திருவாரூர்.
37. காளங்கி நாதர் - திருக்கடவூர், திருப்பணந்தாள்.
38. வான்மீகி - எட்டிக்குடி, திருவையாறு.
39. அகப்பேய் சித்தர் - திருவையாறு, எட்டிக்குடி.
40. பட்டினத்தார் - திருவொற்றியூர்.
41. வள்ளலார் - வடலூர்.
42. சென்னிமலை சித்தர் - கேரளத்தில் உள்ள நாங்குனாசேரி.
43. சதாசிவப் பிரம்மேந்திரர் - நெரூர்.
44. ராமகிருஷ்ணர், சாரதாதேவியார் - பேலூர் மடம்
45. ராகவேந்திரர் - மந்திராலயம்.
46. ரமண மகரிஷி - திருவண்ணாமலை, மாத்ருபூதேஸ்வரர் ஆலயம்.
47. குமரகுருபரர் - காசி.
48. நடன கோபால நாயகி சுவாமிகள் - காதக்கிணறு.
49. ஞானானந்த சுவாமிகள் - அனைத்து தபோவனங்கள்.
50. ஷீரடி சாயிபாபா - ஷீரடி.
51. சேக்கிழார் பெருமான் - மதுரை மீனாட்சி அம்மன் கோவிலில் சுவாமி சன்னதிக்கு பின்புறம்.
52. ராமானுஜர் - ஸ்ரீரங்கம்.
53. பரமஹம்ச யோகானந்தர் - கலிபோர்னியா.
54. யுக்தேஸ்வரர் - பூரி.
55. ஜட்ஜ் சுவாமிகள் - புதுக்கோட்டை
56. ஆதி பராசக்தி திருகோவிலில் 21 சித்தர்களின் ஜீவ சமாதிகள் உள்ளன.

57. கண்ணப்ப நாயனார் - காளஹஸ்தி.
58. சிவப்பிரகாச அடிகள் - திருப்பழையாறை வடதளி.
59. குரு பாபா ராம்தேவ் - போகரனிலிருந்து 13 கி.மி.
60. ராணி சென்னம்மாள் - பிதானூர், கொப்புலிமடம்.
61. பூஜ்ய ஸ்ரீ சித்த நரஹரி குருஜி - மதுரை மாரியம்மன் தெப்பக்குளம் அருகில் சித்தாசிரமம்.
62. குழந்தையானந்த சுவாமிகள் - மதுரை காளவாசல்.
63. முத்து வடுகநாதர் - சிங்கம் புணரி.
64. இராமதேவர் - நாகப்பட்டிணம்.
65. அருணகிரிநாதர் - திருவண்ணாமலை.
66. பாடக்சேரி தவத்திரு இராமலிங்க சுவாமிகள் – தஞ்சை புன்னைநல்லூர் மாரியம்மன் திருக்கோவில்.
67. மௌன சாமி சித்தர் - தென்காசியிலிருந்து செங்கோட்டை செல்லும் வழியில் உள்ளது.
68. சிறுதொண்டை நாயனார் - திருச்செட்டாங்குடி.
69. ஒடுக்கத்தூர் சுவாமிகள் - பெங்களூரில் அல்சூர் ஏரிக்கரையில் உள்ளது.
70. வல்லநாட்டு மகாசித்தர் - வல்லநாடு.
71. சுப்பிரமணிய சித்தர் - ரெட்டியப்பட்டி.
72. சிவஞான பாலசித்தர் - மயிலாடுதுறை முருகன் சந்நிதி.
73. கம்பர் - நாட்டரசன் கோட்டை.
74. நாகலிங்க சுவாமிகள் - புதுவை அம்பலத்தாடையார் மடம்.
75. அழகர் சுவாமிகள் - தென்னம்பாக்கம்.
76. சிவஞான பாலைய சுவாமிகள் - புதுவைக்கு வடக்கே 6 மைல் தொலைவில் உள்ளது.
77. சித்தானந்த சுவாமிகள் - புதுவைக்கு அருகிலுள்ள கருவடிக்குப்பம்.
78. சக்திவேல் பரமானந்த குரு - புதுவையிலுள்ள முதலியார் பேட்டை.
79. ஸ்ரீராம் பரதேசி சுவாமிகள் - வில்லியனூர் செல்லும் பாதையில் வலப்புறம் அமைந்து உள்ளது.
80. அக்கா சுவாமிகள் - புதுவையில் உள்ள குதிரைக்களம் அருகே.
81. மகான் படே சுவாமிகள் - சின்னபாபு சமுத்திரம்.
82. கம்பளி ஞானதேசிக சுவாமிகள் - புதுவை அருகில் ருத்திர பூமிக்கு சமீபமாக அமைந்துள்ளது.

83. பகவந்த சுவாமிகள் - புதுப்பாளையத்தில் கெடில நதிக்கரையில்.
84. கதிர்வேல் சுவாமிகள் – ஸ்ரீலங்கா, புதுவை அருகில் சித்தன் குடியிலும் சமாதி உண்டு.
85. சாந்த நந்த சுவாமிகள் - ஸ்ரீ சாரதா சிவகங்கை பீடத்திற்கு அருகில் உள்ளது.
86. தயானந்த சுவாமிகள் - புதுப்பாளையத்தில் கெடில நதிக்கரையில்.
87. தஷிணாமூர்த்தி சுவாமிகள் - பாண்டிசேரியடுத்த பள்ளித் தென்னல்.
88. ஞானகுரு குள்ளச்சாமிகள் - புதுவை.
89. வேதாந்த சுவாமிகள் - புதுவை, திருமுத்துகுமார் சுவாமிகள் தோட்டத்தில் உள்ளது.
90. லஷ்மண சுவாமிகள் - புதுவையிலுள்ள புதுப்பட்டி.
91. மண்ணுருட்டி சுவாமிகள் - புதுவையிலுள்ள சுதேசி காட்டன் மில் எதிரில்.
92. சுப்பிரமணிய அபிநய சச்சிதானந்த பாரதி சுவாமிகள் - பாண்டிசேரியிலுள்ள எல்லப் பிள்ளை.
93. யோகி ராம் சுரத்குமார் (விசிறி சுவாமிகள்) - திருவண்ணாமலை.
94. கோட்டூர் சுவாமிகள் - சாத்தூர் அருகிலுள்ள கோட்டூர்.
95. தகப்பன் மகன் சமாதி - கிரிவலம் வந்த நல்லூர் அருகே பனையூர்.
96. நாராயண சாமி அய்யா சமாதி - நாகர்கோவில்.
97. போதேந்திர சுவாமிகள் - தஞ்சை மாவட்டத்திலுள்ள மருதநல்லூர்.
98. அவதூர ரோக நிவர்தீஸ்வரர் சுவாமிகள் - சென்னை பூந்தமல்லி.
99. வன்மீக நாதர் - எட்டிக்குடி.
100. தம்பிக்கலையான் சித்தர் - சென்னை திருவான்மியூர் மருந்தீஸ்வரர் திருக்கோவிலில் உள்ள 108 சிவலிங்கங்களில் இரண்டாவதாக உள்ள லிங்கத்தில் ஐக்கியம் ஆகியுள்ளார்.
101. மெய்வரத் தம்பிரான் சுவாமிகள் - திருச்சி, ஜெயங்கொண்ட சோழபுரத்திலிருந்து 25 கி.மீ. தொலைவில் உள்ளது.
102. குகை நாச்சியார் மகான் - திருவண்ணாமலை.
103. வாலைகுருசாமி - சிதம்பரத்திலுள்ள கொம்மடிக் கோட்டை.

104. பாம்பன் சுவாமிகள் - திருவான்மியூர்.
105. குமாரசாமி சித்தர் சுவாமிகள் - கோயமுத்தூரிலுள்ள பூராண்டான் பாளையம்.
106. பெரியாழ்வார் சுவாமிகள் - அழகர் கோவில் (மதுரை)
107. மாயம்மா ஜீவசமாதி - கன்னியாகுமரி.
108. பரமாச்சாரியார் ஜீவசமாதி - காஞ்சிபுரம்.

உலகை உய்விக்க வந்தவர்களே சித்தர்கள். சித்தர்கள் வழிநின்று வாழ்வோமாகா.

2. வேதாத்திரி மகரிசி யார்?

வேதாத்திரி என்ற ஓர் உயர்ந்த மனிதர்., சிந்தனையின் செறிவாலும், சிறந்த ஒழுக்கத்தாலும், தவம் மிகுந்த தன்னலமற்ற வாழ்க்கையாலும் தரணிபோற்றும் மகானகப் பரிணமிக்கிறார். பாறையில் விழுந்த சந்தன மரமே இந்த மகான்.

திருமூலர், *திருவள்ளுவர்*, தாயுமானவர், இராமலிங்கப் பெருமாள் இவர்தம் மரபு நெறி நின்று ஆன்மீகத்தை அடிப்படையாகக் கொண்ட சமுதாயப் பணி ஆற்றியவர் அருட்தந்தை வேதாத்திரி மகரிஷி அவர்கள்.

சென்னைக்கு அருகில் உள்ள கூடுவாஞ்சேரி கிராமத்தில் 1911-ஆம் ஆண்டு எளிய நெசவாளிக் குடும்பத்தில் பிறந்தார்.

சிறுவயதிலிருந்தே அவருக்குக் கடவுள் யார்? உயிர் என்றால் என்ன? வறுமை எதனால் ஏற்படுகிறது? என்ற கேள்விகளுக்கு விடைகாண வேண்டுமென்ற வேட்கை எழுந்தது.

பல ஆண்டுகள் மேற்கொண்ட அயரா ஆராய்ச்சியின் வாயிலாக இக்கேள்விகளுக்கான விடையைத் தானும் உணர்ந்து உலகிற்கும் உணர்த்தி வருகிறார்.

சுய முயற்சியின் மூலமே வாழ்க்கையில் முன்னேறிய அவர் தியான முறைகளில் சிறந்ததான எளிய முறைக் குண்டலினி யோகம்,

அவயங்களை வருத்தாத உடற்பயிற்சி, தளராத தற்சோதனை, உயிர்ச்சக்தியைப் பாதுகாப்பதன் மூலம் வயோதிகத்தைத் தள்ளிப்போடும் சித்தர்கள் கண்ட நெறியான காயகற்ப யோகம் –

இவை இணைந்த வாழ்க்கை நெறியைப் போதித்து, மனிதகுலம் உய்ய அருட் தொண்டாற்றியவது.

மேலும் காந்தத் தத்துவத்தின் மூலம் தெய்வநிலை, உயிர்நிலை, அறிவுநிலை இவற்றைப் பொது அறிவு படைத்த சாதாரண மக்களும் புரிந்து கொள்ளும் வண்ணம் விளக்கியவர்.

மனிதகுல நலனுக்குக் தேவையான கருத்துகளை எளிய நடையில் தமிழிலும் ஆங்கிலத்திலும் பலநூல்களை எழுதி விளக்கியிரும் மகரிஷி அவர்கள் சுமார் இரண்டாயிரத்துக்கும் அதிகமான கவிகளையும் இயற்றியுள்ளார்.

மனிதகுலம் அமைதியாக வாழ ஏற்ற கருத்துகளையும் சாதனை முறைகளையும் உலகமெங்கும் பரப்பிட 1958-ஆம் ஆண்டில் வேதாத்திரி மகரிஷி அவர்கள் நிறுவிய உலக சமுதாய சேவா சங்கம் இன்று இந்தியாவியிலும், மலேசியா, ஜப்பான், தென்கொரியா, அமெரிக்கா, போன்ற நாடுகளிலும் பல கிளைகளைக் கொண்டு இயங்கி வருகிறது.

இல்லறத்தில் இருந்தவாறே துறவற மனப்பான்மையை மேற்கொண்ட மகரஷி அவர்கள் உலக சமாதானத்திற்காக அயராத சேவை புரிந்தார். உலகை 22 முறை சுற்றி வந்து ஆன்மீகப் பணியாற்றினார்.

தத்துவத்திலே அவ்வைதத்தையும் யோகத்திலே ராஜயோகத்தையும் பாமர மக்களுக்கும் உணர்ந்து கொள்ளும் வகையிலே அவர் கற்பிக்கும் உளப்பயிற்சி அமைந்திருக்கின்ற காரணத்தால், 'பாமர மக்களின் தத்துவ ஞானி' (Common Man's Philosopher) என்று போற்றப்படுகிறார்.

மகரிஷி அவர்கள் வெளிரயிட்டுள்ள எந்த ஒரு கருத்தும் பகுத்தறிவிற்கோ விஞ்ஞானத்திற்தோ புறம்பானதல்ல என்பது குறிப்பிடத்தக்கது.

மானுடம் தழைக்க "வாழ்க வையகம், வாழ்க வளமுடன்' என்ற உலகளாவிய மந்திரத்தை நல்கியவர். தனது 95 வயதில் புதவுடலை உதிர்த்து அமரரானார்.

ஆழியாறில் உறங்கிக் கொண்டிருக்கும் அம்மாகானின் மணி மண்டபத்திற்கு இன்றும் ஆயிரக்கணக்கானவர்கள் நாள்தோறும் தரிசித்து இன்புற்று வருகின்றனர்.

3.வேதாத்திரி மகரிசி பார்வையில் சித்தர்கள்.

நுண் பொருளாகிய விண்ணில் உண்மைப் பொருளாக (உள் நிறைந்த பொருள் உண்மை) அதன் கூட்டு இயக்க நிலையாகிய ஆகாசம், காற்று, நெருப்பு, நீர், நிலம் எனம் பஞ்ச புதங்களில் அதற்கு ஏற்ற தன்மைகளாகவும்,

இயக்க ஒழுங்காகவும், உயிரினங்களில் உணர்ச்சிகளாகவும், ஆறாம் நிலை அறிவு சிறப்புற்ற மனிதனிடத்தில் அறிவின் நிலையையே அறிந்து கொள்ளத்தக்க பேரறியவாகவும்,

ஒன்றில் ஒன்றாக, ஒன்றோடு ஒன்றாக பேரியக்க மண்டலம் முழுவதும் ஒரே இணைப்பாகவும், எல்லாத் தோற்றங்களையும் முறையாக இயங்கவிட்டுக் கொண்டு அனைத்தையும் ஒன்றிணைத்து,

அப்பாலாக சுத்த வெளியாக சிவமாக அமர்ந்து அனைத்தையும் தாங்கிக் கொண்டிருக்கும் அருட்பேராற்றறலே தனக்குள் அறிவாக விளங்குகிறது என்ற பேருண்மை உணர்ந்த

அருளாளர்கள் சித்தர்கள் - சிவமே அறிவாக விளங்கும் மறை பொருளுணர்ந்தவர்கள்.

அறிவையே தெய்மென மதித்துப் போற்றும் அக வணக்கம் கண்டவர்கள்.

வினா: சித்தர் பாடல்களுக்கு தெளிவான, எளிமையான விளக்கம் எழுத வேண்டுகிறேன்.

வேதாத்திரி மகரிஷியின் விடை:

யான் பேசி வரும், கற்பிக்கும், எழுதும் தத்துவங்கள், விளக்கங்கள் அனைத்துமே சித்தர் பாடல்களுக்கு விளக்கம்தான்.

சித்தர்களது பாடல் புரியாத புதிர் போன்ற வார்த்தைகளால் இருப்பதால் அதன் பொருளை அறிய ஆவல் கொள்கிறீர்கள்.

சித்தர் பாடல்களின் தத்துவதை எளிமையாக நான் எழுதுவதால் இவ்வளவுதானே என்று நினைக்க தோன்றுகிறது.

சித்தர்கள் என்று ஏன் அழைக்கிறார்கள் - மகரிசி.

“சத்து” என்பது மெய்ப்பொருளளைக் குறிக்கும். “சித்து” என்பது உயிரைக் குறிக்கும். “ஆனந்தம்” என்பது மனம் பல்வேறு நிலைகளில் இயங்கிக் கொண்டிருப்பதைக் குறிக்கும்.

ஆக, “மெய்ப்பொருள் - உயிர் - மனம்” இந்த இதில் “சித்து” என்ற உயிரை முழுவதும் உணர்ந்தவர்கள் சித்தர்கள். உயிரின் இருப்பை, தன்மையை, இயக்கத்தை உணர்ந்ததோடு அதை நடத்தும் வல்லமையுடையவர்கள் மூன்று நிலைகளையும் “சத்து - சித்து - ஆனந்தம் “ என்றும், அவற்றைச் சேர்த்து “சச்திதானந்தம என்றும் வழங்குகிறோம்.

என்பதுதான் விளக்கம்.

சித்தர்கள் துறவிகளா அல்லது இல்லறவாசிகளா? - மகரிசி.

இல்லறம், துறவறம் என்பதன் பொருள் பற்றி முதலில் சரியாக உணர்ந்து கொள்ள வேண்டும்.

இல்லம் கொண்டு பொருளீட்டி, காத்து. தானும் துய்த்து, பிறருக்கும் கொடுப்பது இல்லறம். இல்லறம் என்றால் பொருளை அடிப்படையாகக் கொண்டது.

பொருளீட்டிக் காக்க வேண்டுமென்றால் அதற்கு ஒரு இடம் வேண்டும். “திருமணம் செய்துகொண்டு இருவரும் வாழ்ந்தல்தான் இல்லறம்” என்பார்கள்.

அது தவறான கருத்து. பொருளீட்டிக் காத்து அளவுமுறையோடு துய்த்து, அறம் செய்தல் இல்லறமாகும்.

பொருளீட்டும் தொழிலை விட்டு அகத் தவத்தின் சாதனையால் பிரபஞ்ச ரகசியம் அறிந்து, உடல், உயிர், மனம், அறிவு, சீவகாந்தம் உணர்ந்து, அறநிலை தெளிந்து, அறிவுத்துறையில் முழுமைபெற்று, நேர்மை தவறாது ஒழுக்கவழி வாழும் அறிவை மக்களுக்குப் புகட்டி, அதன் மூலமாகத் தொண்டு செய்து வாழக்கூடியவர்கள் “துறவறம்” என்ற நிலையை உடையவர்கள்.

துறவறத்தான் என்றால் பொருளீட்டிக் காப்பது தவிர்த்து, அறிவுத்துறையிலுயர்ந்து தொண்டாற்றிக் கொண்டு இருப்பவன்.

சித்தர்கள் இல்லறம், துறவறம் இரண்டிலுமே இருந்தார்கள். தங்களுக்கு வேண்டிய பொருட்களை அவர்களே ஈட்டி, பிறருக்கும் உதவினார்கள்.

அதே போன்று அறிவுத் துறையிலும் மேனமையடைந்து எல்லோருக்கும் அறிவுத் தொண்டாற்றினார்கள்.

அன்றும், இன்றும், என்றும் அவர்கள் தொண்டு எங்கும் ஏறபுடையதாயிருக்கின்றது. எனவே சித்தர்கள் இல்லறம், துறவறம் இரண்டுமிணைந்த நல்லற ஞானிகள் ஆவர்.

சித்தர்களின் நெறியே வேதாத்திரியம்.

தமிழ்நாட்டில் வாழ்ந்த சித்தர்கள் சுருங்கிய முறையில் கொண்டு வந்ததை நான் நீண்ட காலமாக ஆராய்ச்சி செய்து, மேலும் காலத்திற்கேற்ற வகையில் தேவையான மாற்றம் செய்து, பாதுகாப்பு சேர்த்து வெண்ணெயைப் போல் சத்தாக (Essence) திரட்டிக் கொடுத்துள்ளேன்.

இனி எப்பொது வேண்டும் என்றாலும் நல்ல முறையிலே பயன்படுத்திக் கொள்ளலாம்.

உங்கள் வாழ்வை வளமாக்கிக்கொண்டு பிறர்க்கும் தொண்டு செய்து மன நிறைவும் பெருமையும் பெறலாம்.

தமிழ்நாட்டில்தான் சித்தர்கள் அதிகம் வாழ்ந்தார்களா? மற்ற நாடுகளில் சித்தர்கள் இல்லையா? - மகரிசி பதில்.

சித்தம் என்றால் உயிர். அந்த உயிரை உணர்வதற்கு அகத்தவம் வேண்டும். முறையாக பயில்வதற்குக் குருவின் வழிகாட்டுதலோடு, சூழ்நிலையும் அமைய வேண்டும்.

தட்ப பெப்பநிலையும் ஆண்டு முழுவதும் சீராகவும், உடலுக்கு ஏற்றதாகவும் இருக்க வேண்டும். கடும் குளிரிலும், கடும் வெப்பத்திலும், உயிர்ச்செலவு அதிகமாகிவிடும். அகத்தவம் பயில முடியாது.

உலகில் உள்ள மற்ற எல்லா நாடுகளையும் விட இந்திய நாட்டில், குறிப்பாகத் தமிழ்நாட்டில்தான் ஆண்டு முழுவதும் கடும் குளிரோ, கடும் வெப்பமோ இன்றி, சமமான தட்பவெப்பநிலை உள்ளது.

இந்தச் சூழ்நிலை இங்கு அமைந்ததால்தான் அகத்தவம் செய்வதற்கு மிக உன்னதமான இடமாக இருக்கின்றது.

அதன் காரணமாக மேல்நாட்டவர்கள் தமிழ்நாட்டிற்கு வந்து அகத்தவம் பயின்றார்கள்.

தமிழ்நாட்டில் "அகத்தியர்" என்ற ஒரு சித்தர் பெயர் கூறுகிறோம். அவர் "அகஸ்டஸ்" என்ற மேலை நாட்டவர். தமிழ் நாட்டில் அகத்தவம் பயின்று இங்கு வாழ்ந்து அகத்தியர் என்று பெயர் கொண்டார்.

அதே போன்று "டைகர்" என்ற ஆராய்ச்சியாளர் தமிழ்நாட்டிற்கு வந்து தங்கி, யோகம் பயின்று நிறைவடைந்தார். அவரைத்தான் நாம் "புலிபபாணிச்சித்தர்" என்கிறோம்.

"போகர்" என்ற பெயர் கொண்ட சித்தர் சீனாவிலிருந்து வந்தவர்.

இவ்வாறு பல நாட்டிலிருந்தும் இங்கு வந்து தவம் பயின்று, முழுமை பெற்று, இங்கிருந்த வாழ்க்கை நெறியுடன் இணைந்து வாழந்து, தமிழ்நாட்டுச் சித்தர்கள் வாயிலாகக் கற்றவற்றையெல்லாம் உலகிற்கு மேல்நாட்டு அறிஞர்கள் பரப்பியுள்ளார்கள்.

அவர்கள் கற்றுக் கொண்டு சென்றதெல்லாம் வாழ்க்கைப் பண்பாடாக மக்களிடம் பரவவில்லை.

ஒரு சில குறிப்பிட்ட பயிற்சி, பழக்கவழக்கம், இவை மட்டும்தான் ஆங்காங்கே உலகம் முழுவதும், இருக்கக் காண்கிறோம்.

உதாரணமாக நம் நாட்டுச்சித்தர்கள் "வர்மக்கலை" என்ற ஒரு கலை வைத்திருந்தார்கள்.

அவர்கள் வெளியிடத்திலும், காடுகளிலும் அமர்ந்து தவம் செய்யும்பொழுது, முரடர்கள் துன்பம் தர ஆரம்பித்ததார்கள்.

ஆயுதம் இல்லாது தங்களைக் காத்துக் கொள்வதற்கு ஒரு முறையான பயிற்சி அவசியம் என்பதை அறிந்து, இவர்கள் கண்டுபிடித்ததுதான் வர்மக்கலை.

நரம்பைச் சில இடங்களில் தட்டினால் போதும். ஆள் விழுந்து விடுவான். எந்த இடத்தில் எந்த நரமபிற்கு ஆற்றல் அதிகம் என்று தெரிந்து எதிரிகளிடமிருந்து தங்களைக் காத்துக் கொள்ளும் கலைக்கு "வர்மக்கலை" என்று பெயர்.

சித்தர்கள் கற்ற இந்த வித்தையை சீனா, ஜப்பான் போன்ற வெளிநாடுகளிலிருந்து வந்தவர்கள் கற்றுக்கொண்டு சென்றார்கள்.

அதே கலை இப்போது கராத்தே, ஜீடோ, தாய்ச்சி என்ற பெயர்களில் அவர்களிடமிருந்து நம் நாட்டிற்கு வந்துள்ளது.

வர்மக்கலையில் உடலை வலுவுடையதாக வைத்துக் கொள்ள உடற்பயிற்சுயும் சேர்ந்திருப்பதால் எல்லா நாடுகளிலும் பல பெயர்களில் பரவியுள்ளது.

சித்தர்களின் "பிராணயாமப் பயிற்சி" பல நாடுகளில் பல வித மூச்சுப் பயிற்சியாகப் பரவி இருப்பதை நாம் காண்கிறோம்.

இந்தப் பயிற்சியைச் செய்பவர்களையெல்லாம் சித்தர்கள் என்று சொல்லிவிட முடியாது.

உயிரை உணர்ந்து, அந்தக் கருத்த அடிப்படையாகக் கொண்டு. வாழ்வை நடத்தக்கூடிய ஒரு பண்பாடு உடையவர்களைத்தான் சித்தர்கள் என்கிறோம்.

அத்தகைய பண்பாடு உடையவர்கள் எந்த நாட்டில் இருந்தாலும் அவர்கள் சித்தர்களே.

சித்தர்கள் பாடல்களில் 51 அட்சரங்கள் உள்ளனவே - விளக்க வேண்டுகிறோம் சுவாமிஜி.

அட்சரம் என்றால் ஒலியைக் குறிக்கும் எழுத்து. அட்சரத்திற்கு அடிப்படை மௌனம். அதிலிருந்து “அ” என்று விரிந்தது முதல் அட்சரம்.

“அ” விலிரிருந்து இன்றைக்கு 31 அட்சரங்கள் தமிழில் உள்ளன. வடமொழியில் 47 அட்சரங்கள் இருக்கின்றன. அங்கும் மூன்று ஒலிக்ள குறைவு.

அதனால் அவர்கள் அராபியில் இருந்து அந்த ஒலியை எடுத்துக் கொண்டு அதுபோன்ற சில எழுத்துக்களைக் கண்டுபிடித்துச் சேர்த்துக் கொண்டுள்ளார்கள்.

அதையும் சேர்த்தால் 50 அட்சரங்கள் வந்துவிடும். இந்த 50 அட்சரங்களைக் கொண்டு எல்லா சப்தங்களையும் எழுதிவிடலாம்.

இந்த 50 ஒலிகளிலும்கூட, ஜீவன்களின் சப்தத்தை எழுத முடியாது. (உ.ம்.) பல்லி சப்தம் “த்ச”. யைன் மாடு ஓட்டுவது, குழந்தைகளை முத்தமிடும்போது வரும் சப்தம்.

இவையெல்லாம் காற்று வெளியிலிருந்து உள்ளே போகும் சப்தங்கள். அதனால் இவைகளை எழுத முடியாது.

உள்ளேயிருந்து வெளிவரும் சப்தங்களைத்தான் எழுத முடியும். இந்த 50 அட்சரங்களுடன் “ஓம்” என்ற மௌன ஒலியும் சேர்த்து 51 அட்சதரங்கள் ஆக்கியுள்ளார்கள்.

அய்யா! மகிழ்போகம் என்பது இல்லற வாழ்வைக் குறிக்கின்றதா? அல்லது சித்தர்களுக்கே ஏற்றதா?

போகம் என்றாலே இன்பத்தை அனுபவிப்பதுதான். மெய், வாய், கண். மூக்கு, செவி என்ற ஐந்து புலன்களினால் நாம் அழுத்தம், ஒலி, ஒளி, சவை, மணமாக - எந்தப் பொருளோடு தொடர்பு கொள்வதன் மூலம் - இன்பத்தை அனுபவித்தாலும், அந்த அனுபோகம் தான் போகம்.

போகம் என்பது இல்லறத்தார்க்கும் துறவறத்தார்க்கும் பொதுவான வாழ்க்கை மகிழ்ச்சி.

இல்லறம் என்பது இல்லம் கொண்ட பொருளீட்டி, காத்து. துய்த்து, பிறருக்கதவி வாழக்கூடிய நெறியாகும்.

துறவறம் என்பது பொருளீட்டுவதை மட்டும் நிறுத்த, அறிவுத் துறையில் முழுமை பெற்று, அந்த முழுமைப்பேற்றை மக்களுக்கு வழங்கி, அவர்களை நல்வழிப்படுத்துதல், தன்னைச் சமுதாய நலத்துக்கே அர்ப்பணம் செய்துகொண்டு விருப்பு, வெறுப்பின்றி. அறிவுத்துறையிலே தொண்டாற்றுதல் துறவறமமாகும்.

இத்துறையில் வாழ்வதாலேயே துய்த்தலை நிறுத்திவிட முடியுமா?

மகிழ்போகம் அனைவருக்குமே வேண்டும். துறவில் உள்ளவர்க்கும் உணவு வேண்டும். அவர்களும் உணவு சாப்பிடும்பொழுது, உடல் ஏற்றுக்கொள்ளும் முறையில் உணவினை இனிமையாகவே அமைத்துக் கொள்வார்கள்.

“எந்த சீவனுக்கும் உடலுக்கும் உயிருக்கும்

அந்த நேரத்தில் தேவையாய்ப் பொருத்தமாய்

வந்த அனுபோகம் இன்பமாம்”

என்ற வகையில் புலன்களைக் கொண்டு இன்பம்” அடையும் போகம் என்பது எல்லோருக்கும் பொதுதான்.

3. சித்தர் பாடல்களும் வேதாத்திரியமும்

அறவழிக் கோட்பாடே உலகிலுள்ள அனைத்துச் சமயங்களுக்கும் ஆதாரமாகவிருப்பது என்பது எல்லோராலும் ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒரு உண்மை.

அறநிலையின் வரையளவு காலத்திற்கும், கலாச்சாரத்திற்கும் ஒப்ப மாறுபடலாம்.

ஆனால் அடிப்படை மெய்ம்மை எல்லாச் சூழ்நிலையிலும் ஒன்றாகவே இருக்கும்.

கருத்தாழம் மிகுந்த சிந்தனையாளர்கள் அந்தந்தக் காலங்களில் தங்களுடைய ஆராய்ந்தறிந்த நேர்த்தியான எண்ணங்களாலும், சீரிய அறமுறைப் பண்புகளாலும் மக்களை நல்வழியைக் பின்பற்றி முன்னேறத் தூண்டுதல்செய்து வந்திருக்கின்றனர்.

யோகியரும், ஞானிகளுமான தமிழ்ச் சித்தர்களும் அத்தகைய அருந்திறன் படைத்த சிந்தனையாளர்களே.

தமது கூரிய ஆய்வறிவுச் சிந்தைகளாலும், சமயத்தில் புகுந்துள்ள படுமோசமான கொள்கைப் பிடிவாதங்களையும், மூட நம்பிக்கைகளையும் அடியோடு பறித்தெறிய இடைவிடாது கொண்ட முயற்சிகளாலும் தனிப்பட்டு விளங்குபவர் இந்த 'வித்தகச் சித்தர்கணம்'.

தமிழ் இலக்கிய வரலாற்றில் சித்தர்களின் காலம் என்பது சிக்கலான ஒரு விவாதக் கருத்தாகவே இருந்து வருகின்றது.

திருமந்திரத்தில் சித்தன் என்ற சொல் காணப்படுவதால், அதன் ஆசிரியரான திருமூலருக்கு, அதாவது திருமந்திரத்திற்கு கொடுக்கப்பட்டிருக்கின்ற மிகவும் பிந்திய காலமான கி.பி. பத்தாவது நூற்றாண்டுக்கு முன்னரே, அறிமுகமான சொல்லாக இருக்கவேண்டும் எனக் கொள்ளக் காரணமுண்டு.

ஆனால் பிற்காலச் சித்தர்களுடைய பாடல்களே இன்று நமக்குக் கிடைத்திருக்கின்றன.

பழைய நிகண்டுகள் எவையிலும் சித்தர் என்ற சொல் காணப்படாததால் நிகண்டு காலமான கி.பி. பதின்மூன்று அல்லது பதினான்காம் நூற்றாண்டாகும் காலகட்டத்திற்குப் பிறகே தமிழ்ச் சித்தர்கள் தோன்றியிருக்கவேண்டும் எனச் சில அறிஞர்கள் கருதுகின்றனர்.

பல ஆராய்ச்சியாளர்களின் மதிப்பீட்டின்படி சித்தர், சித்தர்ஞானம், சித்தமருத்துவம், முதலான சொல்வழக்குக்கள் கி.பி. பதினாறாம்

நூற்றாண்டிலோ, அதற்குப் பிறகோ தோன்றியிருக்கலாம் என்றே கருதப்படுகின்றது.

தமிழ்ச் சித்தர் கோட்பாட்டின் முக்கியமான அம்சம் யாதெனின் அது மரபு வழுவாத சைவ சித்தாந்த சமய வகுப்புடன் கொண்டுள்ள தொடர்பாகும்.

இரண்டு பிரிவுகளுடைய மூலக்கோட்பாடுகளையும் வரையறுப்பது ஒரே தத்துவ சித்தாந்தமேயாயினும், அடிப்படைப் போதனையை ஒன்றுக்கொன்று வேறுபட்ட கோணங்களில் செயற்படுத்துவதனால் காலம் செல்லச் செல்ல படிப்படியாக மாறுபட்ட வழிகளில் இரண்டு மரபுகளும் திசை திரும்பி விட்டன எனலாம்.

பக்தி இயக்கத்தைச் சார்ந்த சைவசமயக்குரவர்கள் துய்த்த ஆழ்ந்த இறையனுபவத்தின் உட்பொருளுக்குச் சமய இயற்படி விளக்கம் அளிப்பதே சைவசித்தாந்தத்தின் நோக்கமாகும்.

சிவபெருமானின் இயல்பைப் பற்றிய அவ்வடியார்களின் அகவுணர்வுகள் தென்னாட்டின் புனிதமண்ணில் பற்பல இடங்களில் அவர்களுக்கு மெய்யறிவால் உணருமாறு தோற்றமளித்த அவ்விறைவனின் கோலங்களைக் குறித்துள்ள துதிப்பாசுரங்களாகவும், புகழ்ப் பாடல்களாகவும் வெளிவந்தன.

சிவபெருமான் காட்சியளித்த தெய்விகமான புண்ணியத்தலங்களைப் போற்றிக் கொண்டாடும் வகையில் இந்தத் தோத்திரங்களையும் துதிப்பாமாலைகளையும் சுற்றி ஆலயவழிபாட்டுப் பண்பாடு தோன்றிற்று.

இத்தகைய ஆலய வழிபாட்டுப் பண்பாடு சிவாகமங்களில் வகுத்துரைக்கப்பட்ட விதிமுறைகளால் பேணி நிலைநிறுத்தப்படவும், தமிழின இந்துக்களின் மரபு, கலை, பாவனைகளிலெல்லாம் இந்த கோயில்சார்ந்த பண்பாடு ஆழமாக வேரூன்றவும் துவங்கிற்று.

ஒழுக்கங்கெட்ட நிலைமைகளையும், ஊறு விளைவிக்கக்கூடிய சமுதாய நடைமுறைகளையும் ஊக்குவிக்கின்ற காரணத்தினால்

ஆலயவழிபாட்டு மரபிலும், புரோகித வகுப்பின் அதிகார மேலுரிமைகளிலும் மக்கள் வெகுவாக நம்பிக்கை வைத்துச் சார்ந்திருப்பதைச் சித்தர்கள் ஏளனஞ்செய்தனர்.

ஆன்மாவின் விடுதலையைத் தடைசெய்யும் தளைகளென உருவ வழிபாட்டையும், சமயச் சடங்கு முறைகளையும், விண்ணப்பம்செய்து மன்றாடி இறையருள் வேண்டுதலையும் அவர்கள் வெளிப்படையாகவே கண்டனம் செய்தனர்.

உருவக்கற்பனைக்கும், உணர்வாற்றலுக்கும் அப்பாற்பட்ட, வரையறையிலடங்காத, கடைமுடிவான சிவபெருமானே தமிழ்ச்சித்தர்களுக்கு முழுமுதற்கடவுள்.

சக்தியான இறைவி மனித உடலில் நுண் நாடிகளில் விளங்கும் தெய்விக ஆற்றல் கொண்ட குண்டலினியே. குண்டலினியை யோக முறையில் இணக்கப்படுத்தித் திறமையாகக் கையாண்டு, அடக்கி இயக்குவதன் மூலம் சித்தத்தின் உணர்வுநிலையை ஒருமுகமாகச் செலுத்திக் கலப்பிலா இறையனுபவத்தில் ஒன்றச்செய்யலாம் என்ற ஆன்ம இயலே சித்தர்கள் கண்ட சமய ஒழுக்கமாகும்.

மரபு வழுவாத சமயக்கோட்பாட்டில் நிலைத்துநிற்கும் ஒரு சைவசித்தாந்தத் தொண்டன் சமயப் புரோகிதர்களின் சடங்கு வழிபாட்டுமுறை வாயிலாக, ஆலயத்தில் சிவபெருமானை வழிபட்டு மனநிறைவு பெறும்போது, சித்தன் தன்னுள்ளுறையும் குண்டலினியை இணக்குவித்து, அதன் ஆதரவுடன் ஆன்ம விழிப்புநிலையை எல்லையில்லாது பெருக்கித், தானே சிவமான நிலையை எட்டுகின்றான்.

தமிழ்ச்சித்தர்களின் கோட்பாட்டில் வழங்கும் இன்றியமையாத இத்தகைய கருத்துக்கள், ஆகமமரபு வழுவாத ஆசார சைவசமயத்திற்கு ஏற்கத்தகாத முரண் சமயக்கருத்துக்களாக விளங்கி வருகின்றன என்பதே உண்மை.

சைவசித்தாந்த மெய்நூல்களில் பத்தாவது திருமுறையாகச் சேர்க்கப்பட்டிருப்பினும் கூட திருமந்திரம் அக்காலம் வரை

நிலவியிருந்த தமிழ்ச் சித்தர் ஒழுக்கத்தின் தன்மையை முழுமையாக வரையறுத்துள்ளது.

சைவ சித்தாந்தச் சமயக் கோட்பாட்டைப் பின்பற்றும் மரபுவழுவா ஆதரவாளர்கட்குத் திருமந்திரத்தில் தந்திரசாத்திரங்களின் தனிச்சிறப்பாகவுள்ள விளங்காப்புதிரான குண்டலினியோகப் பயிற்சிகளையும், சக்தி வழிபாட்டையும் ஆய்கின்ற பல பகுதிகளையும் முழுமையாக ஏற்றுக்கொள்ளச் சிக்கலுள்ளது.

அதேவேளையில் தமிழ்ச்சித்தர்களோ, குண்டலினி சக்தியைத் தூண்டியெழுப்பும் உத்தியை விளக்கும் திருமந்திரத்தின் இப்பகுதிகளெல்லாம் மறைபொருளான சித்தர் சித்தாந்த போதனைத் தொகுப்புக்களை வடிவமைப்பதற்கு மிக இன்றியமையாதவையென மதிப்பிட்டுள்ளனர்.

சிவபெருமானின் மறையாற்றல் மிக்க மந்திரத்தைப் பயின்றுபழகுவதும் சித்தர்மரபின் மற்றொரு முக்கியமான அம்சமாகும்.

சிவனின் ஐந்தெழுத்து மந்திரம் உலகின் பற்றுப்பிணைப்புக்களிலிருந்து விடுதலை கைக்கொண்டு, இறைவனைப் பிரிந்திருக்கும் நிலையைக் களைய உதவும் ஆதாரமாகக் கருதப்படுகின்றது.

அஞ்செழுத்து மந்திரத்தை ஓதுதல் சாதாரணமான ஒரு மொழிக்குறியீட்டுத்தொகுதியை மெய்யாக உணரக்கூடிய, கலப்பற்ற, இறைமையின் சின்னமாக மாற்றியமைக்க விழையும் வழிமுறையாகச் சித்தர்கள் போற்றுகின்றனர்.

சித்தர்கள் புனைந்த கருத்துருவத்தின் சரியான பொருள் கண்டுணரமுடியாத தன்மையாலும், நேரடியான பகுத்தறிவிக்கு முரண்பட்டு, எளிதில் நிலைநாட்ட வியலாதவகையில் அவர்களுடைய தத்துவசிந்தனைகள் அமைந்திருப்பதாலும், சித்தர் இலக்கியத்தில் பெரும்பாலான அறிஞர்களும் உள்ளார்ந்த ஈடுபாடு எடுத்துக்கொள்ளாமல் மேலெழுந்தவாரியான ஆர்வம் மட்டுமே காட்டி வந்துள்ளனர்.

மொழிநடையின் கொச்சைத்தன்மை காரணமாக மரபு வழுவியதெனவும், போலியானதெனவும் சித்தருடைய படைப்புக்கள் சிலருடைய குற்றச்சாட்டையும் ஏற்றுள்ளன.

இந்தக் குற்றச்சாட்டுகளையெல்லாம் களைந்து சித்தர்பாடல்களை எளிமையாக அனைவரும் புரிந்து கொள்ளும் வகையில் அழகாக மெருகூட்டி காலத்திற்கேற்ப விளக்கம் தருகிறது வேதாத்திரியம்.

தமிழ்ச்சித்தர்களின் பெரும்பான்மையான படைப்புக்கள் பிற மொழிகளில் இனியும் மொழிபெயர்ப்புச் செய்யப்படாமலேயே இருக்கின்றன எனின் அது மிகையாகது.

அகநிலையைச் சார்ந்த மெய்யறிவு, யோகம், மருத்துவம், இரசவாதம், சோதிடம் முதலானவை தொடர்பான மிகப்பரந்த இலக்கியப் படைப்புக்களைத் தமிழ்ச்சித்தர்கள் விட்டுச்சென்றிருக்கின்றனர்.

அவர்கள் கையாண்ட மொழி, உரைநடை, சொல்வழக்கு, முதலானவை கொச்சைச்சொற்களாலும், சிலேடைகளாலும், பேச்சுவழக்கு சார்ந்த சொற்றொகுதிகளாலும் மிகுதியாகக் குறிக்கப்பட்டிருக்கின்றன.

படிப்பறிவில்லாத பாமரர்களும், நாட்டுப்புற மக்களும் புரிந்துகொள்ளும் வண்ணம் அவர்களது மொழிநடை எளிமையானது.

ஆகவே, சித்தர் பாடல்கள் மிகவும் பிந்திய காலத்தில் புனையப்பட்டவையாக இருக்கலாம் எனும் ஐயத்தை அது தோற்றுவிக்கிறது.

மேலும், இரகசியமான கோட்பாடுகளையும், அரிய போதனைத் தொகுப்புக்களையும் படித்து மேலெழுந்தவாறாகப் பொருள்கொண்டு மனநிறைவு பெற்றுக்கொள்ளட்டும் என சூக்கும சாத்திரங்களில் தீட்சைபெறாத மாந்தர்களைத் தவிர்ப்பதற்காகத் தமிழ்ச் சித்தர்களின் பல பாடல்களும் மறைமுகமான மொழிநடையிலேயே எழுதப் பட்டிருக்கின்றன.

தமிழ்ச்சித்தர்களின் பல பாடல்களிலும் கருத்துக்கள் சீரானமுறையில் கையாளப்படாமலும், பெரும்பாலானவையும் விவாதத்திற்குரியனவாகவும் காணப்படுகின்றன.

ஆயினும், ஒரு உண்மையான சித்தனின் முக்கியமான, உள்ளார்ந்த இயல்பு நட்பிணக்கம் வாய்ந்த உலகளாவிய சமுதாயத்தன்மை என்பதே.

பொதுநலப்பண்பில் குறிப்பிடத்தக்கவர்களாகவும், தம்மைச் சூழ்ந்திருப்பவர்களின் நல்வாழ்வில் மிகுந்த அக்கறை கொண்டவர்களாகவும் தமிழ்ச்சித்தர்கள் திகழ்ந்தனர் என்பது திண்ணம்.

தனக்கும் பிறருக்கும் இடையே முழுமையான சமநிலை என்பதே சித்தர் சித்தாந்தத்தின் மையமான தத்துவமாகும்.

தமிழ்ச்சித்த சித்தாந்தத்தின் சிறப்பான சமுதாய-நன்னெறி நியதி (socio-ethical code) என்பது, இறைவன் ஒருவனே எனும் பற்றுறுதி, சமத்துவம் முதலான மூலக்கோட்பாடுகளை அடிப்படையாகக் கொண்டதும், சமுதாயத்தில் ஆண் பெண் நிகர்வு, தொழில் தேர்வாற்றல், மனித உரிமை, கொல்லாமை, அன்புடைமை, பங்கிட்டு வாழ்தல், அமைதித்தன்மை, நடுநிலைமை முதலானவற்றிற்கு முக்கியத்துவம் கொடுப்பதும் ஆகும்.

‘ஒன்றே குலமும் ஒருவனே தேவனும்’ எனத் திருமூலர் பறைசாற்றுகின்றார்.

சித்தர்கள் வரலாற்றில் பத்தொன்பதாவது சித்தர் என்று வியக்கும் வண்ணம் சித்தர் பாடல்களின் களஞ்சியமாக திகழ்கிறது வேதாத்திரியம்.

சித்தர் கொள்கைகள், சமுதாயத் தொண்டு, இறை தத்துவம், உடல் நலம், பெண்ணீயம் போன்ற அனைத்தும் வேதாத்திரியத்தில் தற்காலத்திற்கு ஏற்ற வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது.

பொதுவாக சித்தர் பாடல்களை இரண்டு வகையாகக் கூறலாம். ஒன்று மிகவும் எளிமையாகப் பாமரரும் புரிந்து கொள்ளலாம்.

ஞாபகம் வைத்துக் கொள்ள ஏற்ற சந்தங்களில் அமைந்து இருக்கும். மற்றது சாதாரண மக்களுக்குப் புரியாத நடையில், மேலோட்டமாகப் பார்க்கும்போது ஒரு கருத்தும் அத்துறை வல்லுநர்களின் பார்வைக்கு வேறு கருத்தும் புலப்படுமாறு பரிபாசைப் பாடல்களாக எழுதப்பட்டிருக்கும்

“ஆன முதலில் அதிகம் செலவானால்

மானம் அழிந்து மதி கெட்டு போன திசை

எல்லார்க்கும் கள்வனாய் ஏழ்பிறப்பும் தீயோனாய்

நல்லார்க்கும் பொல்லானாம் நாடு.”

என்ற ஔவைப் பிராட்சியின் பாடலுக்குப் பொதுவாக ஆனமுதல் என்பதற்கு வியாபாரத்தின் முதலீடு என்று பொருள் கொள்வர்.

ஆழ்ந்து சிந்தித்தால் ஆன முதல் என்பது வித்து சக்தியைக் குறிக்கும். அதனைப் போற்றிப் பாதுகாப”பதன் மூலம் எவ்வளவோ நன்மைகளைப் பெறலாம் என வேதாத்திரி மகரிசி அவர்கள் எளிமையாகக் கூறுகிறார்கள்.

“வித்துஅது அளவழுத்தம் தூய்மை யெய்த,

வேண்டுஅள வில் உடலில் உயிரும் தங்கும்,

சத்தான உயிர்அளவு நிறைந்தி ருந்தால்,

சரீரத்தில் சீவகாந்த ஆற்றல் ஓங்கும்.

சித்துருவாய் ஒளிர்சீவ காந்தம் ஓங்க,

செல்கள்அணு அடுக்குடலில் சீர மைத்து,

ஒத்தியங்கம் நோய், முதுமை, மரணம் தள்ளி

ஒதுங்கிவிடும் விரும்புங்கால் சமாதி கிட்டும்.” – மகரிசி

இறைநிலையே அணுவாகவும், அண்டங்களாகவும், அனைத்து உயிர்களாகவும், நாமாகவும் உள்ளது என்பதை ஞானம் 9ல் அகத்தியர் பாடுகிறார்.

“பாரப்பா உலகுதனிற் பிறவி கோடி

படைப்புகளோ பலவிதமாய் கோடா கோடி

வீரப்பா அண்டத்திற் பிறவி கோடி

வெளியிலே ஆடுதப்பா உற்றுப் பாரு

ஆர்ப்பா அணுவெளியில் உள்ளந்தான்

ஆச்சரியமும் புழுக்கூடு அலைமோ தப்பா

கூறப்பா அண்டத்திற் பிண்ட மாகும்

குணவிய வாணா ணாக்கால் சத்ய மாமே”

என்கிறார். வேதாத்திரி மகரிசியோ,

“ஆதியென்னும் பரம்பொருள் மெய்யெழுச்சி பெற்று

அணுவென்ற உயிராகி அணுக்கள் கூடி ,

மோதி இணைந்து இயங்குகின்ற நிலைமைக்கு ஏற்ப

மூலகங்கள் பலவாகி அவையிணைந்து

பேதித்த அண்ட கோடிகளாய் மற்றும்

பிறப்பு இறப்பிடை உணர்தல் இயக்கமாகி

நீதி நெறி உணர் மாந்தாராகி வாழும்

நிலையுணர்ந்து தொண்டாற்றி இன்பம் காண்போம்.”

என அழைக்கிறார்.

கடவுளைப் பற்றி சித்தர்கள் பகுத்தறிவு நிலையில், ஒன்றே கடவுள் என்றார்கள். அதுவும் உனக்குள் உண்டு என்றார்கள்.

“எங்கள் தேவர் உங்கள் தேவர் என்றிரண்டு தேவரோ

அங்குமிங்கு ஆகிநின்ற ஆதிமூர்த்தி ஒன்றாலோ

இருப்பாரோ வங்கவாரம் சொன்னபேர்கள் வாய்புழுத்து மாள்வரே

இங்குமங்குமாய் இரண்டு தேவரும்

“

எனவும்,

“பண்டுநாள் பறித்தெறிந்த பண்மலர்க ளெத்தனை

பாழிலே செபித்துவிட்ட மந்திரங்க ளெத்தனை

மிண்டனாய்த் திரிந்தபோதிறைநத்த நீர்க ளெத்தனை

மீளவும் சிவாலங்கள் சூழவந்த தெத்தனை”

எனவும்,

ஊரில் உள்ள மனிதரெல்லாம் ஒருமனதாய்க் கூடியே

தேரிலே வடத்தைவிட்டுச் செம்பைவைத்து இழுக்கிறீர்

ஆரினாலும் அரியயொனாத ஆதிசித்த நாதரை

பேதையான மனிதர்பண்ணும் பிரளிபாரும் பாருமே

எனவும்,

“செங்கலும் கருங்கலும் சிவந்தசாதி லிங்கமும்

செம்பிலும் தராவிலும் சிவனிருப்ப தில்லையே”

எனவும் சிவவாக்கியார் சிந்திக்க வைக்கிறார்.

“உள்ளம் பெருங்கோயில் ஊனுடம்பாலயம்”

எனத் திருமூலரும், இன்னும் பதினென் சித்தர்களும், வள்ளலார் வரை, கடவுள் கொள்கையில் தன்னைத் தனக்குள் அறியும் அறிவைப் பெற்றால் கடவுளைக் காணலாம் என்பதையே வலியுறுத்தி உள்ளார்கள்.

சித்தர்கள் மரபில் தோன்றி உதித்து எளியமுறை குண்டலனி யோகப் பயிற்சிமூலம் இறைநிலை உணர்வினை எல்லோரும் பெற வழிகண்டுள்ள நமது அருட்தந்தை வேதாத்திரி மகரிசி அவர்கள்,

“கடவுள்தான் அனைத்தையும் படைத்தான் என்றேன்

கண் காது மூக்கு வைத்து கதைகள் சொன்னேன்.

கடவுள் என்று கற்சிலையை அறையில் வைத்து

கதவடைத்து புட்டீயும் வைத்தேன் பின் அந்த

கடவுளுக்குப் பசிதீர்க்கப் பால் நெய் தேங்காய்

கனிவகைகள் கற்சிலை முன் படைத்தேன் ஆனால்

கடவுள் நிலை அறிந்த போதென் செய்கையொப்பக்

கண்டுவிட்டேன் சிறுபிள்ளை விளையாட்டென்றே”

என்றார். மேலும்

“கட-உள் என்று சொல்லிவிட்டான் கருவறிந்தோன்

கருத்தறியான் உன்றி இதைக்காணவில்லை

கட-உள் என்ற ஆக்கினையின் குறிபபைமாற்றி

கண்டறிந்த நிலைக்கே அப்பெயரைக்கொண்டான்

கட-உள் என்ற இருசொல்லை ஒன்றாய்கூட்டி

கடவுள் என்று சொல்லிச் சொல்லி வழக்கமாச்சு

கட-உள் என்று மனிதன் ஓர் குறிப்புத் தந்தான்

கடவுள் எங்கே? என்று பலர் தேடுகிறார்.”

தன்னை அறிந்தால் தலைவனை அறியலாம் என்பதை திருமந்திரத்தில்,

“தன்னை அறியத் தன்கொரு கேடில்லை

தன்னை அறியாமல் தானே கெடுகின்றான்

தன்னை அறியும் அறிவை அறிந்தபின்

தன்னையே அர்சிக்க தானிருந் தானே”

என்கிறார் திருமூலர், வேதாத்திரி மகரிசியோ,

“உன்னையோ கடவுளையோ அறியவென்றால்

ஒரு குறுக்கு வழியுண்டு உள்ளுணர்ந்து

தன்னையறிந்தன் நிலையில் நிலைத்துவாழும்

தனிக்கருணைவடிவான குருவடைந்தால்

அன்னை வயிற்றிடைந்துருவாய் வந்த

ஆதி கருவைப்புருவத்திடை உணர்த்தப்

பின்னை நீ அவ்விடத்தில் நிலைக்க உந்தன்

பேதமற்றநிலை கடவுளாகவிடும்."

என்கிறார். தன்னையறிந்து இறையுணர்வு பெறும் குண்டலினி யோத்தை திருமூலர்,

"எருவிடும் வாசற்கு இருவிரல் மேலே

கருவிடும் வாசற்கு இருவிரல் கீழே

உருவிடும் சோதியை உள்கவல் லார்க்கு

கருவிடும் சோதி கலந்து நின்றானே."

என்கிறார் குண்டலினியோகம் பயில்வதால் தவக்கனல்மீறி உடலை தகிக்காமல் சாந்தியோகம் என்னும் இறங்குபடியும் தற்காலத்துக்கேற்றபடி எளியமுறை குண்டலினி யோகமாக அருளியுள்ள வேதாத்திரி மகரிசி அவர்கள்,

"இனிஇந்தச் சங்கடங்கள் எவர்க்கும் வேண்டா

எண்ணத்தின் ஓர்மைக்கு ஏற்ற தான

தனிச்சிறப்பாம் குண்டலினி தீட்சை உண்டு

தகுதிஉள்ளோர் விருப்பமுள்ளோர் அவைர் கட்கும்

கனிவுடனே கைவிரலால் நெற்றி தொட்டு

கனல்மூட்டிக் கருவெழுப்பிக் கருத்து ணர்த்தும்

புனிதமுறை யைப்பரப்ப உளம்உ வந்தும்

பொறுப்பேற்று இருக்கின்றேன் தொடர்பு கொள்க.”

என்று அன்பர்களை அழைக்கிறார் அருட்தந்தை.

அன்பர்களே வாரீர்
அறிவின் இருப்பிடம்
அறிந்து இன்பமுற
இன்ப நிலையதை ஏகநிலையதை
அன்பு நிலையதை
அறிந்திடலாம் இன்று
(அன்பர்களே)
தின்று திரிந்து உறங்கவோ பிறந்தோம்.
என்று நினைந்ததால் ஏனென உணர்தோம்
அன்றாட வாழ்வை அறிந்தனுபவிக்க
இன்றேனும் விரைந்து எழுச்சிபெற்றுய்வீர்
(அன்பர்களே)
பூரண தூலமும் பொருந்து சூக்குமம்
காரணமான கருவையு மறிந்து
ஆரணமான அணுவரிந்து சுடர்
தாரக மவுன தவத்தில் நிலைபெற
(அன்பர்களே)
எத்தனை ஆயிரம் ஆயிரம் இன்பங்கள்
இவ்வுலகெங்கும் பேரண்ட முழுமையும்
அத்தன் அருளாட்சியாக நிறைந்துள்ளான்
அறிவை விரித்து அனைத்தும் துய்த்தின்புற .
(அன்பர்களே)
நீங்களும் உங்கள் அன்புக் குடும்பமும்
நீளாயுள்,உடல்நலம் நிறைசெல்வம் மெய்யானம்
ஓங்கிச் சிறப்புற்று உள்ள நிறைவோடு
உள்ளொளி பெருக்கி உண்மைப் பொருள் காண
அன்பர்களே வாரீர்.”

தமிழ்ச் சித்தர்கள் சமுதாயத்தில் நிலவிய சாதி சமய வேற்றுமைகளைச் சாடினார்கள்.

“பொய் மதங்கள் போதனைசெய் பொய்க்குருக்களை
புத்திசொல்லி நன்னெறியில் போக விடுக்கும்
மெய்மதந்தான் இன்னதென்று மேவவிளம்பும்
மெய்க்குருவின் பாதம் போற்றியாடாய் பாம்பே”

எனப் பாம்பாட்டிச் சித்தரும்,

“சாதி பேதமில்லை அகப்பேய் தானாகி நின்றவர்க்கே”

என அகப்பேய் சித்தரும்,

“பறைச்சியாவ தேதடா பார்ப்பணத்தி யாவதேதடா
இறைச்சிதோல் எலும்புளே இலக்கமிடடிருக்குதோ”

“சாதியாவதேதடா சலந்திரண்ட நீரெல்லாம்
புதவாசல் ஒன்றாலோ புதமைந்தும் ஒன்றாலே
காதில் வாளி காரை கம்பி பாடகம் பொன் ஒன்றல்லோ
சாதிபேத மோதுகின்ற தன்மை என்ன தன்மையோ.”

எனச் சிவவாக்கிய சித்தரும்,

“ஒன்றே குலம் ஒருவனே தேவன்
நன்றே நினைமின் நமன் இல்லை நாளுமே
சென்ற புகுங்கதி வேறில்லை நும்சித்தத்து
நின்றே நிலைபெற நீ நினைந்துய்யுமே”

எனத திருமூலரும்,

“சாதியிலே மதங்களிலே சமய நெறிகளிலே
சாத்திரச் சந்தடிகளிலே கோத்திரச் சண்டையிலே
ஆதியிலே அபிமானித் தலைகின்றீர்”

“பன்னெறி சமயங்கள் பதங்களென் றிடுமோர்
பவநெறி இதுவரை பரவியதனால்
செந்நெறி அறிந்திலர் இறந்திறந்துலகோர்
செறிஇருள் அடைந்தனர் ஆதலின் இனி நீ
புன்னெறி தவிர்த்தொரு பொதுநெறி எனும் வான்
தன்னெறி செலுத்துக”

என வள்ளலாரும் சாதி மதங்களைப் பற்றிச் சாடியுள்ளார்கள்.

சித்தர் மரபில் உதித்த வேதாத்திரி மகரிசி அவர்களும் சித்தர் மரபினை ஒட்டி,

“மதங்களெல்லாம் எழுந்தவகையறி யாதார்கள்

மருட்சியினால் தம் மதமே உயர்வென்றெண்ணி

மதமயக்கம் கொண்டாட்சி வலுவினாலும்

மதம் மாற்றிவிடுகின்றார் இந்தச் செய்கை

மயக்கத்தின்மேல் மயக்கே அறிஞர் தந்த

மதங்களெல்லாம் எழ்மை பழிச்செயல் கடமை

மாற்றவன்றோ எம்மதத்தார் இவை ஒழித்தார்

உம்மதமே உலகத்தில் உயர்வென்று பேசுகின்றீர்

எம்மதத்தாரிடம் இல்லை பஞ்சமாபாதகங்கள்”

என்னும் கவியில் மதத்தைக் கண்ட மகான்களின் அறநெறிகளைப் பின்பற்றாமல் மதம் மாறுவது மயக்கமே எந்த மதம் இதுவரை பஞ்சமா பாதகங்களை ஒழித்தார்கள் எனச் சாடுகிறார்.

மேலும் மதங்கள் தோன்றிய உயாந்த நோக்கத்தை-

“உணவு உடை வணக்கமுறை தள்ளிப் பார்க்க

ஒன்றாகும் கருத்து பலமதங்களிலும்

உணவு உடை வணக்கமுறை பேத மாங்காங்கு

உள்ள வெப்பதட்பநிலைக்கேற்ற மாற்றம்.

“உணவு உடை வணக்கமுறை மனிதர்கெல்லாம்
உயிர்வாழ உயர்வடைய அவசியமாம்
உணவு உடை வணக்கமுறை சீர் அறிந்தே
உத்தமர்கள் வகுத்துள்ளார் மதஒழுக்கம்.”

என்கிறார்.

மெய்யுணர்வு பெற்று உய்வடைய சினம் ஒரு தடை என உணர்ந்தவர்கள் சித்தர்கள்.

“சினமென்னும் பாம்பு இறந்தால் தாண்டவக்கோனே
சித்தியென்றே நினையடா தாண்டவக்கோனே”

என இடைக்காட்டுச் சித்தரும்.

,

“கோபமென்னும் மதயானை கொண்ட மதத்தைக்
கூர்கொள்யுக்தி அங்குசத்தால் கொன்றுவிட்டோம் காண்”

எனப் பாம்பாட்டிச் சித்தரும்,

“வெல்லு மட்டும் பார்த்து வெகுளியெல்லாம் விட்டகன்று

செல்லுமட்டும் சிந்தை செலுத்துவது எக்காலம்”

எனப் பத்திரகிரியாரும் கூற வேதாத்திரி மகரிசி மாக்கோலத்தில்,

“சினம் அச்சம் இரண்டும் ஓர் மனிதன் வாழ்வில்

சீர்குலையச் செய்யும் உட்தீயாகும்

சினம் அச்சம் ஒழிய சிந்தனையை ஏற்றி

சிவன்சீவன் நிலைகளை நன்குணர வேண்டும்.”

என்கிறார்கள். மேலும்,

பிற உயிர்களுக்குத் துன்பம் செய்வது பாவம் எனவும், துன்பப்படும் உயிர்களுக்கு உதவ வேண்டும் என்பதை

“பஞ்சை பனாதியை யடியாதே யந்தப்

பாவம் தொலைய முடியாதே

தஞ்சமென் றோரைக் கெடுக்காதே யார்க்கும்

வஞ்சனை செய்ய நினையாதே”

என விளக்குகிறார்.

“வைதாரைக் கூட வையாதே - நல்ல

வையம் முழுவதும் பொய்த்தாலும் பொய்யாதே”

என்பது கொங்கணவரின் வாக்காகும். வேதாத்திரியோ இரண்டொழுக்கப் பண்பாடு மூலம்,

1. “வாழ்நாளில் யாருடைய உடலுக்கோ மனதுக்கோ துன்பம் செய்யமாட்டேன்
2. துன்பப்படும் உயிர்களுக்கு என்னாலான உதவிகளைச் செய்வேன்.

என உறுதி மொழியைச் சொல்கிறார்.

இதுவரை வந்த பல சித்தர்களின் கருத்துக்களையெல்லாம் உள்ளடக்கி, அவற்றோடு தனது அனுபவத்தையும், ஒரு முறையான அடித்தளத்தோடு இணைத்து இவ்வுலக மக்களுக்கு மகரிசி தரும் வாழ்கைக் கல்விதான் வேதாத்திரியம்.

பிரம்மத்தையும், ஜீவனையும் பிரிப்பது ஆணவம், கன்மம், மாயை என்ற மூன்று மலங்கள்தான்.

அம் மூன்று மலங்களையும் கழிப்பதற்கு உண்டான வழிமுறைகளைத்தான் சித்தர் பாடல்களும், வேதாத்திரியமும் கூறுகின்றன.

சித்தர் தத்துவங்களை விஞ்ஞானமாக்கி, விஞ்ஞானத்தை தத்துமாக்கி, இரண்டையும் இரண்டறக் கலந்து பிரம்மஞானமாக்கிய பெருமை வேதாத்திரி மகரிசியைச் சேரும்.

சித்தர் பாடல்களின் சாரம்சத்தை, ஐந்தொழுக்கப் பண்பாட்டின் மூலம் தனிமனிதனுக்கும், பதினான்கு வகையான வேதாத்திரியக் கோட்பாட்டின் மூலம் சமுதாயத்திற்கும் மனிதகுலம் உய்யவும் உயரவும் வழிவகை செய்துள்ளது வேதாத்திரியம்.

பதினெட்டு சித்தர்களின் சித்த வாக்கியங்களுக்கு இணையான தாரக மந்திரமாகிய “வாழ்க வையகம், வாழ்க வளமுடன்” என்ற வாழ்த்தலைகளை தொடர்ந்து எழுப்புவதன் மூலம் அனைத்து ஜீவராசிகளுக்கும் எல்லா நலன்களும், வளங்களும் கிட்டும்படியான உன்னத வழியினை அருட்தந்தை வேதாத்திரி மகரிசி வழங்கியுள்ளார்கள்.

சித்தர்களின் பாடல்களும் அவற்றில் அடங்கியுள்ள அறிவும் வாழ்நாள் முழுவதும் கற்றுப் பயன் பெற வேண்டியவை.

அதுபோல வேதாத்திரி மகரிசியின் வேதாத்திரியமும் வாழ்நாள் முழுவதும் கற்றுப் பொருளுணர்ந்து பின்பற்றத்தக்கவை.

5. யார் சித்தர் - யார் துறவி?

கருமையத்தில் எல்லாமே சுருங்கி இருக்கிறது. மனதின் சுழலையைக் குவிக்கும் போது, அது Adjust ஆகிறது. அந்த நிலைக்கு Adjust ஆகும் போது, தானாகவே அந்த Adjustment வரும்போது, முன்னொரு காலத்தில் என்ன என்ன நடந்ததோ அதெல்லாம் அப்படியே மூளையில் வந்து எண்ணங்களாக மலர்கின்றன.

எண்ணங்கள் ஏதோ புதிதாக வருவன அல்ல. ஏற்கனவே மூளையினுடைய செல்களில் மூளை தான்உள்ளே பதிவுகளை அனுப்பி வைத்தது, அவற்றைத்தான் இப்போது அதே மூளை எடுத்துக் கொடுக்கிறது. அதெல்லாம் முதலில் காட்சி முதலிய புலன் உணர்வாக உள் வாங்கப்பட்டவைதான்.

இந்த அற்புதமான நிலையில் மூளைச் செல்களில் மனம் வைத்து ஒரு மனிதன் தியானம் செய்கின்ற போது, இதுவரையில் என்ன என்னென்ன செய்திருக்கிறோனோ, அவற்றில் தவறானவைகள் எல்லாம் மறைந்து போகும். அதனால் திரும்பித் திரும்பி எண்ணங்களாக வெளிவராது.

நாம் சில எண்ணங்களை இவை வேண்டாம் என்று நினைக்கிறோம். அவ தேவையில்லை என்று நினைக்கிறோம்.

ஆனால் அவை வந்துகொண்டே இருக்கின்றன. அவற்றை மாற்ற முடியவில்லை.

அவற்றை மாற்றி நல்லனவற்றை மாத்திரம் வைத்துக் கொண்டு தேவையல்லாதவைகளைக் கழிக்க வேண்டுமானால், மூளைச் செல் பதிவகளை மாற்றியமைத்தால் தான் முடியுமே தவிர வேறு வழியில்லை. அதற்கு உதவுவது துரிய தவம்.

மூளையில் மனதை வைத்துத் துரிய நிலைத்த தவம் செய்யச்செய்ய, அங்கே போதிய அளவு ஜீவகாந்த சக்தியின் அழுத்தம் ஏற்படுகின்ற போது, எவ்வளவு காலத்தினுடைய பதிவாக இருந்தாலும் அவற்றை மாற்றி அமைத்துக் கொள்ள முடியும்.

தேவையில்லாத எண்ணங்கள் ஏன் வருகின்றன?

எத்தனையோ தலைமுறைகளாக நடந்த எல்லா நிகழச்சிகளும், கருவமைப்புப் பதிவுகளாக நம்மிடம்இருக்கின்றன.

அதில்பல நமக்குத் தேவையில்லாதவை. அதன் காரணமாக அவ்வப்போது வருகின்ற சில எண்ணங்கள் நமக்குத் தேவையில்லாதவை மட்டுமல்ல, ஆகாதவை.

அப்படிப்பட்ட எண்ணங்கள் வந்து விட்ட உடனே, மூளைச் செல்கள் வேலை செய்து, உடனே உடலில் உள்ள செல்கள் எல்லாம் அந்த எண்ணத்தைச் செயல்பாடு புரிவதற்குத் தயாராகிவிடும். கை தயாராகும், கால் தயாராகும். உடல் உறுப்புகள் எல்லமே தயாராகும்.

சினம் என்கின்ற கொடிய எண்ணம் வந்தது என்றால் கை, கால், எல்லாம் தயாராகின்றன. யாரையாவது போட்டு அடிப்பதற்கு.

அந்த மாதிரி மூளைச் செல்களுக்கு, கை, கால்கள், புலன்கள் முதலிய உடல் கருவிகள் உதவி செய்கின்றன. இதையெல்லாம் மாற்றித் தான் மனிதன் நல்ல ஒரு புதுமையடைய வேண்டும்.

Sublimation வர வேண்டும் என்பதற்காகத் துரியத்தில் தவம் செய்ய வேண்டியதாக இருக்கிறது.

அங்கே தவம் செய்து, பழ வினைகள் எல்லாம் மாற மாறி, மன அலையின் நீளம் குறையக் குறைய, மன அலையானது இறைநிலையாகிய இருப்பு நிலையினை ஒட்டி இறங்கி வருகிறது.

முன் வினையும் பின் வினையும்

சாதாரணமாக, தெய்வநிலை என்கின்ற இருப்பு நிலையினது அருகில் கூட மனதினால் போக முடிவது இல்லை.

இருப்பு உயிர் மையத்தில் இருக்கிறது. தவத்தினால் இருப்பு நிலைக்குப் போகப் போகத்தான், இறைநிலையொடு ஒன்ற ஒன்ற, இந்த மனச்சுழலானது நாற்பதிலிருந்து குறைந்து கொண்டே வந்து ஒன்று வரைக்கம் கூட வரும்.

அப்படி ஒன்றும் போது, மனித மனம் இறைநிலையோடு ஒன்ற ஒன்ற, அது பிரபஞ்சத்தில் இதுவரையில் இறைநிலை முதற்கொண்டு எத்தனையாகப் பரிணாமம் ஏற்பட்டு வந்நததோ அவை அத்தனையையும் உள்ளுணர்வாகத் தெரிந்து கொள்ள முடியும்.

அதனால் தான் தவம் செய்யபவர்களை முற்காலத்தில் யோகிகள் என்று சொன்னார்கள்.

மனதினுடைய அலை நிலையைக் குறைத்துக் கொண்டு வருவதைத்தான் யோகம் என்றும், துரியம் என்றும் சொன்னார்கள்.

அதே கருத்தையும் தமிழ் நாட்டுச் சித்தர்களில் ஒருவரான திருமூலர் சொல்லியிருக்கிறார்.

“தன்னையறிந்த தத்துவ ஞானிகள்

முன்னைவினையின் முடிச்சை அவிழ்ப்பார்கள்

பின்னை வினையைப் பிடித்துப் பிசைவார்கள்

சென்னியில் வைத்த சிவனருளாலே”

முன்னை வினை என்பது நீண்ட காலமாகப் பல தலைமுறைகளாக நாம் ஆற்றிய செயல்களெல்லாம் பதிவாகி இருக்கின்றன பாருங்கள்.

அவற்றைத்தான் பழவினை என்று சொல்வார்கள். முன்னைவினையில் முடிச்சை அவிழ்ப்பார்கள்.

அதாவது அவை ஒன்றோடு மற்றோன்ளு சேர்ந்து கொண்டு அழுத்தம் பெற்றிருக்கின்றன அல்லவா? நாம் சும்மா இருந்தாலும் கூட, அந்த எண்ணங்களெல்லாம் நம்மமைச் செயலில்ஆழத்திவிடும்.

முடிச்சை அவிழ்ப்பார்கள். அதாவது இன்னின்ன எண்ணங்கள் தேவை, இன்னின்ன எண்ணங்கள் தேவையில்லை என்று தெரிந்து கலைத்து அழித்துவிட்டு. வேண்டியனவற்றை மட்டும் வைத்துக் கொள்வார்கள்.

மனம் நடத்துகின்ற வியாபாரம் எண்ணம்.

எண்ணம் வரும்போது, அது தூண்டி விடுகின்ற செயலினைச் செய்து விட்டால் என்ன நிகழும்?

இந்த இந்த எண்ணங்கள் நமக்குத் தேவையா? தேவையில்லையா? என்று சித்தித்துச் செயல்படும் போது. அவ்வினையைப் பிடித்ததுப் பிசைவார்கள்.

சென்னியல் வைத்த சிவனருளாலே, அதாவது, அங்கேயே. எந்த இடத்தில இந்த வியாபாரங்கள் எல்லாம் செயல்களளெல்லாம் நடக்கின்றனவோ, அந்த இடத்திலேயே மனம் வைத்து செய்வதனால் அத்தகைய அறிஞர்கள் முதலில் விண் நிலையை உணர வேண்டும்.

விண்ணும் உயிரும் ஒன்று என்று உணராமல் எதையுமே உணர முடியாது.

இந்தப் பிரபஞ்சத்தில் பிருதிவி, அப்பு, தேயு, வாயு. ஆகாசம், உயிர் என்ற அளவில் வரிசையாக வந்துள்ளன.

உயிர்தான் விண் என்ற போது அந்த விண்ணும் நம் உடலில் இருந்தால் உயிர். அந்த உயிரைச் சிதாகாசம் என்றும் சொல்வார்கள். சமஸ்கிருதத்தில் ஆகாசம். தமிழில் விண்.

அந்த விண்ணை, அந்த உயிர்ச் சக்தியை, அதன் நிலையை, விளைவுகளை உணர்வதற்கு, மனம் அந்த இடம் போனால்தான், தீட்டாவேவ் 7 லிருந்து 4 வரை 1 வினாடிக்கு சுழற்சி-கிட்டும்.

புழுவாக இருந்ததில் இருந்து பரிணாமத்தில் மனிதனாக வந்த அதுவரைக்கும் எல்லா நிகழச்சிகளோடும் தொடர்பு கொள்ளக் கூடிய மன அலைச் சுழல் அது.

அங்கே நின்ற பிறகுதான், புலன் உணர்வில் இருந்து பரம்பரையாக வந்த தவற்றைக் குறைத்துக் கொள்ளவே முடியும்.

விண்ணை உணர்ந்த பிறகு விண் எங்கே இருந்து உற்பத்தியானது என்று தெரியும். அது சுழற்சி அலை. அது இறைநிலையிலிருந்துதான் வந்தது.

ஐயம் திரிபற உணர்ந்தால் மனமே தெய்வம்.

இறைவனே தான் பரிணாமம் அடைந்து எல்லாப் பொருளோடும் நிறைந்து நிறைந்து மனிதன் வரைக்கும் அறிவாக வந்திருக்கக் கூடியதை உணர்கின்றவர்களை ஞானிகள் என்று சொன்னார்கள்.

மனதுக்குள்ளே தெய்வ நிலையை உணர்ந்தவர்கள் தெய்வர்கள். அது தான் வள்ளுவர் கூட சொல்கிறார்.

“ஐயப்படாது அகத்ததது உணர்வானைத்

தெய்வத்தோ டொப்பக் கொளல்”

சந்தேகமே இல்லாது, அகத்தது தெய்வம் என, அந்த விண் மையத்திலேயே உறைந்தது இறைநிலை இன்னது என உணர்ந்த பிறகு, அதுதான் அறிவாக இயங்கிக் கொண்டிருக்கிறது என்ற உண்மையையும், உணர்ந்தவனைத் தெய்வமாகப் போற்றிடலாம் என்று வள்ளுவர் சொல்கிறார்.

அதனால் தெய்வம் என்பது உணர்வு. அந்த யோக நிலையைத் தாண்டி, யோகத்தினால் பெற்ற பயன் தெய்வநிலை உணர்வு.

ஆக, தெய்வ நிலை உணர்ந்தவர்களை ஞானியர்கள் என்றும் அதை உணர்வதற்காகப் பயிற்சி செய்பவர்களைச் சித்தர்கள் என்றும சொல்ல வேண்டும்.

“சித்து” என்றால் ஊரை ஏமாற்றும் வேலை. அதை நாம் செய்யவில்லையே! என்று நினைக்கிறோம்.

உலகத்தில் எந்தச் சித்தும் ஊரை ஏமாற்றுவது தான். மனிதனை மனிதன் ஏமாற்றும் கைத்திறன் அது. அவ்வளவு தானே தவிர அதையெல்லாம் சித்து என்று எடுக்க வேண்டாம்.

ஒரு கோதுமையை நூறு கோதுமையாக்குவது சித்து.

ஒரு கோதுமையை நிலத்தில் போடுகிறோம். அது நூறாக விளைகிறது. இதை மனிதன் செய்ய முடியும் என்றால்அது சித்து தான்.

ஆனால் மனிதனால் ஒரு கோதுமையைச் செய்ய முடியுமா? விதையில்லாமல் எவனாவது ஒருவன் ஒரு கோதுமை மணியைச் செய்து விட்டானால் அதைச் சித்து என்று ஒப்புக் கொள்ளலாம்.

இயற்கையில் நடப்பது எல்லாம் சித்து தான். எமாற்று வித்தைகளை யெல்லாம், ஒன்றை மற்றொன்றாகக் காண்பித்து பணம் பறிப்பதையெல்லாம் சித்து என்று ஒப்புக் கொள்ளக கூடாது.

ஆனால், சித்து என்ற விண் என்பது உயிர். உயிர் தான் சித்து. சித்து என்றால் உயிர். உயிருணர்வு பெற்றவர்களெல்லாம் சித்தர்கள்தான்.

உயிர் என்பது எங்கேயிருந்து பிறந்தது? இறைநிலையின் அசைவுதான் உயிர்.

அதைத் தெரிந் கொண்டால் அவன் தான் சித்தன். அவன் தான்இறைவன்.

இந்த உண்மையை உணர்ந்து கொண்டால், விளக்கை ஏற்றிய பிறகு இங்கே என்ன பொருள் இருக்கிறது. அங்கே என்ன பொருள் இருக்கிறது என்று பார்த்துப் போகிறோம் பாருங்கள், அம்மாதிரி வாழ்ககையை நடத்தலாம்.

பழைய பிடிப்பிலிருந்து உண்மையை உணர்ந்து மனம் விலகி நன்றால், அதுதான் துறவு.

விருந்தும், பிச்சையும்

ஏதோ வீட்டினை விட்டுப் போனால் துறவு, பணத்தாசையை விட்டு விட்டால் துறவு என்று நினைக்கிறோம். அதெல்லாம் துறவல்ல.

நீங்கள் "அந்த துறவில்"கொஞ்சநேரம் இருந்து பாருங்கள். பசி வந்தால் மனம் சோற்றை நினைக்கிறது. யார் தருவார்கள்?

கொடுத்தால் பார்க்கிறோம். இல்லையானால் கேட்கிறோம். கொடுத்தால் விருந்து, கேட்டால் பிச்சை. எங்கே இருக்கிறது துறவு?

முன்பு எந்த உலகத்தின் மீது நின்றானோ, அதே உலகத்தின் மீது தான் துறவியும் நிற்கிறான்.

மண்ணைத் துறந்துவிட்டு, விண்ணிலா நிற்கிறான், நடக்கிறான்? எவனால் மண்ணை துறக்க முடியும்?

எனவே, துறவு என்று சொல்தெல்லாம் போலியானதாகும். ஆனால் பாருங்கள். இந்த நடைமுறை சாத்தியமில்லாத துறவு தத்துவத்திற்கு வரவேற்பும், மதிப்பும் சித்தர்கள் பிறந்த இந்த மண்ணில்கிடைத்தது அதிசயமே.

மனதில் பழைய பதிவுகளிலிருந்து தேவையுள்ளதை வைத்துக் கொண்டு தேவையில்லாததைக் கழித்து கொற்றுக் கொளளக் கூடிய தூய்மையான மனதைப் பற்றி எல்லாப் பெரியவர்களும சொல்லியிருக்கிறார்க்ள.

உலகத்தில் இந்த உண்மையை உணர்ந்து நல்லது செய்தால் இறை வழிபாடு. இறைவன் உண்மை. எது மெய்ப்பொருளோ அதுதான் உண்மை.

அந்த உண்மையை உணர்ந்த பிறகு அந்த உண்மைப் பொருள் எல்லா ஜீவன்களுக்குள்ளாகவும், மனிதர்களுக்குள்ளாகவும்,

அறிவாகவும் இருக்கிறது என்பதால், அவர்களுடைய மனம் நோகாது, அவர்கள் துன்பப்படாத முறையில், எந்த காரியத்தைச் செய்தாலும் அதை அறநெறி என்று சொல்கிறோம்.

ஆன்மீகத்தில் தவம் எவ்வளவு முக்கியமோ, அவ்வளவு முக்கியம் அறநெறி என்பார் வேதாத்திரி மகரிசி.

6. ஜீவன் முக்ததர்களின் வாழ்க்கை நெறி

தோற்றங்களையும் தொட்டுணரக் கூடியவற்றையும் பொருட்கள் என்று கூறுவது மொழி வழக்கு.

அணுக்களின் விண்ணின் கூட்டு இயக்கமே தோற்றங்கள் அனைத்தும் அணுக்களோ இயங்கிக் கொண்டே இருக்கும் நுண்துகள்கள்.

எனவே, அணுக்களும் அவை கூடிய தோற்றங்களும் நிகழ்ச்சிகளேயாகும். அணு என்ற இயக்க மூலக்கூறின் ஆதிநிலையே நிலையான ஒன்றாகும்.

நிலைத்த ஒன்றான சுத்த வெளியே உண்மையில் பொருள் அகும். அது பூரணம், பிரம்மம், சூனியம், பரம், அநாதி, சிவம் என்ற பெயர்களால் கருதப்படுகிறது.

இதுவே உண்மையில் பொருள் என்று விளங்கிக் கொண்ட பேரறிஞர்கள் இதனை மெய்பபொருள் என்று கூறினார்கள்.

உருவம், ஒலி, ஒளி, சுவை, மணம் என்ற ஐந்தையும் உணரும் ஆற்றலை ஐம்புலனறிவு என்று கூறுகிறோம்.

இவையெல்லாம் அறியும் அறிவு தன்னையே அறியும் உயர்வுக்கு எழுந்த ஆற்றல் ஆறாவது அறிவு ஆகும்.

அறிவு, உயிர். மெய்பொருள் என்ற மூன்று தத்துவங்களையும் புலன்கள் மூலம் உணர முடியாது.

அறிவு தன்னையே தான் நோக்கி நிலைத்து நுணுகி அறிவையும் அதற்கு இயக்க களமான உயிரையும், உயிரின் மூலநிலையான மெய்ப்பொருளையும் உணர்ந்து கொள்ள வேண்டும்.

அறிவு, உயிர். மெய்ப்பொருள் எனும் மூன்றும் புலன்களால் அறிய முடியாதவை என்பதைக் குறிக்க இவை மறைபொருள் என வழங்கப்பட்டன.

மறைபொருளை அனுபவமாக உணர்ந்தவர்கள் அவற்றைப் பற்றி வெளியிட்ட விளக்கங்கள் "மறை" என்று கூறப்படுகின்றது.

இயற்கையே தனது பரிணாமத்தால் ஐயுணர்வாகித் தன் பெருமையை உணர்ந்து ரசித்து, தன் முழுமையைத் தானே உணர்ந்து, அமைதி பெற ஆறாம் நிலை அறிவோடு எடுத்த வடிவமே மனிதனாகும்.

ஜீவன் நிலைக்கு வந்த மெய்பபொருள் புலன் உணர்ச்சிகளால் உருவம் வரையில எல்லை கட்டிக் கொண்டு. இன்ப துன்ப உணர்ச்சிகளிலோ சிக்கி, தன் முழுமையை, நோக்த்ததை மறந்து உருவம் வரையிலே "தான்" என்ற நினைவாக அறிவிலே குறுகி இயங்குகிறது.

இந்த தன் மறதியினாலே "தனது" எனும் பொருள், மக்கள் பற்றும், "தான்" எனும் பொருள், மக்கள் பற்றும், " "தனது" என்னும் அதிகாரப் பற்றும் சேர்ந்த "தன்முனைப்பாக (Ego)" களங்கமடைகிறது.

"தான்", "தனது" எனும் இரண்டு சேர்ந்த மனஎழுச்சியோடு தனது தேவையுணர்வு, அவற்றை நிறை செய்யும் விருப்பம், பழக்கம், சூழ்நிலை, காலம் இவற்றிற்கேற்ப பேராசை, சினம், கடும்பற்று, முறையற்ற பாலகவர்ச்சி, உயர்வுதாழ்வு மனப்பான்மை, வஞ்சம் எனும் ஆறு குணங்களின் வழியே செயலாற்றும் போது துன்பங்களே அனுபவமாகும்.

இத்தகைய துன்பம் தரும் செய்லகள், பழிசயெல்கள் (பாவம்) என்ப்படுகிறது. தன் முனைப்பு, பழிசெயல் பதிவுகள், சிக்கல் தரும் பொருள் - மக்கள் பற்று. இவை மூன்றும் ஆணவம், கண்மம், மாயை என வழங்கப்படுகின்றன.

அகத்தவம் எனும் மனவளப் பயிற்சியால் அறிவில் நுண்மையும் உறுதியும் பெற்று ஒழுக்கம், கடமை, ஈகையென மூன்றிணைப்பான அறநெறியை வாழ்வின் செயலாக - கர்மயோகமாகப் பின்பற்றி ஆன்மாவை முக்களங்களிலிருந்து விடுவித்து மெய்ப்பொருள் உணர்வில சிவமே ஜீவனாக இயங்கும் உண்மை உணர்ந்த பேரின்ப அனுபவமே ஜீவன் முக்தி எனப்படும்.

தவம், அறம் இரண்டும் பயின்று ஆன்ம விடுதலைபெற உரிய காலம், வாழ்நாள் நீளம் வேண்டும்.

இடையிலே உயிர் உடலைவிட்டுப் பிரியாது காக்க வேண்டியது ஜீவன் முக்தி பெற விரும்பினோர்க்கு இன்றியமையாததாயிற்று.

எனவே, ஜீவன் முக்தர்கள் வாழ்க்கையில் மூன்று நோக்கங்கள் இணைந்துள்ளன.

1. அறிவில் முழுமை பெற்று இறைநிலையுணர்ந்து அந்நிலை அகலாத அறிவின் விழிப்பில் நிலைத்திருக்கப் பழக வேண்டும்.
2. தனக்கும், பிறருக்கும், தற்காலத்திலும், பிற்காலத்திலும், துன்பம் எழாத முறையோடு அளவோடு உலகை அனுபவிக்கும் வாழ்க்கை நெறயாகிய அறவழி நின்று வாழ வேண்டும்.
3. தன் விருப்பமின்றி உயிர் உடலை விட்டுப் பிரியாமலிருக்கும் காகல்ப முறையில் சித்திபெற வேண்டும். அகத்தவம், அறநெறி, காயகல்பம் என்ற மூன்றும் ஒன்றிணைந்தயோக வாழ்வே ஜீவன் முக்தர்கள் பின்பற்றிய வாழ்க்கை வழியாகும்.

ஜீவசாமதித் தலங்கள்.

தமிழ் நாட்டில் இந்த முறையில் வாழ்ந்து அறிவிலே முழுமை பெற்றவர்கள் சித்தர்கள் என மதிக்கப் பெற்றனர்.

உடலிலிருந்து உயிர் பிரியாமல் மன இயக்கத்தை மாத்திரம் நிறுத்திக் கொண்டு நிறைவும் பெற்றவர்கள் பலர்.

அவர்களில் பதினெட்டு சித்தர்கள் புகழ் பெற்றவர்கள். உயிர் பிரியாத உடல் பெற்று ஜீவ சமாதியடைந்தவர்களுக்கு ஒரு அடையாளம் உண்டு. உடலை எத்தனை ஆண்டுகள் வைத்திருந்தாலும் அது கெடாது.

அத்கையவர்கள் உடலை அவர் சமாதி எய்திய பிறகு மண்ணில் புதைத்து அதன்மேல் எதெனும் சிலை வைத்து அதனை வழிபடுவது வழக்கமாயிற்று என்கிறார் மகரிசி.

புகழ்பெற்ற பதினெட்டு சித்ர்களோடு மேலும் இரண்டு சித்தர்களின் பெயர்களும் அவர்கள் உடல்கள் அடக்கம் பெற்ற தலங்களும் பின்வருமாறு. .

1. அகத்தியர் - அனந்த சயனம்
2. அகப்பேய்சித்தர் - எட்டுக்குடி
3. திருமூலர் - சிதம்பரம்
4. நந்தீசர் - திருவாடுதுறை
5. போகர் - பழனி
6. கும்பமுனி - குடந்தை
7. வாமதேவர் - அழகர்மலை
8. இடைக்காடர் - திருவண்ணாமலை
9. சட்டமுனி - சீர்காழி
10. கமலமுனி - திருவாரூர்
11. மச்ச முனி - திருப்பரங்குன்றம்
12. கொங்கணவர் - திருப்பதி
13. பதஞ்சலி - இராமேஸ்வரம்
14. பாம்பாட்டி - திருக்கடையுர்
15. சுந்தரானந்தர் - மதுரை
16. குதம்பைச்சித்தர் - மயிலாடுதுறை
17. கருவுரார் - தஞ்சாவுர்
18. கோராக்கர் - திருக்கழுக்குன்றம்.
19. தன்வந்தரி - வைத்தீஸ்வரன் கோவில்
20. புலத்தியர் - பாபநாசம்.

மண்ணில் அடங்கியும் இறைவனுடன் இரண்டறக் கலந்து அமரத்துவம் பெற்ற மெய் ஞானிகள், கால வரம்பின்றி நம்முடன் வாழ்ந்து வருகிறார்கள்.

7. உயிரை உணர்த்திய சித்தர்கள்.

தமிழ் நாட்டில் வாழ்ந்த சித்தர்கள் எல்லேருமே ஞான யோகிகள்தாம். பதினெட்டு சித்தர்களில் திருமூலர் முதலாமவர்.

இவர் வாழ்ந்த காலம் ஐந்தாவது நூற்றாண்டு. இவர் அருளிச்செய்த நூல் திருமந்திரமாலையாகும். இது 3000 பாடல்களைக் கொண்டது.

இதனைச் சைவத்திருமுறை பன்னிரண்டினுள் பத்தாவது திருமுறையாய்த் தொகுத்துள்ளனர்.

மக்கட் சமுதாயம் நலன் பெற வேண்டுமென்ற நோக்கத்தில் தான் இலக்கியங்கள் படைக்கப்படுகின்றன. ஆதிகாலந்தொட்டு இக்காலம் வரை அங்ஙனமே இலக்கியங்கள் உருவாகின்றன.

படைப்பாளனின் சிந்தனையில் கருவாகின்றன. அவ்வாறு உருவானவற்றுள் எக்காலத்திலும் மறுக்க முடியாத மாறாத உண்மைகள் நின்று நிலை பேறு கொள்கின்றன.

அவற்றுள் சிறப்பானவை திருமந்திரமும், ஞானக்களஞ்சியமும் ஆகும்.

இவ்விரு நூல்களிலும் கூறப்பட்டுள்ள ஆழமான கருத்துகளையும் அழகான ஒற்றுமைகளையும்

பய ன் பயக்கும் கருத்துகளை திருமந்திரமும், வேதாத்திரியமும் தெவிட்டாமல் தருகின்றன.

திருமந்திரம் ஒன்பது தந்திரங்களைக் (இயல்கள்) கொண்டது. மூவாயிரம் பாடல்கள் உடையது.

சராசரியாக ஒவ்வொரு பாடலும் நான்கு வரிகளாகவும், ஒவ்வொரு வரியும் நான்கு சொற்களைக் கொண்டதாகவும், மொத்தம் 192000 சொற்களைக் கொண்டது.

திருமந்திரம் எடுத்துக் கொண்ட பொருளை எளிய சொற்களால் அனைவருக்கும் புரியும்படி திருக்குறளைப்போல் சுருக்கமாகவும், தெளிவாகவும் கூறுகிறது.

திருமந்திரம் ஒரு தத்துவக் களஞ்சியம். தத்துவப் பொக்கிஷம், சுரங்கம், தத்துவக் கடல்.

தமிழில் முதல் ஆகமமாக மட்டுமின்றி, முதல் யோக நூலாகவும் செய்தருளிய நூல் தமிழ் முவாயிரம் என்னும் திருமந்திரம்.

திருமந்திரம் மாபெரும் சாத்திர நூல் "தமிழ் முவாயிரம்" என்று சிறப்பிக்கபடுவது. சைவ சமயத்திற்கு முதல் சாத்திரமும், தோத்திரமாக அமைந்த அரிசய நூல்.

வேதம்,ஆகமம் ஆகிய இரண்டிற்கும் திருமந்திரம் விளக்கம் தருகிறது. இது சைவ ஆகமம் என்றும் போற்றப்படுகிறது.

திருமந்திரம் சைவத் திருமுறைகள் பன்னிரண்டினுள் பத்தாவது திருமுறையாக பெரியோர்களால் வைக்கப்பட்டுள்ளது.

தோத்திரத்திற்குத் திருவாசகம் சாத்திரத்திற்குத் திருமந்திரம் எனச் சான்றோர் கூறுவர்.

இந்த நூல் மக்கள் கடைப்பிடிக்க வேண்டிய அறங்களையும், அன்பின் சிறப்பையும், இறைபக்தி, சக்தியின் பெருமை, சமய வாழ்க்கை , யோக முறைகள். சிவகுருவாக உள்ள ஞானாசிரியரிஜன் பெருமை முதலியவற்றைக் கூறுகின்றது.

மேலும் சிவமே அன்பு, அன்பே சிவம் எனக் கூறும் திருமந்திரமே சைவ சித்தாந்தத்தின் முதல் நூலாகக் கருதப்படுகிறது.

"மூலன் உரைசெய்த மூவாயிரம் தமிழ்

மூலன் உரைசெய்த முந்நூறு மந்திரம்

மூலன் உரைசெய்த முப்ப துபதேசம்

மூலன் உரைசெய்த மூன்றும் ஒன்றாமே”

என்ற திருமந்திர ஈற்றயற் கொண்டு மூவாயிரந்தமிழ், முந்நூறு மந்திரம், முப்பது உபதேசம் ஆகிய மூன்றும் வெவ்வெறு மூன்று நூல்கள் எனக் கருதுவோரும் உண்டு.

“மூன்றும் ஒன்றாமே” என்று திருமூலரே சொல்லிவிட்டதால் மூன்றும் வெவ்வெறு தனி நூல்களன்று.

மூவாயிரந் தமிழாகிய திருமந்திரத்தில் முந்நூறு மந்தரமும், முப்பது உபதேசமும் அடங்கும் எனக் கொள்வார் சிலர்.

திருமந்திரத்தில்ல் கூறப்பட்டுள்ள பேருண்மைகளை எளிய மக்களும் உணர்ந்து கொள்ளும் வகையில் அறிவியல் நோக்கோடு காரண காரியத் தொடர்புடன் விளக்குகின்ற மகரிசியின் புதிய நெறி “**வேதாத்திரியமாக**” மலர்ந்துள்ளது.

நேரடியாக பரம்பொருளோடு இணைந்து தவமிருப்பது முதலிலேயே முடியாது. அதற்குப் பல படித்தளமாகப் பயிற்சிகள் வேண்டும். அந்தப் பயிற்சியைத் தான் வேதாத்திரியம் சொல்லிக் கொடுக்கிறது.. .

சமூக ஆரோக்கியத்துக்கான வேர்களைப் பதிப்பதே வேதாத்திரியச் செயல்பாடு. தனி மனித வெற்றிக்கான திறவுகோல் வேதாத்திரியம் என்பதில் ஐயமில்லை

இல்லறம், துறவறம், இளமை நோன்பு, ஒழுக்கம், கடமை, ஈகை, பாவம், புண்ணியம் என பல மானிட அறங்களை அறிவியலடிப்படையில் விளக்கிக் கூறும் அறத்துப் பாலும், அரசியல், பொருளாதாரம், சுகாதாரம், கல்வி, விஞ்ஞானம் எனப் பொருள் நெறி வகுத்துரைக்கும் பொருட்பாலும், இன்பம் துன்பம், அமைதி, பேரின்பம், இறைநிலை, உடல், உயிர், ஆன்மா, மனம் என

எல்லவற்றுக்கும் தருகின்ற புதியனவாக இன்பத்துப் பாலும் நவீன முப்பாலின் சாரமே வேதாத்திரிய இலக்கியம்.
எல்லாப் பொருளும் இதன்பால் உள.

திருமந்திரத்தைப் போல் ஞானக்களஞ்சியத்தில், வேதாத்திரிய இலக்கியத்தில் இல்லாத எப்பொருளும் இல்லை .

மூலன் என்ற உடலில் மூவாயிரம் ஆண்டு வாழ்ந்தவர் திருமூலர். ஆராயந்து கண்ட அரிய உண்மையை ஆண்டிற்கு ஒரு பாடலாய்ப் பாடியவர்.

திருமூலரின் வழித்தடத்தில் பலநூறு ஆண்டுகளுக்குப் பின, வேதத்தின் உட்பொருளை அறிந்து கொண்டவர் வேதாத்திரி மகரிசி.

“தன்னை அறிந்தால் தனக்கொரு கேடில்லை” என்ற உண்மையை உலகெங்கும் பரப்பிட, “உலக சமுதாய சேவா” சங்கத்தினை நிறுவி, பயிற்சி அளித்து வருகிறார்.

மாந்தருக்குக் கொடுக்கப்பட்டிருக்கும் உடல் நிலையற்றது எனினும் அதன் உள்ளே இருக்கின்ற உயிர் என்றும் நிலையான உறுதிப்பொருள் என்கிறார் திருமூலர்.

உயிர் எங்கே இருக்கிறது? எப்படி இருக்கிறது? விஞ்ஞானம் விளக்கம் தரவில்லை. ஆனால் திருமந்திரம் உயிரைப்பபற்றி அன்றே குறிப்பிட்டுள்ளது.

மேவிய சீவன் வடிவது சொல்லிடில்
கோவின் மயிரொன்று நூறுடன் கூறிட்டு
மேவிய கூறது ஆயிரம் ஆயினால்
ஆவியின் கூறு நூறாயிரத்து ஒன்றே.

உடம்பில் இருக்கும் உயிரின் வடிவானது, ஒரு பசுவின் மயிரொன்றை நூறாக கூறிட்டு அதில் ஒன்றை எடுத்து அதை ஆயிரமாக கூறுசெய்து. அந்த ஆயிரத்தில் ஒன்றின் அளவே உயிரின் அளவு.

இந்த நுட்பமான உயிரில் இறைவன் உள்ளான் என்றும். அந்த இறைவனை தவத்தின் மூலம் அறியலாம் என்றும் திருமூலர் கூறுகிறார்.

ஏனோர் பெருமையன் ஆயினும் எம்மிறை
ஊனே சிறுமையின் உட்கலந்து அங்குளன்
வானோர் அறியும் அளவல்லன் மாதேவன்
தானே அறியும் தவத்தின் அளவே.

நிலையாமையை உடைய இவ்வுடல் இருக்கும்போதே அதனை உறுதிப்பொருளான உயிரைத் திடப்படுத்துவதற்கு நன்கு, விரைந்து பயன் படுத்திக் கொள்ள வேண்டும் என்கின்றார்

உயிரின் நிலைபற்றி முழுமையாக ஆராய்நது மிகச் சிலரே வெற்றி பெற்றுள்ளனர். உயிரை உணர்ந்தவர்களால் பிறருக்கு எடுத்துக் கூறமுடியவில்லை என்பது மகரிசியின் கருத்தாகும்.

- உயிர், உயிரின் மூலம், உயிர்தாங்கி, உயிரின் விளைவ இந்த இரகசியங்களை அனுபவப்புர்மாகத் தெரிந்து கொள்ளவோ, இவற்றை மற்றவாகளுக்கு விஞ்ஞான, மெய்ஞ்ஞான நுட்பங்களோடு எழுத்துக்கூறி விளங்கவைக்க முடியவில்லை.

என்று குறிப்பிடுகின்றார்

விஞ்ஞான வளர்ச்சி பண்டைய காலங்களில் வளர்ச்சி பெறாமையால் உயிரை உணர்ந்தாலும் முன்னோர்களால் எடுத்துச் சொல்ல இயலவில்லை. தற்காலத்தில் அதற்கான வாய்ப்புகள் அதிகளவில் உள்ளன என்பது மகரிசி கருத்தாகும்.

- உயிரையும், உயிரைப் பற்றிய மறைபொருளான நுட்பங்களையும் அறிந்து விளங்கக்கூடிய கல்வி முற்காலத்தில் போதிய அளவில் அமையவில்டீல. இன்றைய மக்களுக்கு விஞ்ஞான நுட்பம் எளிய முறையில் விளங்கிவரும் காலமாக, நமது காலம் விளங்குகிறது..

என்பது மகரிசியின் விளக்கமாகும்.

மனிதன் நெடுநாள் வாழ வேண்டுமெனில் உடல்நலம், மனநலம் தேவை என்பதை

“அண்டம் சுருங்கில் அதற்கோர் அழிவில்லை

பிண்டம் சுருங்கில் பிராணன் நிலைபெறும்

உண்டி சுருங்கில் உபாயம் பல உள

கண்டம் கறுத்த கபாலியும் ஆமே “ (திருமந்திரம் 735)

என்கிறார் திருமூலர்.

இக்கருத்தை மகரிசி எண்ணம் ஆராய்தல், ஆசை சீரமைத்தல், சினம் தவிர்த்தல், கவலை ஒழித்தல் என்ற நிலைகளின் முக்கியத்துவத்தை எடுத்தியம்புகிறார்.

உணர்ச்சி வயப்பட்ட நிலையிலிருந்த மனதை அமைதி நிலைக்கு கொண்டு வர தியானத்தை அறிமுகம் செய்து வைத்தார் மகரிசி.

உயிரின் மேல் மனம் செலுத்தும் போது உடல் முழுவதும் “ஜீவகாந்த சக்தி” பெருகுகிறது என்கிறார் மகரிசி.

உயிரின் இயக்கம் நம் உடலின் சீவகாந்தம். அதனுடைய தன் மாற்றம் பெற்று உடலில் நடைபெறக்கூடிய நிகழ்ச்சிகள் எல்லாம் நடந்து வருகின்றன.

மேலும், உடலில் இயங்கும் உயிர்மிக நுண்ணிய மூலக்குறிலிருந்த அலைகள்தான் மேலும் உடல் முழுவதும் இயங்கும் கோடிக்கணக்கான உயிர்துகள் சேர்ந்த ஒரு கோவைதான் நம்முடைய உயிர்.

இத்தகைய செயல்கள் யாவும் நமக்குள் உயிரின் இயக்கம் பற்றி சித்தரான சிவவாக்கியர், உயிரின் இயக்கத்தினைப் பற்றி

கூறுகின்றனார். நாம் உயிர்சக்தியை இழந்தால் பெற முடியாது என்கிறார்.

பசுவின் மடியில் இருந்து பெற்ற பாலை மீண்டும் அதன் மடியில் செலுத்த முடியுமா, என்றால் முடியாது.

அதைப்போலவே நம் உடலில் இருந்து உயிர் பிரிந்தால் அதை மீண்டும் உடலில் சேர்க்க முடியாது என்று விளக்க, இதனைப் போலவே உயிரின் இயக்கம் உள்ளது என்கிறார் சித்தர்.

உயிரின் மறைபொருளாகவே உள்ளது. உயிர் என்பது ஒரு இயக்க நிலையமாகும். அதிலிருந்து வெளி வந்து விரிந்து கொண்டேயிருப்பது விரிவு அலையாகும். அதுதான் சீவசக்தி என்பதாகும்.

உயிர்ச் சூழல் முறையாக இயங்கிக் கொண்டேயிருக்கும் போது ஏற்படக்கூடிய ஒரு காந்த அலை சீவ காந்த அலையாக மாறும்போதுான் "உணர்வு என்றும் "உயிர்" என்றும் சொல்கிறோம்.

உயிர் என்றால் எப்போதும் நிலையாக இருந்த பொருள் இயங்கியதோ அதுவேயாகும். உடலை இயக்குவது உயிரின் வேலையாகும்.

உடலைப் பாதுகாத்து அணுஅடுக்குச் சீர்குலையாமல் தடை வரும்போது, அதை உணரும்போது, மனமாக விரியும்போது உணர்ந்த தடையை நீக்க முயல்வது இரண்டாவது வேலையாகும்.

தடையால் உணர்ச்சி ஏற்படவே அரனைப் போக்கப் பொருள் அல்லது சூழ்நலை அல்லது நட்பு வேண்டும். அப்போது தேவை உருவாகிறது.

உணர்ச்சியாக மாறி நிற்பதும் தேவையாக எழுந்து நிற்பதும் உயிர்தான். தேவை ஏற்படவே அதனைச் சமன்செய்ய் முயற்சி தோன்றுகிறது.

முயற்சியின் காரணமாகச் செயல் மலர்கிறது. செயலானது இயற்கை ஒழுங்கமைப்பின் படி விளைவு தருகிறது.

விளைவை உயிரானத அனுபோகமாகப் பெறுகிறது. அனுபோகத்திலிருந்து அனுபவத்தைப் பெறலாம் என்ற அனுபவத்தை உயிர் பெறுகிறது.

உயிர் மேற்கொள்ளும் ஆராய்ச்சியின் பயனாகத் தெளிவு பெறுகிறது.

இறுதியாக எல்லவற்றையும் தொகுத்து ஒரு முடிவினையும் உயிர் செய்து வைத்துக் கொள்கிறது.

எனவே, உயிரே உணர்ச்சி, தேவை, முயற்சி, செயல், விளைவு, அனுபோகம், அனபவம், ஆராய்ச்சி, தெளிவு, முடிவு என்ற பத்துக்கட்டமாக உயர்ந்து படர்ந்து நிற்கிறது.

எனவே, உயிரனது படர்க்கை நிலை ஆற்றல்தான் மனமாகும்.

உயிருக்கு ஏற்பட்ட தடையே மனம் என்று ஒன்று உண்டாகக் காரணமாக இருக்கிறது. உயிரே மனமாகிறது.

அதுவே பத்துப் படித்தளமாக உள்ள படர்க்கை நிலை ஆற்றலே-உயிரின் ஆற்றலே-உயிரே மனமாக இருக்கிறதது

"உயிர் எனும்சக்தி உயர்ச்சியில் மனமாய்

ஒடுங்கி தன்மூலம் உணர்ந்திடம் பரமாம்

உயிர்-பரம்-அறிவு ஒன்றே பொருளாய்

உணர்வு ஒழிவு நிலைகளில் மாறுதல்" (ஞா.க.)

உயிர் வளம் பெருக, விந்து கெட்டிப்பட, தீயது அழிய நோயது ஒழிய காயகல்பப் பயிற்சியினை மக்களுக்கு வழங்கியுள்ளார் மகரிசி.

கை கால்களை ஆட்டி, குதிரை முத்திரை கூட்டி, காம வாயுவை நீட்டி, கபாலம் வரையில் ஏற்றி, காயமுழுதும் ஒட்டு அதுவே காயகல்பம். மருந்து அல்ல. பயிற்சி.

"கறைபோக்கி வித்ததனை உறையச் செய்யும்

காயகல்பப் பயிற்சியினால் உளநோய் நீங்கும்

நிறைமனமும் ஈகையோடு பொறுமை கற்பு

நேர்நிலையும் மன்னிப்பும் இயல்பாய் ஓங்கும். (ஞா.க.524)

இதனை திருமூலர்,

பிண்டத்துள் உற்ற பிழக்கடை வாசலை

அண்டத்துள் உற்று அடுத்தடுத்து ஏகிடில்

வண்டு இச்சிக்கும் மலர்க்குழல் மாதரார்

கண்டு இச்சிக்கும் நற்காயமும் ஆமே" (திருமந்திரம் 736)

மூலாதாரத்தில் உள்ள காம வாயுவை கபாலத்தில் ஏற்றிட, வண்டு விரும்பும் மலர்களைச் சூடிய மகளிர்கள் ஆசைப்படும்படியான அழகிய தோற்றத்தைப் பெறுவர் என்பது இதன் பொருள்.

சித்தர்கள் இறையை உணர்நத் வெளியைப் பல்வேறு வகைகளில் கூறுகின்றனர்.

"வெளியை அறிந்து வெளியினடுவே

ஒளியை அறியினுளி முறயாமே

தெளிவை அறிந்து செமுநந்தியாலே

வெளியை அறிந்தனன் மேலறியேனே.

என்று திருமந்திரத்தில் திருமூலர் கூறுகின்றார்.

வேதாத்திரி மகரிசி அவர்கள் இறை நிலை உணர இன்றைய காலத்திற்கு ஏற்ப காந்தத்தைப் பற்றிய ஞானம் உதவும் எனக் கூறுகின்றார்.

"எந்த ஒன்றறிந்திடில் இறைவன் முதல் உயிர்வரை

எல்லாவற்றையும் உணர்த்துமோ அதுவே காந்தமாம்

முந்தையோர்கள் அகத்தவத்தால் முற்றுணர்ந்த போதிலும்

மொழிவதற்கு உவமையன்றி முட்டி மோதி நின்றனர்

இந்த நாள் விஞ்ஞானமோ ஏற்றம் பெற்றதாலதை

இயங்கிடும் மினசாரம் மூலம் எல்லார்க்கும் உணர்த்தலாம்

அந்தமாம் மெய்ஞ்ஞானத்தோடு அணுவின் ஞானம் இரண்டையும்

அறிந்து உய்ய பாலம் போன்ற ஆக்க் ஞானம் காந்தமே."

தமிழ் வேதத்தின் முதல்வரும் வேதாத்திரியும் மானுடம் உள்ளவரை சமூகப் புரட்சியை ஏற்படுத்திக் கொண்டே இருப்பார்கள்.

மன அமைதியின் மையம் உடல் நலம். அன்றாட கடமைகளில் உடற்பயிற்சியை ஒன்றாக்க வேண்டும். இதனைத் திருமூலர்

"உடம்புளே உத்தமன் கோயில் கொண்டான் என்று

உடம்பினை யான் இருந்து ஓம்புகின்றேனே"

என்கிறார்.

உடம்பினை வளப்படுத்தினால் உயிர்தங்கும் என்பதற்கு "மனவளக்கலை" மன்றத்தில் உடறபயிற்சியை முதன்மைப்படுத்தினார் மகரிசி.

மனிதர்களைப் புனிதராக்கும் முய்சியில் திருமூலரோடு இணைந்து வழி காட்டுகின்றார் வேதாத்திரி மகரிசி.

இன்று மனத்தூய்மையும் மேன்மையும் அடையும் “மனவளக்கலை” மன்றம் ஊரும் உலகும் போற்ற இயங்கி வருவதைக் காணமுடிகிறது.

8. கனவில் வந்த போகர்

போகர் பதினெண் சித்தர்களுள் ஒருவர் ஆவார். இவர் நவசித்தர்களுள் ஒருவரான காளங்கி நாதரின் சீடர் ஆவார்.

போகரின் சீடர் புலிப்பாணி ஆவார். சீனாவில் போகர் போ-யாங் என்று அறியப்படுகிறார்.

போகர் ஏழாயிரம், 700 யோகம், போகர் நிகண்டு மற்றும் 17000 சூத்திரம் ஆகிய நூல்கள் போகரால் இயற்றப்பட்டவை என்று கருதப்படுகின்றன.

பழநி முருகன் சிலை

பழநி முருகனின் மூலத்திருவுருவச் சிலை போகரால் செய்யப்பட்டது என்று நம்பப்படுகிறது. இச் சிலை நவபாடாணங்களைக் கொண்டு செய்யப்பட்ட நவபாடாணச் சிலை என்று கருதப்படுகிறது.

இச்சிலை தற்போது சேதமடைந்து விட்டது. எனவே இச்சிலைக்கு அபிடேகம் நடைபெறுவதில்லை.

நவ பாசான சிலை சேதமடைய காரணம் சிலையின் பாடாணம் மருத்துவக் குணமுள்ளதால், பூசை செய்பவர்கள் சிலையைச் சுரண்டி சித்த மருத்துவர்களுக்கும் பிறருக்கும் பணத்திற்கு விற்றதாக பரவலாகப் பேசப்படுகிறது்

போகர் நூல்கள்

போகர் நூல்கள் பல உள்ளன.அவற்றுள் சில நூல்களே அறியப்பட்டுள்ளன.

- போகர் 12000
- சப்த காண்டம் 7000
- நிகண்டு 1700
- வைத்தியம் 1000
- சரக்குவைப்பு 800
- செனன சாகரம் 550
- கற்பம் 360
- உபதேசம் 150
- இரணவாகமம் 100
- ஞானசாராம்சம் 100
- கற்ப சூத்திரம் 54
- வைத்திய சூத்திரம் 77
- முப்பு சூத்திரம் 51
- ஞான சூத்திரம் 37
- அட்டாங்க யோகம் 24
- பூசா விதி 20
- போகர் 7000
- **சித்தர் போகர் ஜீவசமாதி - பழனி**
-

பழனி ஸ்ரீ தண்டாயுதபாணி சுவாமி திருகோயிலின் உள்ளே தென்மேற்கு மூலையில் அமைந்துள்ளது சித்தர் போகரின் ஜீவசமாதி.திருநந்தி தேவரே பல்வகை பிறப்புற்று பின் போகராக தோன்றினார் என்பார்கள்.

இவரது காலம் 5000 ஆண்டுகளுக்கு முன்பு.தனது சீடர் புலிப்பாணி சித்தருடன் பழனி மலையில் மேல் தான் அமைத்த

திருக்கோயிலின் கண் நவபாஷான கட்டினால் தண்டாயுதபாணி சுவாமியின் அருள் திருமேனியை நிறுவினார்.

ஆண்டவன் வலக்கரத்தில் உள்ள தண்டம் ஞானத்தின் சின்னமாக கருதபடுகிறது. இதுவே போகர் ஜீவ சமாதி அடைந்த இடம்.

இங்கு இன்றும் போகர் வழிபட்ட அருள்மிகு புவனேஸ்வரி அம்மை, மரகதலிங்கம் , வலம்புரி சங்கு ஆகியவற்றை காணலாம். இச்சன்னதியில் இருந்து தண்டாயுதபாணி திருவடி நிலைக்கு ஒரு சுரங்க பாதை உள்ளது.

கடைசியாக இதன் வழியாக சென்ற போகர் திரும்பாமல் இதனுள் அமர்ந்துவிட்டார் என்பர் .

போகரை சமாதியில் வைத்தது அவரது சீடர்களில் ஒருவர் கோரக்க சித்தர் ...தன்னை பழனியில் சமாதி வைத்து நாகப்பட்டினம் செல்லுமாறு கோரக்கரை பணித்தார் போகர் ..

பின்பு சமாதியில் இருந்து எழுந்து நாகப்பட்டினம் சென்று கோரக்கரை சமாதியில் வைத்தார் போகர் ..என சித்தர் பாடல்கள் தெரிவிக்கின்றன ..போகர் அருள் இருந்தால் மட்டுமே பழனிக்கு வரவும் முருகன் அருளும் கிடைக்கும்

பதினெண் சித்தர்களில் ஒருவராகப் போற்றப்படும் போகர் பெருமான் ககன குளிகையின் மூலம் விண் வெளியில் பறந்து செல்லும் ஆற்றல் பெற்றவர்.

இவர் ஒருமுறை வெளிநாட்டிலுள்ள மூலிகைகளை ஆராய்ந்து அறிவதற்காக நாடு விட்டு நாடு பறந்து சென்ற போகர் சீன தேசத்தில் இறங்கி ஆய்வுகள் செய்யத் தொடங்கிய போது இவ்வுலகின் சாதாரண மக்களைப் போல் இல்லற வாழ்வில் ஈடுபட்டு அங்கேயே வசிக்கத் தொடங்கி விட்டார்.

இதனால் அவரிடமிருந்த அற்புத சக்திகளும், ஆற்றல்களும்,ஒவ்வொன்றாய் மறைந்தது.போகருடைய சித்திகள் எல்லாம் சக்தி இழந்து போய்விட்டது.

போகரிடம் சீடராக இருந்தவர்களில் “புலிப்பாணி”மிகவும் விசுவாசத்துடன் பிரியமான சீடனாக இருந்து வந்தார்.

அதனால் அவருக்கு அனைத்து விதமான சித்துக்களையும் கற்றுக்கொடுத்திருந்தார் போகர் பெருமான்.

தமது குருவிற்குத் தெரிந்த அனைத்து சித்துக்களும் தமக்கு கைவரப்பெற்ற பிறகும் கூட புலிப்பாணி தமது குருநாதரை விட்டுப் பிரியாமல் இருந்தார்.

அப்படிப்பட்ட நிலையில்தான் மூலிகைகளின் ஆய்விற்கு சீனாவிற்குச் சென்ற தமது குரு நெடு நாட்களாகியும் திரும்பாதது கண்டு கவலை அடைந்த புலிப்பாணி குருநாதரைத் தேடி ஆகாய மார்க்கமாய் புறப்பட்டுச்சென்று சீனாவில் கண்டறிந்து சக்தியிழந்த நிலையில் இருந்த அவரை மீட்டு தமது முதுகின் மீது ஏற்றிக்கொண்டு ஆகாய மார்க்கமாக தங்களது இருப்பிடமான பழனி மலை அருகிலுள்ள “கன்னி வாடி” மலையை வந்தடைகிறார்.

தனது குருவான போகர் சகல விதமான சித்திகளின் ஆற்றலை இழந்து சாதாரண மனிதனைப் போல் இருப்பதைக்கண்டு புலிப்பாணி துயரமுற்று கண்ணீர் விட போகர் அவரைத்தேற்றி சீடனே !எனது அருளாலும்,ஆசியாலும் உனக்கு அஷ்டமா சித்திகளும் கைவரப்பெற்றுள்ளன

நீ அவற்றை எனக்கு குருவாக இருந்து போதித்து விட்டால் நான் மீண்டும் எல்லாம் வல்ல சித்தனாக ஆகி விடுவேன் என்று கூற புலிப்பாணி ஆறுதல் பெற்றாலும்,தமது குருவை சீடனாக ஏற்க மனம் தடுமாறுகின்றார்.

அப்போது போகர் தந்தைக்கு உபதேசித்த முருகப் பெருமானின் கதையைச் சொல்ல புலிப்பாணி ஆறுதல் அடைகின்றார்.பிறகு இருவரும் ஒரு முடிவிற்கு வருகின்றனர்.

அதன்படி ஒரு தண்டம் ஒன்றை நிறுவி அதற்கு புலிப்பாணி அனைத்து கலைகளையும் உபதேசிக்க அதன் அருகில் அமர்ந்து போகர் கேட்டு எல்லா விதசித்துக்களும் மீண்டும் கைவரப்பெறுகிறார்.

அதன் பிறகு உலக மக்கள் அனைவரும் நோய்களில் இருந்து சுலபமாக நிவாரணம் பெரும் விதமாக “நவபாஷாண முருகன்” திரு உருவ சிலையை வடிக்கின்றார்.

அதற்கு புலிப்பாணியின் மூலமாக தாம் சித்து நிலையை அடைந்ததை நினைவு கூறும் பொருட்டு தாம் அமைத்த நவபாஷாண விக்ரகத்திற்கு போகர் “தண்டாயுதபாணி”என்று பெயர் சூட்டினார்.

இப் பெயரையே மக்களும் தங்களின் குழந்தைகளுக்கு முருகப் பெருமானின் பெயராக சூட்டி மகிழ்கின்றனர்.

போகருக்கு பின் அவரது சீடர் புலிப்பாணி சித்தர் அவரது பணிகளை தொடர்ந்து அங்கு செய்து வந்தார் .அவரது ஜீவ சமாதி பழனி மலை அடிவாரத்தில் அமைந்துள்ளது.

புலிப்பாணி ஆஸ்ரம் என்று இன்றும் அந்த இடம் அவரது கருவழி பரம்பரையினர் வழிபட்டு வரப்படுகிறது .

மேலும் புலிப்பாணி பரம்பரையினர் தான் இன்றும் பழனி மலையின் மேல் அமைந்துள்ள போகர் சமாதியில் பூஜைகள் செய்து வருகின்றனர் .

கனவில் ஒரு சித்தர் - வேதாத்திரி மகரிசி

“தூக்கமில்லை , விழிப்பில்லை , துரியதவம் ஆழ்ந்திருந்தேன்.
தோன்றினார் ஒருசித்தர், “தெரியுமா! நான்யார் ?” என்றார்.
நாக்கு எழவில்லை, “இவர் போகர்?” என நினைத்தேன்.
நறுக்கென்று பேசினார். உன் நான்கு பணிக்குதவுவேன்
"“ஆக்க வாழ்க்கை நெறியில் கர்மயோகம் பரவவிடல் ,
அறிவுத் திருக்கோயில் முடித்து, உன்வயிற்றுப்புண் ஆறவிடல் ,
ஊக்கமுடன் தொண்டாற்றும் உனக்குலகப் பரிசுவர
உதவிடுவேன் “ எனச் சொல்லி ஒரு நொடியில் மறைந்துவிட்டார்.”

--வேதாத்திரி மகரிஷி

போகர் தமக்கு என்னென்ன உதவிகள் செய்தார் என்பதை மகரிசி பட்டியலிடுகிறார்.

1. உலகெங்கும் கர்மயோகத்ததை பரவ சக்தி தந்தார்.
2. அறிவுத் திருக்கோயில் பணி முடிக்க உதவினார்.
3. மகரிசியின் வயிற்றுப் புண்ணை ஆற்றினார்.
4. ஊக்கமுடன் தொண்டாற்றுவதற்கு உலகப் பரிசு வர உதவினார். (உலக சமாதானப் பரிசு வரத்தான் போகிறது,)

"எப்பொருளை எச்செயலை எக்குணத்தை
எவ்வுயிரை ஒருவர் அடிக்கடி நினைந்தால்
அப்பொருளின் தன்மையாய் நினைப்போர் ஆற்றல்
அறிவினிலும் உடலினிலும் மாற்றங்காணும்;
இப்பெருமை இயல்பூக்க நியதியாகும்
எவரொருவர் குருவை மதித்து ஒழுகினாலும்
தப்பாது குருவுயர்வு மதிப்போர் தம்மைத்
தரத்தில் உயர்த்திப் பிறவிப்பயனை நல்கும்."(ஞா.க)

இயல்பூக்க நியதிப்படி சித்தர்கள் நினைவாகவே எழுதியும் பேசியும் வந்த வேதாத்திரி மகரிசியின் கனவில் போகர் வந்ததில் ஒன்றும் வியப்பில்லையே!

9. கோள்களை வென்ற சித்தர்கள்

இடைக்காட்டுச் சித்தர் தமிழ்நாட்டுச் சித்தர்களில் ஒருவர். இவர் இடைக்காடு என்றவூரில் வாழ்ந்தவர். இடையர் குடியிலே பிறந்தவர். இதனால் இடைக்காடுச் சித்தர் எனப் பெயர் பெற்றார்.

இடைக்காடு - முல்லை நிலம். இங்கு ஆடு மாடு மேய்ப்பவர் - இடையர் - கோனார் எனப்படுவர்.

இக்கோனாரையும் ஆடுமாடுகளையும், முன்னிறுத்தி பாடியதால் இப்பெயர் பெற்றார் என்பர். பதினெண் சித்தர் வகைக்குள் இவரும் அடங்குவார்.

இவரது வரலாறு துணியப்படவில்லை. இவர் கொங்கணர் என்பாரின் சீடர் என்றும் சித்தர்கள் காலம் எனப்படும் கிபி 10-15 ஆம் நூற்றாண்டினர் என்றும் கூறுகின்றனர்.

சங்க காலத்தினர் என்ற கருத்தும் நிலவுகிறது. இவரது பாடல்கள் இடைக்காட்டுச் சித்தர் பாடல் என்ற நூலிலே இடம்பெறுகின்றன.

இடைக்காடரின் ஞானசூத்திரம் 70 என்ற நூல் மிகவும் சிறப்புடையது. இவர் திருவண்ணாமலையில் சமாதியடைந்தார். ஜனன சாகரத்தில் சமாதியடைந்தார் என்று போகர் கூறுகிறார்.

கிரகங்களையும் வெல்லலாம்

இடைக்காடர் என்னும் சித்தர், சிறந்த சிவபக்தர். சிவனின் அருளால் எதிர்காலத்தை முன்கூட்டியே கணிக்கும் திறமை பெற்றிருந்தார்.

ஒருசமயம் எதிர்காலத்தில் மழை பொய்த்து, நாட்டில் வறட்சி உண்டாகும் என்பதைக் கணித்தார். மக்கள் நலனில் அக்கறை கொண்ட அவர், விஷயத்தை மக்களிடம் சொன்னார்.அதைக்கேட்டவர்கள் சிரித்தனர்.

""என்னது மழை பெய்யாமல் போய்விடுமா? வறட்சி தலைவிரித்து ஆடுமா? இந்தக் கதையை வேறெங்காவது போய் சொல்லுங்கள்," என அவரை ஏளனம் செய்தனர்.

"ஐயோ! மக்கள் என் பேச்சை கேட்க மாட்டேன் என்கிறார்களே... இவர்களை பஞ்சத்தில் இருந்து காப்பாற்றலாம் என நினைத்தால்,

இவர்கள் என்னை நம்பாமல் இருக்கும் போது என்ன செய்ய முடியும்? அவர்களின் விதி அவ்வளவு தான்," என்று நொந்து கொண்டார் இடைக்காடர்.

அவ்வேளையில் வறட்சியைச் சமாளிக்க ஒரு தந்திரம் செய்தார். தான் வளர்த்த ஆட்டுக்குட்டிகளுக்கு, எருக்கஞ்செடியை சாப்பிடப் பழக்கினார்.

மேலும், கேழ்வரகு தானியத்தை, மண்ணில் கலந்து சிறிய குடிசையையும் கட்டிக்கொண்டார். இடைக்காடரின் வித்தியாசமான இந்த செய்கையைக் கண்டு சிலர் கேலியும் செய்தனர்.

ஆனால், இடைக்காடர் சற்றும் சளைக்காமல் தன் பணியைச் செவ்வனே செய்தார்.

இடைக்காடர் சொன்னது போலவே, சில மாதங்களில் வறட்சி துவங்கியது. நெடுநாட்களாக மழை பெய்வதற்கான அறிகுறியே தெரியவில்லை.

முதலில் இடைக்காடர் சொன்னதை சாதாரணமாக நினைத்த மக்கள், அவர் சொன்ன உண்மையை அப்போது புரிந்து கொண்டனர்.

ஊரே வானம் பார்த்த வறண்ட பூமியாக மாறிவிட்டது. பயிர் பச்சைகள் அழிந்தன. ஒரு சாரார் பட்டினியால் மடிந்தனர்.

இவ்வேளையில் இடைக்காடர் தன் ஆடுகளுக்கு எருக்கஞ்செடிகளை சாப்பிடக் கொடுத்தார். அதைச்சாப்பிட்ட ஆடுகள் அரிப்பு தாங்காமல், இடைக்காடர் கேழ்வரகைக் குழைத்துக் கட்டிய குடிசையில் உரசின.

அப்போது, கேழ்வரகு கீழே சிந்தியது. அதைக் கொண்டு கூழ் காய்ச்சி சாப்பிட்டு பசியாறினார் .

இச்சமயத்தில், வானுலகில் சஞ்சாரம் செய்த கிரகங்கள், வறட்சியான இடத்தில் இடைக்காடர் கேப்பைக்கூழ் காய்ச்சுவதையும், ஆடுகள் சிரமமின்றி இருப்பதையும் கண்டு ஆச்சரியப்பட்டு அவரது குடிசைக்கு வந்தனர்.

அவர்களை வரவேற்ற இடைக்காடர், ""ஐந்தாறு ஆண்டுகளாக மக்களை வாட்டி வதைக்கும் பஞ்சம், இன்னும் தொடர்ந்தால் என்னாகும்? பூலோக வாழ்வே ஸ்தம்பித்துப் போகுமே! இருக்கிற மக்களையாவது காப்பாற்றியாக வேண்டுமே!" என நினைத்தார்.

அவரது மூளை வேகமாக வேலை செய்தது. உடன் அவர், "கிரகங்களே! நீங்கள் இன்றிரவு என் குடிசையில் தங்க வேண்டும்," என வேண்டினார்.

கிரகங்களும் ஒப்புக்கொண்டன. இடைக்காடர் அவர்களுக்கு ஆட்டுப்பாலும், கேப்பைக் கூழும் தந்து உபசரித்தார்.

அவற்றைப் பருகிய கிரகங்கள், உண்ட மயக்கத்தில் படுத்துவிட்டனர். அவர்கள் அயர்ந்து தூங்கிய வேளையில், தன் சக்தியால் அவர்களை மழை பெய்வதற்கு எந்த கிரகநிலை இருந்தால் சரியாக இருக்குமோ, அதற்கேற்ப படுக்க வைத்து விட்டார்.

அவ்வளவு தான்! மழை கொட்டோ கொட்டென கொட்ட ஆரம்பித்து விட்டது. பூமி, வறட்சி நீங்கி பசுமையாக மாறியது. சிறிது நேரம் கழித்து எழுந்த கிரகங்கள், அனல் காற்றுக்கு பதிலாக குளிர்க்காற்று வீசுவதையும்,
பெருமழையால், தண்ணீர் பெருகி ஓடுவதையும் கண்டனர்.

தங்களை மாற்றி வைத்தது இடைக்காடராகத்தான் இருக்கும் என்றெண்ணியவர்கள் அவரைத் தேடினர். அவரோ ஆழ்ந்த தியானத்தில் இருந்தார்.

இவரை இப்போதைக்கு எழுப்ப முடியாது என உணர்ந்து கொண்ட நவக்கிரகங்கள் தங்கள் இருப்பிடத்திற்கு திரும்பிவிட்டனர்.

சமயோசிதமாக செயல்பட்டு பஞ்சம் போக்கிய இடைக்காடரை வணங்கிய கேட்டனர்.மக்கள், தங்கள் செய்கைக்கு மன்னிப்பு கேட்டனர்.

கதையை விட்டு விடுங்கள். நவக்கிரகங்களையும்

நம் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரலாம். இதுதான் கருத்து.

சூரிய குடுமபத்தின் ஒன்பது கோள்களும் ஒன்பது வட்டப பாதைகளில்ஓர் ஒழுக்க நியதிப்படிச் சுற்றுகின்றன.

இதில் நாம் வாழும் பூமி மூன்றாவது கோளாகும். புமிக்கு முன்னும் பின்னுமாக மற்ற் கோள்கள் சுற்றுகின்றன.

நவகோள்களும் நமக்கு நன்மையே செய்ய ஒரே வழி அந்த கோள்களோடு நட்புறவு கொள்வதே.

நண்பனுக்குக் கெடுதல் செய்ய முடியுமா?

கோள்களிலிருந்து வரும் கதிவீச்சுக்களின் நிறம், நம் உடம்பில் தொடர்புடைய பாகம், அந்தக் கோள்கனிளனால் நாம் பெறும் பயன்கள் என ஒன்றுபடுத்தி, அக்கதிர்களை நன்கு வாங்கி நமக்கு எப்போதும் நன்மையே செய்யட்டும் எனத் தியானிக்கிறோம்.

கோள்	கதிர்வீச்சு திறம்	தொடர்புடைய பாகம்	பயன்கள்
சூரியன்	ஆரஞ்சு	எலும்பு	செல்வம், கீாத்தி, நீண்ட ஆயுள், வாழ்க்கை வளம்.
புதன்	பச்8சை	தோல்	வெற்றி, மகிழ்ச்சி, செல்வாக்கு
சுக்கிரன்	வெண்மை	வித்து,ஜீவசக்தி.	புகழ், உடல்நலம், மனஅமைதி
சந்திரன்	வெண்மை	இரத்தம்	உடல்நலம், நட்பு, வெற்றி

செவ்வாய்	இளஞ்சிவப்பு	கொழுப்பு, மஜ்ஜை	தைரியம், அச்சமின்மை, உடல் பலம், பதிய புதிய கண்டுபிடிப்பு
குரு (வியாழன்)	பொன்னிறம்	மூளை	கல்வி, திறமை, அறிவு,மேன்மை, வெற்றி
சனி	சாம்பல்	நரம்புகள்	நீண்ட ஆயுள், உயர் புகழ், செல்வம்.
ராகு, கேது	கறுப்பு	மனநிலை	வாழ்க்கையில் நிறைவு, உடல் நலம், மகிழ்ச்சி, வெற்றி.

இக்கலையை வேதாத்திரி மகரிசி நவக்கிரக தவமாக மனவளக்கலையில் சொல்லித்தருகிறார்.

பஞ்சபூத நவக்கிரகத் தவம் என்பது நவக்கிரக வழிபாடு போன்றது. மனதை கோள்கள் மீது வைத்திருந்தால் போதும்.

மனம் அதில் ஈடுபடும்பொழுது அதனுடைய தன்மையில் உயிர்க்கலப்பு பெறும். அதனால் அதிலிருந்து வரும் தீமைகள் தவிர்க்கப்படும். நன்மைகள் அதிகமாகும்.

.

இது "இயல்பூக்க நியதி" என்ற முறையில் எதைப் பற்றி மனம் எண்ணிக் கொண்டிருக்கிறதோ அதற்குத் தகுந்தாற்போல் அதனுடைய தன்மையும் மனத்தினுடைய தன்மையாக மாற்றம் பெறும்.



Top of Form

அண்டத்தையும் பிண்டத்தையும் இணைப்பது தொண்டம் என்று *ஸ்ரீவித்யையில்* குறிப்பிடுவார்கள். அது போல அண்டத்தையும் பிண்டத்தையும் இணைக்கும் தொண்டனாக யோகம் திகழ்கிறது.

நிலம், நீர், நெருப்பு, காற்று, விண் என்ற ஐந்து பௌதிகப் பிரிவுகளின் மீது மனத்தைச் செலுத்தி தவம் செய்வதே பஞ்சபூத தவம். ஐந்து பௌதிகப் பிரிவுகளிடையேயும் நமது அறிவையும், மனத்தையும், சீவகாந்த சக்தியையும் செலுத்தி, அவற்றிலிருந்து வருகின்ற காந்த ஆற்றல்களை நமது சீவகாந்த ஆற்றலுடன் இணைத்து, நமக்கு வலிமையைத் தேடிக் கொள்கின்ற தவமே பஞ்சபூத தவம்.

பஞ்சபூத தவத்தில் முதலில் மண் மீது தவம் இயற்றுகிறோம். அதனால் மண்ணிலிருந்து வரும் தீமைகளை விலக்கி நன்மைகளையே பெறுகிறோம்.

மண்ணைப் பற்றிய இரகசியங்களைத் தெரிந்து கொள்கிறோம். அதை வாழ்வுக்கு வெற்றியும் ஆக்கமும் அளிக்கத் தக்க வழிகளில் பயன்படுத்திக் கொள்ளலாம்.

இதைப்போல நீர், நெருப்பு, காற்று, விண் என்ற பௌதிகப் பிரிவுகளில் மனம் செலுத்தி தவம் செய்கிறோம். அவற்றிலிருந்து வரும் தீமைகளையும் போக்கிக் கொள்ளகிறோம். அவற்றிடமிருந்து காப்பைப் பெறுகிறோம்.

பஞ்சபூதத் தவத்திலே நாம் தெரிந்து கொள்ள வேண்டியது, இந்த உலகம் முழுவதிலுமான அனைத்துப் பொருட்களும் பஞ்ச பூதங்களாலானது என்பது. பூதம் என்ற சொல் பௌதிகத்தை குறிப்பது.

பௌதிகம் என்பது தோற்றங்களுக்குப் பெயர். பௌதிகம் என்ற தோற்றப் பொருட்களை நிலம், நீர், வெப்பம், காற்று, விண் என்ற ஐந்து பிரிவுகளாகப் பிரிக்கலாம்.

பஞ்சபூத தவத்தின் பயன்கள்:

- எந்தப் பொருளோடும் சக்தியோடும் இணைந்து பயன் கொள்ள முடிகிறது.
- அந்தப் பொருள் சக்தியைப் பற்றிய முழு விளக்கமும் தெளிவும் பெற்றுக் காப்பு பெற முடிகிறது.
- உடலுக்கும், உயிருக்கும், ஊக்கமும் ஆக்கமும் கிடைக்கிறது.
- நோய் எதிர்ப்பு சக்தி கூடுகிறது.

நவக்கிரக தவம்:

சூரியன், புதன், வெள்ளி, சந்திரன், செவ்வாய், வியாழன், சனி, இராகு, கேது ஆகிய ஒன்பது கோள்களின் மீது மனத்தைச் செலுத்தி தவம் செய்வதே நவக்கிரக தவம்.

ஒவ்வொரு கோளும் பல இரசாயனங்களைக் கொண்டு, தன்மாற்றம் அடைந்ததற்குத் தக்கவாறு அலை வீசிக்கொண்டே இருக்கின்றது.

இரசாயன அம்சங்கள் அமைந்த அந்த அலை எந்தப் பொருள் மீது வீசுகிறதோ, அந்தப் பொருளிலே அந்த அலையின் தன்மைகள் அத்தனையும் தூண்டிவிடும்.

ஒன்பது கோள்களின் தன்மைகளும், அதன் அலைகள் மூலம், நமக்கு வந்து கொண்டேயிருக்கின்றன.

பஞ்சபூத நவக்கிரகத் தவத்தின் பயன்கள்:

- நவக்கிரகத் தவத்தினால் நவக்கிரகங்களிலிருந்து வரும் காந்த அலைக் கதிர் வீச்சுகளினால் விளையும் தீமைகளைப் பெரும்பாலும் குறைத்துக் கொள்ளவும்,தடுத்துக் கொள்ளவும் முடிகிறது.
- மனத்தின் விரியும் தன்மை உச்சநிலையை அடைகின்றது.

- மனத்திற்கு தூய்மையு பெருமளவில் கிடைக்கின்றது.

கேள்வி : சுவாமிஜி, பஞ்சபூத நவக்கிரகத் தவங்களை யார் வேண்டுமானாலும் இயற்றலாம் என்று சொல்கிறீர்கள். அதுவும் துரியாதீதம் போன்றதுதானே? அதை எப்படி எல்லோரும் இயற்ற முடியும்?

மகரிஷியின் பதில் : துரியாதீதத் தவம் என்பது மனதை உயிரில் ஒடுக்கி பிறகு உயிரை பரத்தில் ஒடுக்க வேண்டும். இங்கு மனத்தின் அலை வேகம் குறைந்து இயற்கையினுடைய அலை வேகத்திற்கு (Natural Frequency) இறைநிலையாகிய இருப்பு நிலைக்கு வந்து விடும்....

பஞ்சபூத நவக்கிரகத் தவம் என்பது நவக்கிரக வழிபாடு போன்றது. மனதை கோள்கள் மீது வைத்திருந்தால் போதும். மனம் அதில் ஈடுபடும்பொழுது அதனுடைய தன்மையில் உயிர்க்கலப்பு பெறும். அதனால் அதிலிருந்து வரும் தீமைகள் தவிர்க்கப்படும். நன்மைகள் அதிகமாகும்.

இது "இயல்பூக்க நியதி" என்ற முறையில் எதைப் பற்றி மனம் எண்ணிக் கொண்டிருக்கிறதோ அதற்குத் தகுந்தாற்போல் அதனுடைய தன்மையும் மனத்தினுடைய தன்மையாக மாற்றம் பெறும்.

நவக்கிரகங்களிலிருந்து வீசும் கதிர்வீச்சுகளினால் ஏற்படும் தீமைகளைப் பெரும்பாலும் குறைத்துக் கொள்ளவும், தடுத்துக் கொள்ளவும், அவற்றுடன் முடியும்.

உயிர்க்கலப்புப் பெறுவதால் நன்மையே உண்டாகி வாழ்வில் எல்லா வளங்களும் நலனும், பலனும் பெற்று இனிமை, வெற்றி, மகிழ்சசி. நிறைவு அமைதியுடன் வாழ முடிகிறது.

உடல் நலம் காக்கும் - பஞ்சேந்திரயத் தவம்

இயற்கை வளம் சேர்க்கும் - பஞ்சபுத தவம்

கோளறுகளை நீக்கும் - நவக்கிரக தவம்

என்று பல்வேற தவங்கள் மகரிசியின் மனவளக்கலையில் சொல்லித் தருகிறார்கள்.

10. அழுகணி சித்தரும் வேதாத்திரி மகரிசியும்.

இவர் பாடல்கள் அனைத்தும் ஒப்பாரி போல அமைந்து இருப்பதால் அவருக்கு அழுகணி சித்தர் என பெயர் வந்திருக்கலாம் என கூறுவார் .

இவர் ஒரு வார்தரதைக்கு முற்றிலும் மாறுபட்ட இரு பொருள் வரக்கூடிய விதமாக எழுதுவதில் வல்லவர்.

இவருடைய பாடல்களில் யோகம் பற்றிய ஆழமான கருத்துக்களே அதிகமாக உள்ளது. இந்தக் கருத்துக்கள் அனைத்தும் படிப்பவர்களுக்கு புரிகிறதோ இல்லையோ பாடல்களின் சந்தம் படிப்பவர்களை மயக்கும் விதத்தில் உள்ளது என்பது என்னமோ உண்மைதான்ப

அழுகணி சித்தர் பாடல்கள் முறையே

"பையுரிலேய்ருந்து பாழுரிலே பிறந்து
மெய்யூரில் போவதற்கு வேதாந்த விடறியேன்
மெய்யூரில் போவதற்கு வேதாந்த வீடறிந்தால்
பையூரும் மெய்யூரும் என் கண்ணம்மா
பாழாய் முடியாதோ "

இவர் பாடல்களில் இருக்கும் அழகையும் , அணியையும் காரணமாக் வைத்து அவருக்கு அழகணி சித்தர் என பெயர் வந்து அதுவே மருவி அழகுனி சித்தர் என மாரியதாக் கூறுவார்.

இவர் பாடல்கலில் அழுகன்னி ,தோழுகன்னி மூலிகைகளை மிகுதியாக கையாண்டுள்ளார்.

இவர் பெயரில் 32 கலிதாழிசைகள் உள்ளன . வாசியோகம் ,காய சித்தி முறை பற்றி இவர் பாடல்கள் விளக்குகின்றன.

இவர் அழுகணி சித்தர் பாடல், ந்ஜான சூத்திரம் , அழுகன் யோகம், அழுகன் வைத்தியம் போன்ற நூல்களை படைத்துள்ளார்

இவர் நாகப்பட்டினத்தில் உள்ள சிவ பெருமான் கோயில் வளாகத்தில் சமாதி அடைந்துள்ளார்"

அழுகணி சித்தர் பாடல்களில் " காட்டானை மேலேறிக் கடைத்தெருவே போகையிலே...." என்ற பாடலை மகரிசி அடிக்கடி எடுத்தாள்வர்கள்.

"காட்டானை மேலேறிக் கடைத்தெருவே போகையிலே
நாட்டார் நமைமறித்து நகைபுரியப் பார்ப்பரன்றோ
நாட்டார் நமைமறித்து நகைபுரியப் பார்த்தாலும்
காட்டானை மேலேறி என் கண்ணம்மா
கண்குளிரப் பாரேனோ. "

தன்னை வெளிக்காட்டாத அறிவைப் பற்றிக்கொண்டு, வீடுபேறு எனும் கடை நிலையை அடைய முயற்சி செய்யும்போது, மயக்க நிலையில் உள்ள ஐம்புலன்கள் எங்களை மீறி, உன்னால் வீடுபேறு அடையமுடியுமா என்று தடுக்க முயற்சி மேற்கொள்ளும்.

இருந்தாலும் நான் அறிவின் துணையோடு நிச்சயமாக வீடுபேறு அடைந்தே தீருவேன்.

ma\

மகரிசி விளக்கம்

தன்முனைப்பு (Ego) நீங்க வேண்டுமானால், அதன் தன்மை என்ன? அது எவ்வாறு செயல்படுகிறது என்பதையெல்லாம் ஆராய்ந்து அறிந்து கொள்ள வேண்டும்.

எங்கிருந்து உற்பத்தியாகி எழுகிறது அந்தத் தன்முனைப்பு?

நீண்ட காலமாக உணர்சசி நிலை உயிர்களாகத் தோன்றிய காலத்திலிருந்து பரிணாமத்தில் தொடர்ந்து தன்முனைப்புத் துளிர் வந்து கொண்டேயிருக்கிறது.

மனிதனிடம் வந்த பிறகு தான் இது “தன் முனைப்பு” என்பதாகத் தெரிகிறது. இருந்தாலும் நீங்கள் தன்முனைப்பற்ற நிலைக்குப் போவதற்கு முயலுகிறீர்கள்.

அப்படி முயலும் போது, இது வரை எத்தனை கோடி எண்ணங்கள் பதிவாகியுள்ளனவோ அவையெல்லாம் அந்நிலைக்குப் போக வொட்டாமல் உங்களைத் தடுக்கும். வினைப்பயன் தடுக்கிறது என்னலாம்.

தன் முனைப்பு நீங்கி, பரம் பொருளாகவே இருக்கக் கூடிய அறிவானது அந்தப் பரம் பொருளினால் லயமாவதற்காக விரும்பிப் போகும் போது, அந்தப் பாதையிலே போக வொட்டாமல் தடுத்துத் தூக்கித் தூக்கி வெளிப்புறம் எறிகிறது எது? மேலே சொல்லப்பட்ட பதிவுகளாகிய வினைப் பயனேதான்.

இந்த உண்மையை அழுகணிச் சித்தர் மிக அழகாகச் சொல்லயிருக்கிறார்.

காட்டானை மேலேறிக்
கடைத்தெருவே போகையிலே
நாட்டார் நமைமறித்து

நகைபுரியப் பார்ப்பரன்றோ
நாட்டார் நமைமறித்து
நகைபுரியப் பார்த்தாலும்
காட்டானை மேலேறி
என் கண்ணம்மா
கண்குளிரப் பாரேனோ?”

என்பது அவரது பாடல்.

கண்ணம்மா என்பது அறிவு. காட்டானை என்ற வார்த்தைக்கு இங்கே காட்டுயானை என்பது பொருளன்று.

அது காட்டான் என்ற சொல்லில் இருந்து வந்தது. அதாவது, ஒருவன் இருக்கிறான், மற்றவர்கள் பார்க்கும் விதமாக அவன் இருக்க வில்லை. புலன்களாலே பார்க்கும் அளவக்கு அவன் இல்லை என்று அர்த்தம்.

எனவே காட்டான் என்றால் அரூபி என்று எடுத்துக்கொள்ள வேண்டும். காட்டான் என்ற அரூப நிலை இரண்டுக்கு உண்டு. ஒன்று அறிவு. இன்னொன்று பிரம்மம். இங்கே அரூபியாக உள்ளது அறிவு.

ஐ மேலேறி என்றால் - ஐந்து புலன் உணர்ச்சிகளையும் தாண்டு என்று எடுத்துக்கொள்ள வேண்டும். கடைத்தெருவே போகயைிலே என்பதற்கு என்ன நேரான பொருள்?

பிருதிவி, அப்பு, தேயு, வாயு, ஆகாசம் என்ற ஐந்து புதங்களிலுமிருந்து எழுச்சி பெறக்கூடிய சுவை, மணம், ஒளி, ஒலி, அழுத்தம் அல்லது உருவம் ஆக ஐந்து நிகழ்ச்சிகளையும் தாண்டிக் கடைசியிலே உள்ள இறை நிலையை நோக்கி ஆன்மீகப் பயணம் மேற்கொள்ளுமப போது என்று பொருள்.

கடைசிலை தான் பிரம்மம். சுத்வெளித் தெரு தான் கடைசி நிலை. கடை என்றது கடைசி நிலையை. பிரம்மத்தினையும் கடை

என்று சொல்லுவது அறிஞர்களுடையதாக வழக்காக இருந்து வருகிறது.

அதைத்தான் இராமலிங்கப் பெருமான் கூட "கடை என்று சொல்லக் கூடிய மறை பொருள் பிரம்மம்.

அதனுடைய நிலையை நல்ல முறையிலே எவ்வளவோ தெளிவாக விவரித்துக் கூறிவிடேன், எடுத்துக் காட்டிவிட்டேன்.

ஆனால் அதை விளங்கிக் கொண்டு பின்பற்ற யாருமே வரவில்லை! என்ற பொருளிலே–

"கடைவிரித்தேன்,
கொள்வாரில்லை.
கட்டிக் கொண்டேன்"

எனக் கூறிச் சென்றார்.

"காட்டான் ஐ மேலேறி
கடைத்தெருவிலே போகையிலே"

அதாவது அந்த பிரம்மத்தை நாடி, அங்கேயே போய் அடக்கம் பெற்று, தன் முனைப்பை நீக்க வேண்டும் என்ற எண்ணத்தோடு, அவனோடு போய் நிலைத்து விடவேண்டும் என்று போகும் போது,

நாட்டார் நமைமறித்து
நகைபுரியப் பார்ப்பரன்றோ?

இதற்கு என்ன அர்த்தம்? இந்த உலகத்திலே வாழ்ந்து பதிவு கொண்டு, வந்த எண்ணங்களெல்லாம் - அந்தப் பதிவுகளெல்லாம் இருக்கின்றனவே. அவை தான் நாட்டார்.

அவைகளெல்லாம் "ஓகோ, நீ எங்களையெல்லாம் மீறிப் போய் விட முடியுமா?" என்று எள்ளி நகையாடுவது போல் குறுக்கிடும்.

நாட்டார் நமைமறித்து
நகைபுரியப் பார்த்தாலும்

அப்படி என்றால் ? எத்தனை கோடி எண்ணங்கள் குறுக்கிட்ட போதிலும்,

காட்டானை மேலேறி
என் கண்ணம்மா
கண்குளிரப் பாரேனோ?"

மனஉறுதியோடு, ஐந்தையும் தாண்டி மேலே ஏறி, கடைசியிலே உள்ள காட்டான் - என்னும் - அந்த அரூபமான நிலையிலே உள்ள பிரமத்தைக் கண்குளிர, அதாவது மனநிறைவு பெறுமளவிற்குப் பார்க்க மாட்டேனா? உணர மாட்டேனோ?

அழுகணிச் சித்தருடைய செய்யுளின் சாராம்சம் இதுதான்.

தன்முனைப்பை அடக்க வேண்டும் என்றால் நேரடியாக அந்தப் பிரம்மத்தை அறிந்து அதிலேயே அடங்கவிட வேண்டும்.

சரி, ஆனால் அது உடனே முடியுமா? அதற்காகச் சில பயிற்சிகள் வேண்டும். அதைத்தான் பதஞ்சலி முனிவர் யோக சூத்திரத்திலே நான்கு விமான பயிற்சி வேண்டும்என்று சொல்லியருக்கிறார்.

1. பிரத்யாகாரா,
2. தாரணா,
3. தியானம்,
4. சாமாதி

என்ற நான்கு நிலைகள், நான்கு பயிற்சி முறைகள், அவசியம் என்று அவர் சொலிலயிருக்கிறார்.

பிரத்யாகார என்றால் உலக விவகாரங்களிலேயிருந்து தன்னை விடுவித்துக் கொள்வது. எப்படி? உலக விவகாரங்களிலே மனம் போய்க் கொண்டே இருக்கிறது. இபபொழுது கேட்கத் தொடங்குகிறோம்.

“இன்னின்ன விதங்களிலெல்லாம் ஏன் நான் உழல்கிறேன்? ஓகோ, அது அன்று தேவையாக இருக்கிறது. எனவே அப்போது அதனோடு தொடர்பு கொண்டேன்.

அந்தப் பதிவு இபபோது இருக்கிறது. மீண்டும் அது வருகிறது. ஊக்கம் பெறுகிறது. அதே விதமான செயலைச் செய்யத் தூண்டுதல் கொடுக்கிறது.

ஆனால், இப்பொழுது அது தேவையில்லையே! எனவே அந்த ஈடுபாட்டை இப்போது நான் விட்டுவிட வேண்டியததானே?”
அதைதான்

“உறவிலே கண்ட
உண்மைநிலைத் தெளிவு
துறவு”

என்று நான் விளக்கி வருகிறேன்.

எந்தெந்த உறவு இருக்கிறதோ அந்தந்த உறவின் உண்மை நிலையைத் தெரிந்து கொண்டோமானல் துறவு தானாக வந்துவிடும்.

மனைவி, மக்கள்,பொருள் இவைகளிளெல்லாம் மனம் அடிக்கடி போய்ச் சிக்கிக் கொண்டேயிருக்கிறது.

நான் பிறந்த போதும் அது இல்லை . இறக்கிற போதும் அதை நான் கொண்டு போகப் போவதில்லை. மத்தியிலே வந்தது. தேவையான வரைக்கும் அனுபவித்தேன். இருக்கட்டும்.

அதை நானாக எடுத்து எறிய வேண்டியதில்லை. அவ்வளவுதான்.

“அந்தப்பொருள் அம்மட்டே” என்ற எண்ணத்தோடு ஒவ்வொரு பொருளினுடைய தன்மை, அதற்கும் நமக்கும் உள்ள உறவு, அதனுடைய தேவை, அதை அனுபவிக்க வேண்டிய அளவு, முறை

இவற்றையெல்லாம் மனதில் எடுத்துக் கொண்டு, ஒவ்வொரு பொருளையும் உணர்வோடு, தெளிவோடு, விழிப்போடு அனபவித்துப் பழகக் கொள்ளுகிற போது, அந்த மனநிலையே துறவுதான்.

உறவு மறைந்துவிடாது. அந்த உறவிலேயே துறவு இருக்கும். இந்த முறையிலே வந்ததுதான் அந்தப் பிரத்யாகாரா என்னும் உலகப் பொருட்களில் இருந்து மனதை விடுவித்துக் கொள்ளக் கூடிய பயிற்சி.

அந்தப் பயிற்சி வந்த பிறகு ஏதேனும் ஒரே ஒரு பொருள் மீது, ஒரே நிலையில் மனதைச் செலுத்தப் பழகுதல் தான் தாரணா.

தாரணா என்றால்ஓர்மை நிலை. ஒரு பூ மேலேயே மனதை வைத்து அதையே பார்த்துக் கொண்டிருங்கள். இப்பொழுது என்ன ஆயிற்று?

கண்தான் பூ மேலே இருக்கும். மனம் எங்கேயோ போய்க் கொண்டிருக்கும்.

அப்படி இல்லாமல் எதைக் கண்ணால் பார்க்கிறோமோ அதையே, விழிப்பு நிலையிலே, தொடர்ந்து. மனதாலும் பார்க்கப் பழகிக் கொள்வதற்கு ஓர்மை நிலை என்று பெயர். அதுதான் தாரணா.

அடுத்தது தியானம். மனம் உயிரிலே இருந்து வெளிவருகிறது. அந்த உயிர் மேலேயே மனதை வைத்துப் பழக வேண்டும். அதுதான் தியானம். தியானம்ஆனபிறகு,

“மனம் தான் நானாக இருக்கிறது.
உடல் தான் நானாக இருக்கிறது

என்ற நிலைகள் மாறி,

உயிர்தான் நானாக இருக்கிறது.
மனம்எனது படர்க்கை நிலை.
உடல் அதற்கு வாகனம்.

என்ற சிந்தனை உணர்வு வருகிறபோது உண்மையான தெளிவு - தன்னைப் பற்றிய தெளிவு - வருகிறது.

உயிர் நிலையிலே ஒடுங்கி, அதிலேயிருந்து பழகினால் சமாதி நிலை கிட்டும். சமாதி நிலை என்றால் அது வேறொன்றுமில்லை.

சமம் + ஆதி, அதாவது ஆதியும் அறிவும் சமப்படும் நிலை. ஒன்றுபடும் நிலை. ஒன்றாகும் நிலை. சம + ஆதி = சமாதி அந்த நிலைக்குப் போனால்தான், அவனேதான் நான் என்று அங்குதான்தெரியவரும்.

இந்த நான் என்பது எப்படி வந்தது என்ற உண்மை உணர்வு வந்து விட்ட பிறகு, அவன் தான் நாதாக இருக்கிறான் என்று அறிய முடியும்.

உயிர், உடல் இரண்டும் சேர்ந்து மனம் என்ற நிலையிலே ஒரு கற்பனையாக "நான், நான்" என்ற ஒன்று உருவாகி விட்டது என்ற எழுச்சியைக் கண்டுபிடிக்கிற போது, அந்த இடத்திலே தான் தன்முனைப்பானது அறும். இந்தப் பெருநிலைக்கான முழுப் பயிற்சியே தவம் எனப்படும்.

ஆனால் முற்காலத்தில் விஸ்தாராமாக இருந்த பிரத்தியாகாரா, தாரணா, தியானம் (தவம்), சமாதி (தன்னையும் தெயவத்தையும் ஒன்றாக்கி உணரும் முழுநிலை) என்னும் நான்கு பயிற்சளையும் ஒருங்கிணைத்துச் சுருக்கி நான் மனவளக்கலையாக்கி இருக்கிறேன். இதில் தற்சோதனையும் சேர்ந்துள்ளது.

தளராது, தொடர்ந்து பயிற்சி செய்யுங்கள். இயற்கைச் சக்திகள் அனைத்தும் உங்களுக்குத் துணையாக நின்று உங்களை வெற்றிக்கு கொண்டு சேர்க்கும்.

11. சித்தர்கள் நெறியில் நாம்

சிந்திக்கத் தொடங்கின நாள் முதல் கொண்டு மனிதனுக்கு இறையுணர்வு வந்துதான் இருக்கிறது.

ஆனால், இறைநிலை எது என்பதை அவனாலே அறியமுடியவில்லை.

அதற்காக நீண்ட காலம் பயின்று அறிந்தவர்கள், அறியாதவர்களுக்கு விளக்குவதற்காக - பல விதமான முயற்சிகளை எடுத்துக்கொண்டார்கள்.

அப்படி , குறுகிய காலத்திலே விளைவு தரக்கூடிய திட்டம் எதுவும் உருவாக்கப்படவில்லை.

அப்படிப்பட்ட திட்டம்தான் என்ன?

முதலில் உடலில் இருக்கக் கூடிய உயிரை உணர வேண்டும். அது எவ்வாறு இயங்கிக் கொண்டிருக்கிறது என்று தெரிந்து கொண்டு, உயிரிலே நாம் லயம் பெறும்போது, அதாவது, ஆன்ம அறிவு ஏற்பட்ட பிறகு தான் தெய்வ அறிவு முழுமையாகும்.

அதுவரையில், "யாரே ஒருவர் தெய்வம் இருக்கிறது என்று சொன்னார். இப்படி இருக்கிறது என்றும் வர்ணித்தார். அதை நம்பி நான் போய்க் கொண்டிருக்கிறேன். நீயும்அவ்வாறே என்னுடனே வந்து கொண்டிரு" என்ற நிலைதான்.

அவ்வாறான நம்பிக்கையானது வாழ்க்கையினுடய ஒரு பருவத்திலே அவசியம்தான் என்று எடுத்துக் கொண்டாலும், பின்னொரு காலத்தில் - - - - -

"இப்படியெல்லாம் சொல்லிக் கொண்டிருக்கின்றளர்களே! நாமும் தான் கேட்டுக்கொண்டிருக்கிறோம், அந்தத் தெய்வம் என்பது தான் என்ன, அதனை அறிந்துவிட வேண்டுமே" என்ற எண்ணம் கட்டாயம் ஒருசிலருக்காவது எழுந்துவிடும்.

அந்த நேரத்திலே, அந்த உண்மையை உணராவிட்டால் மனிதன் எவ்வளவுதான் இன்பங்களை அனுபவித்துக் கொண்டிருந்தாலும் மனத்திலே நிறைவு இராது.

மறை அல்லது வேதம்.

மனம், உயிர், மெய் என்ற மூன்றுபொருட்களும் மறை பொருட்கள். இந்த மறைபொருட்களைப் பற்றி விளக்கும் நூல் "மறை" என்றே கூறப்பட்டது. மறை என்றால் "வேதம்".

சாதாரணமாக பொருட்களைப் பற்றி அறிவது "விஞ்ஞானம்", அல்லது "கலை" என்று சொல்லாம்.

ஆனால்மறை பொருட்களைப் பற்றிக் கூறக் கூடிய. விளக்கக் கூடிய கலைதான் தத்துவ விளக்கமென்றும், "மறை" என்றும் கூறப்படுகிறது.

அந்த மறை பொருட்களைப் பற்றிக் கூறியது "வேதாந்தம்," அதாவது வேதத்தின் "அந்தம்" அல்லது முடிவு.

அதனை உணர்ந்து எடுத்துக் கூறியவர்கள் "வேதாந்திகள்" எனப்பட்டனர்.

ஆனால் எழுதி வைத்தது எழுத்தோடிருக்கிறது. மற்றவர்கள் உணர்ந்து கொள்ளுமளவுக்கு அதற்கு விளக்கமுறை வகுக்கப்படவில்லை.

வேதாந்தத்திலே நம்பிக்கை வைத்து. அல்லது ஆராய்ச்சி செய்து, ஓரளவு தெளிவு பெற்று, "இப்படித்தான் இருக்க வேண்டும்" என்று யுகம்செய்தவர்கள் வேதாந்த ரீதியில் பல நூல்களையும் விளக்கங்களையும் எழுதி வைத்தார்கள்.

வேதாந்திகள் நிலை.

அப்படி வேதாந்த ரீதியிலே இறையுணர்வு பெறும்போது, அங்கே அவர்களுக்கு மூன்று விதமான தன்மை ஏற்பட்டன.

அவற்றைத்தான் “அற்ற சிவயோகிக்கு அருஞ்சினம் மூன்று உண்டு - பற்றலகை, பாலரியல், உன்மத்தர்,” என்று சொல்லி வைத்தனர்.

வேதாந்த ரீதியில் ஒரு மெய்பபொருள் விளக்கத்தைத் தேடிப் பிடித்தவர்கள், பாடத்தை மனனம் செய்வர்கள், அதை ஓரளவு நம்பியவா்கள், அதை ஏற்றுக் கொண்டவர்கள், இவர்களெல்லாம் அந்த மெய்பொருள் நிலையையே நாடி நாடி உலகப் பொருட்களையோ, உணவையோ, வாழ்வையோ முக்கியமாகக் கருதவில்லை.

அவற்றை அலட்சியம் செய்துவிட்ட காரணத்தினால், அவர்களுடைய உணர்வு நிலை, என்ன அடையாளத்தில், இருக்கும் என்று கண்டுபிடித்தார்கள்.

“பற்றலகை” – அதாவது பேய் போன்று, இரவு-பகல் உறக்கம் இன்றி, அதே சிந்தயிலே இருப்பார்கள்.

ஓடிக்கொண்டும், உழன்று கொண்டும இன்ன இடம் என்று தெரியாமல் இருப்பார்கள். இதுதான் பற்றலகை நிலை. அலகை என்றால் பேய்.

“பாலறியல்” என்றால், குழந்தையைப் போன்று மான ஈனம் பாராமல், அதற்கப்பாலாக உழன்று கொண்டிருப்பார்கள்.

“உன்மத்தர்” என்றால், பார்க்கிறவர்களெல்லாம் “இவன் சித்த சுவாதீனம்இல்லாதவனோ?” என் எண்ணும் படியான நிலையில் இருப்பார்கள்.

தத்துவத்தைப் படித்து. அதன் மூலமாக உண்மையை ஓரளவு நாடி, அதிலேயே மனம் செலுத்ததுகிறவர்கள் இவ்வாறெல்லாம் இருப்பார்கள் என்றால், இந்த நிலைகளானவை வாழ்க்கைக்குப் பூரணமான, பொருத்தமான ஒரு இனிமையைத் தாரா என்பது எல்லொருக்கும் தெரியும்.

சித்தர்களது வாழ்க்கை நெறி

வேதாந்த ரீதியாக மெய்யுணர்வு பெற்றவர்களது வாழ்க்கை நிலை பேய் போல, குழந்தைபோல, உனமத்தர் போல இருக்கும் என யார் கூறினார்கேளோ அவர்கள் சித்தர்களுக்கும் மூன்று குணங்களைக் குறிப்பட்டுள்ளார்கள்.

1. “மகிழ்போகம்”,
2. “ஈதல்”
3. “இறவாமை”

மனத்தைப் புற வழியிலே இருந்து திரும்பப் பெற்று உள்நோக்கி, உயிரை உணர்ந்து, உயிருக்கு மூலமான பரம்பொருளையும்உணர்ந்து, “அவனே தான் உயிராகவும் இருக்கிறான், மனமாகவும் இருக்கிறான் என்றாலும், அந்நதந்த நிலையிலே இயக்க வேறுபாடு தவிர வேறு ஒன்றுமில்லை.”

இத்தகைய உணர்விலே இந்தச் சித்தர்கள் தங்களுடைய வாழ்க்கை நெறியை எப்படி அமைத்தக் கொண்டார்கள் என்று பார்ப்பபோம்.

சித்தர்களை ரசவாதிகள் என்றும் சொல்வார்கள். இவர்கள் இரசவாதிகள் என ஏன் கூறப்பட்டார்கள்?

இந்த உடலே இரசாயனங்களால் இமைந்ததுதான், “இந்த இரசாயனங்களின் தன்மையையம், பிரபஞ்சத்திலே உள்ள இரசாயனங்களின் தன்மையையும், உணர்ந்து கொண்டதாலே. எந்தப் பொருளோடு எந்தப் பொருள் கூடினால் என்ன ஆகிறது?” என்ற ஒரு விரிவான விளக்கத்தை அவர்கள் பெற்றிருந்தார்கள்.

இந்த விஞ்ஞானததைத் தான் தற்காலத்திலே Chemistry என்று சொல்கிறோம்.

எல்லா வகையான இரசாயன வித்தைகளையும் அறிந்தவர்கள் சித்தர்கள். எனவே அவர்கள் இரசவாதிகள் (alchemists) எனப்பட்டார்கள்.

அவர்களுடைய வாழ்க்கை நெறி மகிழ்போகம், ஈதல், இறவாமை என்று முறையிலே அமைந்திருந்தது.

"மகிழ் போகம்"

மகிழ்போகம் என்பது சிற்றின்பத்தை மாத்திரம் குறிப்பதன்று. அது புலன்கள மூலமாக, இந்த உலகை நாம் அனுபவிக்கும் இன்பங்களை - அமைதியாக - துன்பமாக மாறவிடாமல் - இனிமையாகவே வைத்துக் காத்து அனுபவிப்பது தான் மகிழ்போகம்,.

"மகிழ்" என்ற போது இனிமையான மறையிலேயே உலகத்தை அனுபவிக்கக் கூடிய ஒரு வல்லமை, ஒரு வெற்றி, ஒரு சிறப்பு, ஒரு பயிற்சி ஒரு பழக்கம்.

இவைகளெல்லாம் தான் மகிழ்போகம். ஐம்புலன்கள் மூலமாக மாத்திரம், அனுபவிக்க கூடிய ஒரு நல்ல நெறி அது.

ஈதல்.

அடுத்தது "ஈதல்" என்பொழுதும் பிறரிடமிருந்து ஏதோ ஒருபொருள் எனக்கு வேண்டுமென்ற ஒரு குறைபாடு இல்லாது, எந்நேரமும் "என்னால் பிறருக்கு என்ன செய்ய முடியும், என்ன செய்ய வேண்டும்? " என்ற தன்னிடத்திலே எல்லமே மிகுதியாக, உள்ளதை உணர்ந்து, Surplus ஆகவே வைத்துக் கொள்வது.

அறிவிலே தெளிந்து அந்த அறிவைக் கொண்டு, பிறருக்கு ஏதாவது ஒரு வழியில் உதவி செய்து கொண்டிருப்பது ஒரு சித்தனின் குணம்.

பொருளிலே நிறைந்து செயலிலே உயர்ந்து, பொருளாலும் செயலாலும் பிறருக்கு ஏதாவது ஒரு வழியில் உதவி செய்து கொண்டிருப்பது சித்தனது வழக்கம்.

இந்த முறை வாழ்விலே எப்பொழுதும் யாரிடமும் ஒரு சித்தன் கையேந்த மாட்டான். பிறரிடமிருந்து எதையும் எதிர்பார்க்கவும் மாட்டான்.

தான் பிறருக்கு என்ன் உதவி செய்ய முடியும் என்ற நிலையிலேயே வாழ்வான்.

தனக்கு, குடும்பத்துக்கு, சுற்றத்தாருக்கு, நாட்டு மக்களுக்கு, உலக சமுதாயத்திற்கு ஆற்ற வேண்டிய கடமைகளை எந்த எந்த முறையிலே, செய்ய முடியும் என்று கருதி, அதைச் செய்து கொண்டே வருவதோடு, அதைச் செய்வதற்குத் தன் ஆற்றலை எந்த அளவுக்கு உயர்த்திக்கொள்ள முடியும் என்று தன்னையும், அறிவையும், நல்ல முறையிலே உயர்த்திக் கொள்வான். இந்த நிலைதான் "ஈதல்".

"இறவாமை"

மூன்றாவது குணம் இறவாமை, இந்த உயிர் தானாகப் பிரிந்து விடாமல், "ஏதோ நோய் வந்தது இறந்து போனான்" என்று சொல்ல முடியாத அளவுக்கு ஒரு சித்தனால் தன் உடலிலே உயிரை நிறுத்திக் கொள்ள முடியும்.

அறிவைப் பிரமத்தோடு லயப்படுத்தி விடலாம். எவ்வளவு காலம் வாழ வேண்டுமோ, அதுவரையிலே வாழ்ந்து கடமைகளெல்லாம் முடிந்தவுடனே, வாழ்வதை முடித்துக் கொள்ளலாம்.

அதைத்தான் “மரணமிலாப் பெருவாழ்வு வாழ்ந்திடலாம் கண்டீர்” என்று நமது மகான் வள்ளலார் சொன்னார் இவைதான் சித்தர்களுடைய வாழ்க்கை நெறி.

பிரம்மஞானம்.

அந்த வாழ்க்கை நெறியிலே மக்களிடம் பரவுவதற்கு ஓர் அம்சம் விட்டுப் போயிற்று. என்ன விட்டுப் போயிற்று? பிரம்ம ஞானம் விட்டுப் போயிற்று,

குடுமபத்திலே இருக்கின்றவர்களால் கூடப் பிரம்ம ஞானத்தை உணரமுடியும் என்ற ஓர் எண்ணம் யாருக்கும் எழுந்ததில்லை

ஆனால், சித்தர்களிலே பலர் குடும்பத்தோடு இருந்துகொண்டே பிரம்ம ஞானம் பெற்றார்கள்.

அது மாத்திரமல்ல. நமது தமிழ் நாட்டிலே பதினெட்டுச் சித்தர்கள் உயிரை உடலிலேயே சுவரவிட்டுக் கொண்டு அறிவாலேயே முக்தி பெற்றார்கள்.

அவர்கள் உடல் நசியாது. அதாவது கெட்டுப் போகாது. ஆயிரம் ஆண்டுகள் சென்றால் கூட அந்த உடலில் - உயிர் சுவரவிடப்பட்டிருப்பதனாலே - உடல் அழியாது.

இந்தச் சாத்திய நிலையைத்தான் பதினெண் சித்தர்கள் நிரூபித்துக் காட்டியுள்ளனர். இந்தப் பெருமக்கள் அடக்கமான கோயில்கள் வழிபடுதலங்களாக உள்ளன.

சித்தர்கள் எண்ணிக்கை மொத்தமே பதினெட்டுதான் என்றெண்ணலாகாது. பிரபலமானவர்கள் பதினெட்டு பேர் என்று எடுத்துக் கொள்ள் வேண்டும்.

அந்த முறையிலே சித்தர்கள் பரம்பரையிலே எல்லோரும் வாழக்கூடிய ஒருநல்ல காலம் உலகுக்கு வந்துவிட்டது.

ஆனால் அசைச் சாதனைக்குக் கொண்டு வருவது யார்? அதை யார் செய்வது?

சித்தர்களுடைய கலைகளெல்லாம், பண்பாடெல்லாம் தமிழ்நாட்டிலே ஊடுருவி ஒவ்வொருவர் இரத்தத்திலேயும் அவை பரவி இருக்கின்றன.

இதை உலக சமுதாய சேவா சங்கத்தைச் சார்ந்த நாம் தான் உணர்ந்து செயல்படுத்தி முதல் முதலாக உலகுக்கு அளிக்க வேண்டும் என்கிறார் வேதாத்திரி மகரிசி.

12. சித்தர்கள் போற்றும் வாலை

சித்தர்கள் தந்த தவமுறைகளை தற்காலத்திற்கேற்றபடி வடிவமைத்து மானுடத்திற்குத் தந்தவர் வேதாத்திரி மகரிசி.

சித்தர்களுள் பெரும்பான்மையோர் கண்ட தெய்வ நிலைகளுள் “வாலை” என்னும் சக்தியை உணர்ந்து அதனால் பெறும் வல்லமைகளை உணர்த்தும் பாடல்களே மிகுந்துள்ளன.

கொங்கணச் சித்தர் வாலைப் பற்றிய உண்மைத் தத்துவங்களை “வாலைக்கும்மி” என்னும் பகதியில் பாடல்களில் சிறப்பாக விளக்கி உள்ளார்.

கன்னிப் பெண்ணை முன்நிறுத்தி கும்மி பாடியுள்ளதால் வாலைக்கும்மி என வழங்குகிறது

கொங்கன சித்தர் வாலைக்கும்மி என்று 108 பாடல்கள் பாடியுள்ளார். இது ஒன்று போதும் வாலையின் மகத்துவம் உரைக்க! நீங்கள் படியுங்கள், சிந்தித்து உணர்ந்து செயல்படுங்கள்!

வாலையை பாடாத சித்தன் இல்லை! வாலையை பணியாத சித்தன் இல்லை! வாலை அமுதம் தந்தாலே அடுத்த மேல் நிலை!

ஞான நிலை அனுபவம் கூடும்! ஞானம் அருள்பவளே வாலை தான்! அப்படியிருக்க வாலையை அறியாமல் இருந்தால் எப்படி?

சித்தர்கள் வாலையைப் பணிந்து போற்றினார்கள். வேதாத்திரி மகரிசியோ வாலையாகிய பெண்மை போற்றியது மட்டுமல்ல - உயர்த்தினார். பெண்ணை தெய்வமாக்காமால், ஞானாசிரியர்களாக உருவாக்கிச் சாதனைப் படைத்துள்ளார்.

" வாலை" எல்லா ஆற்றல்களும் படைத்த தெய்வம் என்பதை கொங்கணச் சித்தர்

"பல்லாயிரங் கோடி அண்டமு தல்பதி
நான்கு புவனமும் மூர்த்தி முதல்
எல்லாந் தனாய்ப் படைத்தவளாம் வாலை
எள்ளுக்கு எண்ணெய் போல் நினறவ ளாம்."

என்று குறியிருப்பதைக் கொண்டு, சித்தர்களுள் சிலர் சக்தியே தெய்வமென்றும் தனிக் கருத்துடையவராகவும், சக்தி வழிபாட்டினையே கொண்டவராகவும் காணப்படுகின்றார்கள்.

சித்தமெல்லாம் சிவமயமாய் திளைத்திருக்க, ஆதிசக்தியின் அருளும், ஆசியும் பூரணமாக தேவைப் படும். இதை உணர்ந்திருந்த சித்தர்கள், அத்தகைய ஆதிசக்தியின் அம்சம் ஒன்றினையே போற்றி பூசித்தனர்.

இந்த அம்சம் பத்து வயதுக்குறிய ஒரு சின்னஞ் சிறிய பெண்ணின் அம்சம் என்பது ஆச்சர்யமான ஒன்று!, நம்மில் பலரும் அறிந்திராத ஒன்று.
இந்த உயர் தெய்வத்தைப் பற்றி கொங்கணவர் பின்வருமாறு கூறுகிறார்.

"வாலையைப் பூசிக்க சித்தரானார்
வாலைக் கொத்தாசையாய் சிவகர்த்தரானார்
வேலையைப் பார்த்தல்லோ கூலி வைத்தார்

இந்த விதம் தெரியுமோ? வாலைப்
பெண்ணே!" - கொங்கணவர் -

சித்தர்கள் வணங்கிய அந்த பால தெய்வத்தின் பெயர் வாலை என்பதாகும். ஆதி சக்தியின் பத்து வயது பெண் வடிவமே இந்த வாலை. அனைத்திற்க்கும் ஆதி காரணமான இந்த வாலை தெய்வத்தையே சித்தர்கள் அகப்புற வழிகளில் பூசை செய்தார்கள்.

இந்த வாலையை பூசிக்காத சித்தர்கள் யாருமே இல்லை. இவள் அருமையை போற்றிப் பாடாத சித்தர்களும் இல்லை எனலாம்.

"வாலையடா சித்தருக்குத் தெய்வந்தானே
தெய்வமப்பா குலதெய்வஞ் சித்தர்கெல்லாம்
சிறுபிள்ளை யரனுடைய தேவிதேவி
வைவமப்பா நாங்களெல்லாம் சிரிப்பாளாத்தால்
மணிவீட்டைப் போல்வல்லோ அண்டமெல்லாம்
கொய்வமப்பா யெனவழிப்பாள் நிமிஷத்துள்ளே
குறையாமற் படைத்திடுவான் கூடர்ந்துகூறு
சைவமப்பா கொடுஞ்சைவம் வாமம் வேணுமே
சதாநித்த மானந்தச் சத்திதானே."

- சட்டைமுனிவர் வாதசூத்திரத்திரட்டு

இத்தகைய வாலை தெய்வம் நமது உடலில் இருந்து இயங்குவதை உணர்ந்து கொண்டு அவளே அனைத்திற்கும் காரண காரியமாக இருந்து ஆட்டுவிப்பதை அறிந்து எல்லாவித யோகா ஞானங்களுக்கும் அவளே தலைமைத்தாய் என்று அறுதியிட்டு உரைத்த சித்தர்கள். அவளையே போற்றி பூசித்து சித்தி பெற்றனர்.

சின்னஞ்சிறு பெண்ணான வாலையின் அருளால் சித்தியடைந்து, பின் அவளை கண்ணித் தெய்வமாக வழிபட்டு படிப்படியாக மனோன்மணித் தெய்வமாக பூசை முடித்து, இறுதியில் ஆதிசக்தியின்

அருள் பெற்று முக்தி நிலையான மெய்ஞான நிலையினை அடைந்தனர்.

இதுவே ஞானத்தின் அதி உயர்நிலையாக கருதப் பட்டது. இந்த நிலை எய்தியவர்களே சித்த புருஷர்கள். வாலை பூசை என்பது என்ன?

இதன் அருமையினை அகத்தியர் பின் வருமாறு விளக்குகிறார்

“கூடப்பா துரியமென்ற வாலை வீடு
கூறரிய நாதர் மகேச்சுவரியே யென்பர்
நாடப்பா அவள் தனையே பூசை பண்ணு
நந்திசொல்லும் சிங்காரம் தோன்றும் தோன்றும்
ஊடப்பா சிகாரவரை எல்லாம் தோன்றும்
ஊமையென்ற அமிர்தவெள்ளம் ஊறலாகும்
தேடப்பா இது தேடு காரியம் ஆகும்
செகத்திலே இதுவல்லவோ சித்தியாமே
வாமென்ற அவள் பாதம் பூசை பண்ணு
மற்றொன்றும் பூசை அல்ல மகனேசொன்னேன்!” - அகத்தியர் -

வாலை பூசையின் ரகசியம்...

பாலாம்பிகையான வாலையை அனைத்துக்கும் ஆதாரமானவள். இந்த ஆதார சக்தியினை வழிபட அகாரம், (சிகாரம்) உகாரம், மகாரம் என்ற மூன்றேழுத்து ஓங்கார மந்திரமே மூல மந்திரமாகும்.

வாலையை தங்கள் உடலில் இனங்கண்டு, இந்த ஓங்காரத்தின் உட்பொருளை உணர்ந்து அதன் வழி நின்று சித்தியடைவதுதான் வாலைபூசையின் நோக்கம்.

இதன் மகத்துவத்தினை கொங்கணவர் பின் வருமாறு கூறுகிறார்.

“மாதா பிதா கூட இல்லாமலே வெளி பல்லே
மண்ணும் விண்ணும் உண்டு பண்ணவென்று
பேதைப்பெண் ணாமுதல்
வாலைப்பெண்ணாளென்று
புகுந்தா ளிந்த புவியடக்கம் “ - கொங்கணவர் -

“மனமு மதியு மில்லாவி டில்வழி
மாறுதல் சொல்லியே யென்ன செய்வாள்
மனமுறுதியும் வைக்க வேணும் பின்னும்
வாலை கிருபையுண் டாகவேணும்” - கொங்கணவர் -

“வாலையின் அட்சரம் மூன்றாகும் அதை
வாய் கொண்டு சொல்பவர் யார் காணும்
மேல் ஒன்றும் கீழ் ஒன்றும் மத்திமமுங்கூட்டி
விரைந்து பாரடி ஞானப் பெண்ணே.!” - வாலைக் கும்மி -

கருவூரார் தனது கருவூரார் பூஜாவிதி
என்னும் நூலில் வாலை பூசை பற்றி இப்படி
சொல்கிறார்..

“பத்து வயதாகும் வாலையவள்
மர்மம் வைத்து பூசை பண்ண
மதியுனக்கு வேணுமடா அதிகமாக
கனரிது சிறு பிள்ளை கன்னி கன்னி
ஆமிவளை அறிந்தவர்கள் சித்தர் சித்தர்
அறிந்ததுமே மன அடக்கம் வந்து சேரும்
நாட்டிலே சொன்னாயானால் நகைப்பர்”

வாலையின் மந்திரம் அ+உ+ம் என்னும் ஓங்கார அட்சரங்களும், அதை மாற்றி வரும் ம் +உ+அ (முருகா) என்னும் அட்சரங்களுமே ஆகும். இதுவே வாலை பூசையின் இரகசிய மந்திரமும், வாலைப் பூசையின் சூட்சுமமும் ஆகும்.

வாலையின் யந்திரம் - முக்கோண பீடம்
வாலையின் மந்திரம் - அ+உ+ம் , ம்+உ+அ.

ஆகவே, அகிலமெங்கும் நீக்கமற நிறைந்திருக்கும் இந்த வாலை தெய்வத்தை புற நிலையில் அல்லாமல் அக நிலையில் தெரிந்து கொண்டு , உணர்வைவும், நினைவையும் ஒன்றாக்கி, சித்தத்தில் பரம்பொருளுடன் சேர இவ் வாலைப் பூசையை கைக்கொண்டு சித்திபெற வழிகாட்டுகிறார்கள் சித்தர்கள்.

வாலை என்பது குண்டலினியின் மறுபெயர் தான்.

வாயு மனமுங் கடந்த மனோன்மணி
பேயுங் கணமும் பெரிதுடைப் பெண்பிள்ளை
ஆயும் அறிவும் கடந்த அரனுக்குத்
தாயும் மகளும்நல் தாரமு மாமே – திருமந்திரம்

மனதை உன் மணியில் வைத்தால்! மனோன்மணித்தாய் கண்ணில் உள்ளாள் காட்சி கிடைக்கும்! மணம் அங்கே நிறுத்தி கண்மணியில் நிறுத்தி தவம் செய்யும்போது அங்குள்ள ஒளி வாயுவால் பெரிதாகும்!

கண்மணி சுழல சுழல காற்று வேகமாகி ஒளியை பேருக்கும்! "மன்மணம் எங்குண்டு வாயு அங்குண்டு" இதுவும் ஞானியின் கூற்றே!

அந்த மனோன்மணிதாய்க்கு வாலைக்கு அகில லோக அன்னைக்கு சேவகம் செய்ய காத்திருக்கும் பேயும் பூதகணங்களும் 2 கோடியாகும்!

அவ்வாறு உள்ள 2 கோடி பூதகணங்கள் தான் தாயின் கட்டளையை நிறைவேற்றும் சேவகர்கள்! மிகப்பெரிய இரகசியம் இது! சித்தர் சொன்ன இரகசியம்!

ஆய்ந்து அறிந்து அறிய முடியாத மனோவாக்கு காயத்துக்கு அப்பாற்பட்ட அந்த அரனுக்கு இவளே எல்லாமாம்!

ஆதி சக்தியாக படைத்ததால் தாய்! சிவத்தோடு சக்தியாக ஒளியோடு ஒலியாக இரண்டற கலந்து நிற்பதால் சிவசக்தியாய் துலங்குவதால் மனைவி!

உயிரெல்லாம் சக்தியம்சமல்லவா சிவம் படைத்தாரல்லவா எனவே உயிரை படைத்ததால் உயிராக உள் பாதியாக சக்தி துலங்குவதால் மகளுமாவாள்!

ஆஹா அற்புதம்! எவ்வளவு பெரிய உண்மை இது! ஒவ்வொரு தெய்வத்திற்கும் அவர்கள் பரிபாலனம் செய்வதற்காக பூதகணங்கள் உள்ளன!

ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு கணக்கில் உள்ளது! "நல்லதுக்கும் கெட்டதுக்கும் நாலாயிரம் பேர்" முருகப் பெருமானின் பூதகணங்களின் எண்ணிக்கை நாலாயிரம்!

வீரபாகு முதலானவர்கள்! முருகனின் கணங்கள் தன முதலில் வந்து அடித்து நொறுக்கி நம்மை பக்குவபடுத்தி ஞானபாதைக்கு அழைத்து செல்வர்!

தாயே வாலையே என மகாமாயையைபணிந்தால் அரவணைப்பாள்! மும்மலத்தில் பெரியது மாயை! எப்படி வேண்டுமானாலும் ஆட்டுவிப்பாள்! தாயே என்று சரணடைந்தால் மட்டுமே தப்பலாம்!

உலகத்திலுள்ள எல்லா பெண்களையும் தாயாக பார்த்தால் மட்டுமே தப்பலாம்! அபிராமி பட்டரைப் போல! அழுதால் அமுதம் தருவாள்!

ஞானசம்பந்தருக்கு தந்தது போல! பசித்தால் சோறு தருவாள் வள்ளலாருக்கு தந்ததை போல! இன்னும் சொல்லி கொண்டே போகலாம் அன்னையின் மகிமையை!!

பக்தி மார்க்கத்தில் இருக்கும் ஒவ்வொரு நிகழ்வுகளும் குண்டலினி தவத்தை அடிப்படையாகக் கொண்டவையே.

காவடித் தவம்....

காவடி கேள்விப்பட்டிருப்பீர்கள். இப்பொழுது அதைப் பற்றி

கொஞ்சம் சிந்திக்கலாம்.

பக்தியோகம் தான் எளிதான ஒன்று; அதுவே மூலம். அதில் அளப்பறிய கருத்துக்கள் பொருள் மறைந்துகிடக்கின்றன.

கோவிலில் இருக்கும் ஒவ்வொரு நிகழ்வுகளும் குண்டலினி தியானத்தை அடிப்படையாகக் கொண்டவையே.

கோவிலில் அனைத்துமே விஞ்ஞான ரீதியில் செயல்படுபவன.

நம்மில் பலர், 'நான் அன்னக்காவடிப்பா...எங்கிட்ட ஒன்னுமே இல்லை...' என சொல்லக் கேள்விப்பட்டிருப்போம். காவடின்னா என்ன...?

இதோ இந்த படத்திலிருப்பது போல் இருக்கும் ஒரு அமைப்பு.

இதை நம் தலையில் சுமந்துகொண்டு கழுத்தைச் சுற்றி முன்னும் பின்னுமாகவும் பக்கவாட்டிலும் அசைத்து அசைத்து நடனமாடுவதே.

இதனால் என்ன பயன்...? ஏன் இப்படி ஆடவேண்டும்....?

இது குண்டலினி யோகாவிற்கு ஒரு அருமையான Teaching Tool.

இதற்கு முன் பினியல் க்ளாண்ட் (Peneal Gland)ஐப் பற்றி கொஞ்சம்....

இது வாயின் உட்புறம் மேற்புறத்திலிருக்கும் உண்ணாக்கு மேலே, உச்சிக்குக் கீழே, இரண்டு காதுகளுக்கும் மத்தியிலே இந்த அருட்சுரப்பி இருக்கின்றது.

மானசீக நேர்கோட்டால் இரு காதுகளையும் இணைக்கவும். பிடரியில் காணும் பிடரிக்கண் என்பதிலிருந்து ஆக்கினைக்கு (புருவ மத்தியிலிருப்பது, நெற்றிக்கண்.) ஒரு மானசீக நேர்கோடு இட்டால் இரண்டு கோடுகளும் ஒன்றை ஒன்று வெட்டிக்கொள்கின்ற இடம். இதனை யோகத்தில் மனோன்மணி என்கின்றோம்.

மன உள் மணி.

அதாவது மனதுக்கு உட்பொருளானதும், உறுதியும் பெருமையும்மிக்கதுமான ஒரு சிறந்த மையமாகும்.

இது உடலுக்கும் உயிருக்கும் உள்ள தொடர்பையும், பிரபஞ்சத்திற்கும் மனதிற்கும் உள்ள தொடர்பையும், எந்த ஒரு பொருளுக்கும் அறிவுக்கும் உள்ள தொடர்பையும், உயிருக்கும் இறைநிலைக்கும் உள்ள தொடர்பையும், சரியாக வைத்துக் கொள்ள இந்த காவடி தவம் உதவுகின்றது.

பிரபஞ்ச உயிரில் நீண்டகாலமாக இருந்துவரும் பதிவுகளை அவை பிரபஞ்சத்தில் எந்த இடத்திலிருந்தாலும் அறிவுக்கு கூட்டுவிப்பது இந்த சுரபிதான்.

இது மனோ ஆற்றலை நிர்வகிக்கின்றது. மனோ சக்தியைப் பெருகச் செய்கின்றது..

இந்த தவம் செய்வது காவடி எடுப்பது போன்றே.

உயிராற்றலை ஆக்கினையில்(நெற்றிக்கண்) குவிக்கவேண்டும். பின்னர் துரியம்(உச்சி), பின்னர் பிடரிக்கண் (நெற்றிக்கண்ணிற்கு நேரெதிர்) இப்படி காவடி எடுப்பதினைப் போல் உயிராற்றலினை மாற்றிக்கொண்டேயிருக்கவேண்டும். இதனால் இந்த gland activate பண்ணப்பட்டு சமநிலைப் படுத்தப்படுகின்றது.

தேரை போன்ற உயிரினங்கள் உணவின்றி நீரின்றி இருக்கும் நுட்ப அறிவியல், மனோமணித்தவம் என்ற காவடித்தவமே.

மனோன்மணி

என்ன சுந்தரம் பிள்ளையின் காவியம் நினைவிற்கு வருகிறதா ? இல்லை இவள் அன்னை மனோன்மணி...

மனோன்மணி = மனங்களை தட்டி எழுப்புபவள்.

ஆன்மாக்களின் குற்றங்களை நீக்கிப் பரம்பொருளை அடைவதற்கு வழிகாட்டுபவள்.

ஆக இந்து முறையில் தெய்வ வரிசையில் பெண் வடிவில் விளங்கும் சக்தி இவள். அன்னை பல இடங்களில் இந்த திருநாமத்தில் அருள் வெள்ளம் வழங்குகிறாள்.

திருவாரூர் நாயகியாம் கமலாம்பிகையின் உற்சவர் நாமமும் மனோன்மணி அம்மை தான் .. கமலாம்பிகையே யோகத்தின் வடிவம் .ஆக அவள் உற்சவரும் யோக வடிவினள்.

மேலும் நெல்லை மாவட்டம் நாங்குநேரி(வைணவ மரபில் தோதாத்ரி சீவரமங்கை) தலத்திற்கு அருகில் இருக்கும் வடக்கு விஜய நாராயணம் தலத்திலும் அன்னை மனோன்மணி சமேத மனோன்மணீஸ்வரர் ஆலயம் உண்டு.

சரி இந்த மனோன்மணி அன்னை எதற்கு ? அவளின் வேலை என்ன?

மனித மனம் இயல்பாகவே அலை பாயும் தன்மை கொண்டது அல்லவா?

மனம் ஒன்றி நாம் இறைவனோடு பொருந்தி இருந்தாலும் பல நேரங்களில் நம் மனம் மீண்டும் அதை விட்டு விலகி விடுகிறது .

இப்படி மனம் பல இடங்களில் வைராக்கியத்தை இழக்கும் போது அதை மீட்டு நமக்கு தரும் அன்னை இவள்.

அது மட்டுமா ? சாக்த மரபில்(பெண் தெய்வ வழிபாட்டில்) அன்னையின் அழகை வருணிக்கும் போது பெண்மையின் அடையாளங்கள் பற்றி சொல்ல படும் .

அந்த நேரத்தில் மனம் கிளர்ச்சி அடையக் கூடாது. அவ்வாறு மனித மனதில் தோன்றும் கெட்ட எண்ணங்களை மாற்றி மனதுக்கு இதம் அளிப்பவளாக விளங்குகிறாள் அன்னை.

இதே எண்ணத்தில் தான் அபிராமி பட்டரும் தன்னுடைய ஐந்தாம் பாடலிலும்

“பொருந்திய முப்புரை செப்புரை செய்யின், புணர்முலையால்
வருந்திய வஞ்சி, மருங்குல் மனோன்மணி
வார்சடையோன்அருந்திய நஞ்சு அமுதாக்கிய அம்பிகை, அம்புயமேல்
திருந்திய சுந்தரி அந்தரி பாதம் என் சென்னியதே”

இங்கே அன்னையின் திரு மார்புகளை பற்றி சொன்ன அபிராமி பட்டர் மனித மனத்தை சீர் செய்யவே அன்னையின் திருநாமத்தை பொருத்தி இருக்கிறார்.

மேலும் அந்த பாடலின் திரண்ட பொருளிலும் நஞ்சை அமுதாக்கிய பதம் வரும். ஆக நம்முடைய மனதில் தோன்றும் நஞ்சை (தீய எண்ணங்களை) அமுதாக்கும் (நல்லவையாக) மாற்றும் அன்னை என்பதும் திண்ணமாய் விளங்கும்.

மேலும் குண்டலினி தவ முறையிலும் மனோன்மணி தவம் வரும் . அங்கேயும் ஒரு மணியின் ஒளியை கேட்க செய்து தவம் பூர்த்தி ஆகும் . அந்த பொழுதில் நம் மனதில் நினைப்பவை உடனயே நடக்குமாம்.

ஆக மனோன்மணி என்பவள் மனதை சீர் செய்து மனித மனம் நேராக இருக்க வழி வகுப்பவள்.

கைதேர்ந்த யோகிகள் உள்நாக்கினால் சுவாசக் குழலை அடைத்துவிடுவதால் மூச்சு இருக்காது. ஜடமாய் இருப்பர்.

ஆனால் மரணமில்லை. சுய நினைவு எதுவுமிருப்பதில்லை. தேரை போல். இதனையே ஜீவசமாதி என்கின்றனர்.

1. பழநியில் போகர்
2. இராமேஸ்வரத்தில் பதஞ்சலி
3. திருப்பதியில் கொங்கனவர்

இப்படி 18 சித்தர்களும் வெவ்வேறு ஊர்களில் ஜீவசமாதியானதால் அத்தலங்களுக்கு சக்தி அதிகம். அவர்களின் ஜீவகாந்தக் கலம் இந்த நொடிவரை செயல்படுகின்றது.

நாம் அவர்களின் ஆற்றல் கலத்தினுள் நுழைவதால் நமது ஆற்றல் கலனும் உயர்கின்றது. இதனால் நம் குறிக்கோள்கள் Manifestations ஆவது மிகவும் எளிதாகின்றது.

காவடித் தவம் செய்வதால் நம் மனோமணி பெருகுகின்றது. ஆதலினால் தவம் செய்வீர்.

சித்தர்கள் தந்த இந்த அற்புத தவம் காலத்தால் கரைந்துவிடக் கூடாது.

மகரிசியிடம் கற்ற மனோன்மணி.

மனதின் உள் மையம் - மனோன்மணி. [மனம் + உள் + மணி]. இங்கு இருக்கும் தன்மையோ, சுத்தம், அமைதி, தூய்மை, அடக்கம், கள்ளம் கபடமற்ற தன்மை. சுத்தமும், அமைதியும் எங்கு இருக்கிறது என்றால் அசுத்தத்திற்கு மத்தியிலும், சப்தத்திற்கு மத்தியிலேயும் தான் இருக்கிறது. A secret is within. மனதின் அடி ஆழம்.

மாசில்லா மணியே மனோன்மணி. அனைத்து இரகசியங்களுக்கும் தலையாய இரகசியம் மனோன்மணியம்.

நின்று அறிவதற்கு ஒரு இரகசியம், அது உடலுக்கு உள்ளாக இருக்கும் சுத்தவெளியின் தன்மை கொண்ட மனோன்மணி மையம். இங்கு நடைபெறுவது தான் இறையாட்சி. இதனை தான்

இயேசு - "இறையாட்சி உன்னுள் நடைபெறுகிறது" என்று குறிப்பிடுகிறார்.

"நீ உன்னை நோக்கி சந்திக்கிறபோது அற்புதங்களை சந்திப்பாய்"

சாக்ரடீஸ் - "நீ உன்னை நினை, உனக்குள் பிரம்மம் உணர்"

ஒவ்வொரு இயக்கத்திற்கும் உள்ளாக ஒரு மையம் இருக்கிறது. அது இருப்பாக அசைவற்று இருக்கிறது.

எல்லையற்ற பரவேளியோடு இணைந்ததாக அமைந்திருக்கிறது. உள் மையத்தை அடைகிறபோது அத ஏகமாக நிற்பது. ஏக உணர்வு வரவர சிறுமைகளில் இருந்து மனம் விடுபட்டு போகும்.

மனமானது சாதாரண நிலையில் எண்ணங்களோடு செக்குமாடு சுற்றுவது போல ஒரு அடி கூட முன்னேறாமல் சுற்றிக்கொண்டே இருக்கும்.

ஆனால் மனோன்மணித்தில் லயித்து இருக்கும்போது எண்ணமற்ற சூன்ய நிலை சித்திக்கும். மனம் சும்மா வெறுமனே இருக்கும்.

பார்பதற்கு சும்மா இருப்பது போல தெரிந்தாலும், மனதின் ஆற்றல் கூடிக்கொண்டே இருக்கும். இதனை விளக்க ஒரு சிறு கதையைக் காண்போம்.

ஒரு விவசாயி தன்னுடைய மாட்டு வண்டியில் இருபது மூட்டை நெல்மணிகளை ஏற்றிச் செல்கிறான்.

மாடும் நகர்கிறது, அதனால் வண்டியும் நகர்கிறது, வண்டி ஓட்டும் விவசாயியும் நகர்கிறான், மூட்டைகளும் நகர்கிறது.

இத்தனையும் நகர்வதற்கு எது காரணம் என்றால், வண்டியில் சும்மா, அசைவற்று இருக்கும் அச்சாணி தானே..!

பார்பதற்கு அது சும்மா இருப்பது போல தெரிந்தாலும் அசைவுகளின் அச்சாரம் அந்த அச்சாணி மட்டுமே. சும்மா இருக்கும் அச்ச்சாணி இல்லையேல் ஓட்டம் இல்லையே.

இது போல மனதின் அடி ஆழத்தில் சும்மா இருக்கும் மனோன்மணியில் லயிக்கும்போது எண்ண ஓட்டங்கள் அடங்கி, ஆன்மாவிற்கு ஆற்றல் கிட்டும்.

நான் என்ற அகங்காரம் - செருக்கு. அகங்காரன் - அகம் + காரன் உள்ளத்திற்கு சொந்தக்காரன். அகத்திற்குள் பிரம்மம் முளைத்து எழ வேண்டும்.

பிரம்மம் முளைப்பதற்கு பதிலாக முனைப்பு முளைத்து விடுகிறது சாமான்யர்களிடம்.

முனைப்பின் திசையை மாற்றியமைக்க வேண்டும். அதற்கு மனோன்மணி தவம் துணை நிற்கும். எதற்காக எழுச்சி பெற்று வந்ததோ அதை நோக்கி முனைப்பு எழுந்தால் அது நல முனைப்பு. தன்னை உணர்வதற்கு முனைப்பு ஏற்பட்டால் அது நல்லது.

மனதின் முப்பரிமானங்கள் நாம் அறிந்திருக்கிறோம். அவை

மேல் மனம் - **Peripharal consciousness,** இன்பம்.

நடு மனம் - **Sub-consiuosness,** துன்பம்

ஆழ் மனம் - **Super consciousness.** அமைதி

ஆனால் நான்காவதாக ஒரு பரிமாணம் உண்டு. அது தான் போகத்திற்கு வராத மனம். **Un-concious state of mind.** பேரின்பம். இதுவே மனோன்மணி மையம்.

The other end of Human mind is God's Almighty.

மனோன்மணியின் இருப்பிடம் மனதின் உள் மையம். மனதிற்கும் மையம், மூளைக்கும் மையம். இங்கே தான் [pineal gland] இருக்கிறது. அதை உடலியலில் hypothalamus என்றும் குறிப்பிடுகிறார்கள். நத்தை வடிவத்தில் இருக்கும். கடுகை விட சிறிய அளவு பினியல் சுரபி.

உடலின் தலைமைச் சுரபி - pitutary சுரபி. மனதின் தலைமைச் சுரபி - பினியல் சுரபி. நீண்டகால மனச்சோர்வு, மன இறுக்கத்திற்கு காரணம் பினியல் சுரபியின் தொய்வு தான். இது நல்ல முறையில் இயங்கினால் உள் உணர்வு அதிகரிக்கும். சமாதி நிலை கிட்டும்.

மனம் உள் பகுதியைக் கண்டுபிடித்து அதற்குள் நிலைத்து நிற்கும்போது ஒரு நிலையில் நானே சுயம், ஏகாதிபதி, சிவம், ஏகவெளி, ஏகாம்பரம், ஏகத்திற்கும் அதிபதி என்ற உணர்வு வரும்.

அந்த மையத்தைக் கவனிக்கும்போது மனம் என்ற ஒன்று இல்லாமல் போகும். என் பிறப்பு அர்த்தமுள்ளது, முழுமையானது என்ற உணர்வு முதலில் தோன்றி, முடிவில் எனக்கு பிறப்பு, இறப்பு இல்லை என்ற நிலை வரும். இதுவே முக்தி.

மனம் லயப்படும்போது ஆன்மா அமைதியை உணரும். அப்போது ஆன்மா ஒளிர ஆரம்பிக்கும்.

மனதிற்கு தேவை மிகப்பெரிய இன்பம். அது புறப்பொருளில் இல்லை. மனதின் மூலாதாரமாகிய மனோன்மையத்தில் இருக்கிறது. அதுவே பரவச நிலை, ஆத்ம சங்கமமும் ஆகும்.

இதனையே

நான் நித்தய புருஷன் - இயேசு.

மரணமில்லா பெருவாழ்வு வாழலாம் கண்டீர் - வள்ளலார்.

ஓர்த்து உள்அம் உள்அது உலவி

ஒருதலையாய் தோன்றுகின்ற வேண்டாப் பிறப்பு - திருவள்ளுவர்.

செய்முறை

தொடக்கம் ஆக்கினை மையம். அடுத்து மனோன்மணி மையம், பிறகு பிடறிக்கண், நிறைவாக துரியம்.

மனோன்மணி மையம் இருக்கும் இடம் புருவ மத்திக்கு ஒரு அங்குலம் உள்ளே, உள் நாக்கிற்கு ஒரு அங்குலம் மேலே, (காதுகளின் மேல் பகுதியில் அதாவது நெற்றிப்பொட்டு) இரண்டு பக்கமும் ஓட்டைப் போட்டால் தலைப் பகுதியில் சங்கமிக்கும் இடம் மனோன்மணி மையம்.

பிடறிக்கண் என்பது அணைத்து நரம்புகளும் கூடும் இடம். இடகலை, பிங்கலை சங்கமிக்கும் இடம்.

சும்மா இருக்கும் நேரத்தில் மனோன்மணி மையத்தில் தான் மனம் இருக்கும். மனதை மனோன்மணி மையத்தில் தோய்த்தேடுத்தால் அமைதி, புத்துணர்வு கிடைக்கும்.

மனோன்மணி தவத்தின் பயன்களும். சிறப்புகளும்.

1. அன்னமய கோசமாகிய உடலை அசைவற்றதாக வைத்து கவனிக்கும்போது உடலும், மனமும் அசைவற்றதாக நிலைத்து நிற்க முடியும்.
2. நம்மைச்சுற்றி அழுத்திக்கொண்டு இருக்கும் இறை ஆற்றலின் அழுத்தத்தை நன்றாக உணர முடியும்.
3. குண்டலினி சக்தி நன்கு ஊக்கம் பெற்று திணிவு பெரும்.
4. உயிர் உணர்வோடு ஒன்றி கலந்து ஒடுங்கி நிற்க முடியும்.
5. மூளைக்கு மத்தியில் இருக்கும் மனோன்மணி மையத்தில் மிகமிக மென்மையான அதிர்வு உணர்வு கிட்டும்.
6. அகமே அகத்தில் ஒடுங்கி இருக்கும் நிலை நீடிக்கும்.
7. பாவப் பதிவுகள் கரைந்துவிடும்.
8. மேல் நிலையான எண்ணங்கள் மேலோங்கும்.

9. பிறப்பின் இரகசியம் அறிந்து முழுமை பெரும் ஆற்றல் கூடும்.
10. உயிருக்கு இறவா நிலை சித்திக்கும்.
11. ஜீவன் முக்தி பெறும்.

அளப்பரிய சக்தியை வழங்கும் சரியான குருவின் மூலம், முறையாக இக்கலையைக் கற்று, பயிற்சி செய்து வாழ்வின் நோக்கத்தை அடைவோம்.

13. இறையுணர்வு தந்த சித்தர்.

யாதவ குலத்தில் கோபாலர் தம்பதிகளுக்கு ஆடிமாத விசாக நட்சத்திரத்தன்று மிக அழகான ஆண் குழந்தை ஒன்று பிறந்தது.

அது ஆண் குழந்தையாக இருந்தாலும் அதன் அழகு பெண் குழந்தையைப் போலிருக்கவே- அக்குழந்தையின் காதில் அசைந்தாடும் குதம்பை என்னும் நகையை அணிவித்தாள்

குழந்தையின் தாய். குதம்பையின் தினசரி நிகழ்ச்சி காலையும், மாலையும் கோவிலுக்கு சென்று இறைவனை வணங்குவது தான்.

-குதம்பைச் சித்தருக்கு பதினாறு வயதாகும் போது அவருக்கு ஞான உபதேசம் செய்வதற்காக மாதவர் ஒருவர் வந்தார்.

வந்தவரை வணங்கி நின்றார் குதம்பை. மாதவர் குதம்பைக்கு அருளுபதேசம் செய்தார்.

“மாதவ குருவே உபதேசம் செய்த உங்களுக்கு நான் என்ன கைமாறு செய்யப்போகிறேன்!” என்றார் குதம்பை மாதவரோ குதம்பையை

மெல்ல தடவிக்கொடுத்து “குதம்பை நீ போன பிறவியில் உய்வடையும் பொடுட்டு கடுந்தவம் செய்தாய்.

ஆனால் தவம் முழுமை அடையும் முன்பே உன் காலம் முடிந்து நீ இறந்து போனாய். அந்தத் தவத்தின் பயனால் தான் நீ என்னிடம் உபதேசம் பெற்றாய். நான் உபதேசித்ததை அனுபவத்தில் கொண்டு வெற்றி பெறுவாய்” என்றார்.

ஒரு நாள் இரவு குதம்பைச் சித்தர் யாருக்கும் தெரியாமல் எழுந்து ஒரு காட்டிற்குள் புகுந்தார்.

அங்கிருந்த ஒரு மரப்பொந்தில் நுழைந்து தவ நிலையில் ஆழ்ந்தார். தம் அனுபவங்களைப் பாடல்களாக எழுதினார். அந்தப் பாடல்கள் தான் குதம்பைச் சித்தர் பாடல்களாக உள்ளன.

குதம்பை என்பது பெண்களின் காதிலே அணியும் தொங்கட்டான் நகை. இவர் பாடல்களில் குதம்பை அணிந்த பெண்ணை குதம்பாய் என்று அழைக்கிறார்.

இதனால் இவரை குதம்பைச் சித்தர் என்றே அனைவரும் அழைத்தார்கள். இவர் 32 பாடல்களைப் பாடியுள்ளார். குதம்பைச் சித்தர் பதினெட்டு சித்தர்களில் ஒருவர்.

வேதாத்திரி மகரிசிக்கு இறையுணர்வு கிடைத்த பாடல்களில் குதம்பைச் சித்தரின் பாடல் முக்கியமானது என்று அவரே குறிப்பிடுகிறார்.

இறையுணர்வு எனக்குச் சரியாகக் கிடைத்த விதம் - மகரிசி.

எனது குழந்தை வயதில் பக்தியில் தோய்ந்து தெய்வ நம்பிக்கையும் நன்னடத்தைப் பற்றும் கொண்டு வளர்ந்தேன்.

“கடவுளே” என்று போற்றி அழைப்பதில ஓர் இன்பத்தை அனுபவித்தேன். வயது 20 க்கு மேல்தான் சில ஆன்மீக அறிவு நூல்களைப் படிக்கும் வாய்ப்பு கிடைத்தது. அவை மூலமாக எங்கும் நிறைந்த வெளிதான் இறைவன் என்ற தெளிவு கிடைத்தது.

“வெட்டவெளி தன்னை மெய்யென் றிருப்போர்க்குப்
பட்டய மேதுக்கடி? குதம்பாய்! பட்டய மேதுக்கடி?

என்ற குதம்பபைச் சித்தர் பாடலும்,

அங்கிங்கெனாதபடி யெங்கும்ப்ரகாசமா
யானந்தபூர்த்தியாகி
யருளொடுநிறைந்ததெது தன்னருள்வெளிக்குளே
யகிலாண்டகோடியெல்லாந்
தங்கும்படிக்கிச்சை வைத்துயிர்க்குயிராய்த்
தழைத்ததெதுமனவாக்கினிற்
றட்டாமனின்றதெது சமயகோடிகளெலாந்
தந்தெய்வமெந்தெய்வமென்
றெங்குந்தொடர்ந்தெதிர் வழக்கிடவுநின்றதெது
வெங்கணும்பெருவழ்க்கா
யாதினும்வல்லவொரு சித்தாகியின்பமா
யென்றைக்குமுள்ளதெதுமேற
கங்குல்பகலறநின்ற வெல்லையுள்தெதுவது
கருத்திற்கிசைந்ததுவே
கண்டனவெலாமோன வுருவெளியதாகவுங்
கருதியஞ்சலி செய்குவாம்.”

என்னும் தாயுமானவர் பாடலும்,

“சூழ்தகன் றாழ்ந்துயர்ந்த முடிவில் பெரும் பாழேயோ
சூழ்ந்ததனில் பெரியநன் மலர்சோதி யேயோ
சூழ்ந்ததனில்பெரிய சுடர்ஞான வின்பமோ
3ழ்ந்ததனில்பெரியஎன் அவாவறச் சூழ்ந்தாயே.”

“நன்றாய் ஞானம் கடந்துபோய் நல்லிந் திரிய மெல்லாமீர்த்து,

ஒன்றாய்க் கிடந்த அரும்பெரும்பாழ் உலப்பி லதனை யுணர்ந்துணர்ந்து,

சென்றாங் கின்ப துன்பங்கள் செற்றுக் களைந்து பசையற்றால்,

அன்றே யப்போ தேவீடு அதுவே வீடு வீடாமே.”

என்ற வைணவப் பெரியோர்கள் பாடிய பாடல்களையும் படித்து உணர்ந்தபோதுதான் தூயவெளியாக நிறைந்து பேரியக்க் மண்டலம் அனைத்தையும் தன்னகத்தே தாங்கிக் கொண்டிருப்பதுதான் தெய்வ நிலையென்ற உணர்வு பிறந்தது.

மகரிசிக்கு இறையுணர்வு கொடுத்த பாடல்களில் குதம்பைச் சித்தர் பாடலும் ஒன்று. அதில் குறிப்பிட்ட வெட்டவெளியே அவருக்கு தெளிவைத் தந்தது,

வெட்டவெளி சக்தி என்பது இல்லை யானால்
வேறு எந்தப்பொருள் வலிது பிரபஞ்சத்தில்?

சூரியன், பூமி மற்ற கோள்கள் அனைத்தையும் சேர்த்து சூரிய குடும்பம் வரையில் கணகிட்டால் அவை நம்மால் அளக்க முடியாத அளவு எடை உடையதாக இருக்கும். இவ்வளவு எடையை தன்னில் லேசாக மிதக்க விட்டு கொண்டிருப்பது சுத்தவெளி தான். அதுவே எல்லாம் வல்ல முழுமுதற்பொருளான இறைநிலை என்று போற்றுகிறோம்.

வெட்டவெளி தத்துவத்தை உணர்ந்த போது மகரிசியே தனது அனுபவங்களை நம்முடன் பகிர்ந்து கொள்கிறார்.

“ஆதியெனும் மெய்ப்பொருளோ கடல்போ லொன்று;அதிலெழுந்த
இயக்கமெலாம் அலைகள் போலாம்;பேதமுடன் அலைகளவை விரிந்த
போதும்பிரியாது கடலை விட்டுக்கடல் ஒன்றேனும்வாதமிடும்
பலகோடி அலைகளூடும்வழுவாது நிறைந்து நின்று, முடிவில்
தன்னுள்நீதமொடு இணைத்துக்கொள் தன்மை போன்று,நிலையற்ற
இயக்கமெலாம் முடியும் மெய்யில்”

வெட்டவெளியே மெய்ப் பொருளாகவும், அதன் ஆற்றலே சக்தியெனும் ஆகாசமாகவும், அதன் திரட்சிநிலை வேறுபாடுகளே பஞ்ச பூதங்காளகவும், அவை இணைந்த கூட்டுக் காட்சிகளே பேரியக்கத் தொடர்க்களத் தோற்றங்களாகவும் விளக்கம் பெற்றேன்..

சுத்தவெளி ஏதுமற்ற இடம்தானே, அதைப் பொருள் என்று எப்படிக் கூறுவது என்ற திகைப்பு முன்னர் ஏற்பட்டது. பின்னர் அதைப் பற்றிய ஐயமும் தெளிந்துவிட்டது.

இயக்கத்தோடு இயக்கத்தை ஒப்பிட்டுப் பார்க்கும் கணிப்பு நிலையிலுள்ள அறிவிற்கு, வெட்டவெளி ஏதுமற்றதாக இருக்கிறது. அறிவே சமாதிநிலையில் பொருளாகவும், இயக்க நிலையில் உயிராகவும், புலன் வழியிலான காட்சி நிலையில் எண்ணற்ற இயக்க வேறுபாடுகளாகவும், இயங்கும் உண்மையினைக் கூர்ந்து தவ நிலையின் அநுபவமாக உணரும்போது வெட்ட வெளியே பொருள் என்றும் அதன் இயக்க ஆற்றவான பரமாணு உயிர் என்றும், அணுக்களின் திரட்சி நிலைகள் பலவாறான வேறுபட்ட தோற்றங்கள் என்றும், விளங்கி விட்டது.

மேலும் பேராற்றல் பெற்ற கோடான கோடி சூரியன்களும் (நட்சத்திரங்களும்) மற்ற கோள்களும் வெட்ட வெளியில்தான் மிதந்து உருண்டு ஓடி இயங்கிக்கொண்டு இருக்கின்றன என்ற உண்மை தெளிந்த விடத்தில், வெட்ட வெளியே, எல்லாம்வல்ல (Almighty) பரம்பொருள் என்னும் விளக்கம் உண்டாயிற்று.

இடம், இயக்கம் இரண்டையும் ஒத்தப் பார்த்தால் இயக்கத்தைவிட இடம் வலிதாகவன்றோ இருக்க வேண்டும்.

எல்லாம் வல்ல பரம்பொருளே ஆகாசமென்ற உயிர்த் துகள்களாய், அதன் திரட்சித் தோற்றமே உடலாய், உயிர்- உடல் கூட்டு இயக்கத்தால் உணர்ச்சி, தேவை, முயற்சி, செயல், விளைவு, அனுபோக, அனுபவ, ஆராய்ச்சி, தெளிவு, முடிவு என்ற உயிரின் பத்து படித்தளப் படர்க்கை இயக்க ஆற்றலான மனமாய் இயங்கும் மறைபொருள் உண்மைகள், எனக்குத் தெளிவாக விளங்கிவிட்டன.

"ஒரே பொருள் எல்லாமாக இருக்கிறது" என்ற அத்வைத தத்துவம் விளங்கிவிட்டது.

"அது மலர்ச்சிபெற்று இயக்கம் என்ற நிலை வேறுபாட்டோடு சித்து-உயிர்-ஆகாசம்-பரமாணு-சக்தி என்று பேசப்படும் ஆற்றலாக இயங்கித்

திரட்சி நிலையில் உலகமாகி உயிர்களாகி அனந்தமாக இருக்கின்றன" என்ற தெளிவில் துவைத தத்துவமும் விளங்கிவிட்டது.

உயிர்களாகி, மனிதனாகி புலன் மயக்கின் தேவை, பழக்கம், சூழ்நிலைகள் நிர்ப்பந்தங்களில், சிக்கலுற்று துன்பங்களை விளைத்துக் கொண்டு தவிக்கும் நிலையிலிருந்து விடுபட்டு வாழவேண்டுமெனில், தனது அறிவை அகநோக்குப் பயிற்சியால் பண்படுத்தி, மனதின் இயக்க விதியறிந்து, உயிரின் நிலையறிந்து, அவ்வுயிரைப் பரநிலையோடு இணைத்து இணைத்து நின்று தவம் ஆற்றி, அறிவின் முழுமை பெற வேண்டும்.

பிறவிக் கடலைக் கடக்க இதுவே சரியான வழி. இதற்குப் பொருள்நிலை, நிகழ்ச்சி நிலையறிந்து, அகநோக்குத் தவத்தில் முழு ஆற்றல் பெற்ற ஆசான் அருளைநாடி அவர்மூலம் முறையாக நோன்பு ஆற்றியே மனிதன் உய்ய வேண்டும், என்ற விசிட்டாத்வைத தத்துவமும் எனக்கு விளங்கிவிட்டது.

சூரியன் மடிந்தாலும் வேதாத்திரி மகரிசியின் சுத்தவெளித் தத்தும் வாழும். காலங்கள் மடிந்தாலும் இவரது காந்தத் தத்துவம் வாழும்.

வானிடிந்து வீழினும் இவர்தரும் வாழ்க்கை நெறிகள் வாழும். இவரது வாக்குகள் அனைத்தும் இறைநிலை நமக்கு அளிக்கும் சத்தியங்கள்

14.பெண்ணும் இல்லாமல் ஆணும் இல்லை.


கொங்கணர்
திருப்பதி

பிரபஞ்ச உற்பத்தியில் உயிரினத்தோற்றங்கள் யாவும் இயற்கை பெண்ணினத்திடம் தானே ஒப்புவித்திருக்கிறது? அது பெண்ணினத்திடம் உள்ள பெருமை. இதையுணர்ந்த கொங்கணச் சித்தர்,

“மண்ணும் இல்லாமல் விண்ணும் இல்லை -கொஞ்சம்
வாசம் இல்லாமல் புவும் இல்லை
பெண்ணும் இல்லாமல் ஆணுமில்லை - அது
பேணிக் கொணாடடி வாலைப்பெண்ணே!

பெண் இல்லாவிடில் ஆண் இல்லை - ஏன் உலக மக்களே - பெண்ணினத்தின் அன்பளிப்பு தானே? அதைப் போற்றிக் கொண்டாடுகிறார் கொங்கணவர்.

பெண்ணுரிமையை, பெண்ணின் பெருமையைப் பற்றிச் சித்தர்கள் கூறும் கருத்துக்களையும் மகரிசி அவர்களின் கருத்துக்களையும் ஒப்பு நோக்குவோம்.

“பெண்ணற் பெருந்தக்க யாவுள” என்றார் வள்ளுவர்.

“மாது நல்லாருட் மணாளன் இருந்திடப்
பாதி நல்லாளை பகவனும் ஆனது
சோதி நல்லாளை துணை செய்ய வல்லிரேல்
வேதனை தீர்த்திடும் வெள்ளியையாமே.”

“பத்தினி பக்தர்கள் தத்துவஞானிகள்
சித்தங்கலங்கச் - சிதைவுள் செய்வதவர்
அந்தமும் ஆவியும் ஆண்டொன்றில்
மாய்த்திடும் சத்தியம்
ஈது சதா நந்தி ஆணையே”

என்று திருமூலரும்,

“மாதர் தோள் சராதோர் மாநிலத்தில் இல்லையே
மாதர் தோள்புணர்ந்தபோது மனிதர் வாழ்வு சிறக்குமே
மாதாராகுஞ் சத்திஒன்று மாட்டிக் கொண்ட தாதலால்
மாதராகும் நீளகங்கை மகிழ்ந்துகொண்டான் ஈசனே”

எனச் சிவவாக்கியாரும்,

“மாதவாய் வந்தே அமுதளித்தாய்
மனையாட்டியாய் வந்து சுகம் கொடுத்தாய்
ஆதரவான தங்கையானாய்
ஆசைக் கொழுந்தியும் தானானாய்”

எனக் கொங்கண சித்தரும் , பெண்ணுரிமையைப் பற்றிப் பெண்கள் பெருமையைப் பற்றிக் கூறி உள்ளார்கள்.

நமது மகரிசி அவர்களோ சித்தர்கள் அடியொட்டி, சீரிய கருத்துக்களை கூறி உள்ளார்கள்.

ஆண்களுக்குப் பெண்கள் அடிமையும் இல்லை ,

குறைந்தவர்களும் இல்லை ,

உயர்ந்தவர்களும் இல்லை ,

சமமானவர்களும் இல்லை .

இயற்கை அமைப்பில் பெண்கள் சிறப்பானவர்கள் .

பிரத்யேகமாக மதிப்பு உடையவர்கள் என்பதை உணர்ந்து மதித்து, ஒவ்வொரு ஆணும் நடந்து கொள்ள வேண்டும் என்பார் வேதாத்திரி மகரிசி.

“பெண்கள் உயர்ந்தவர்களும் இல்லை
தாழ்ந்தவர்களும் இல்லை .

பெண்கள் சிறப்பு

வினா: **ஐயா, நீங்கள் பெண்களை உயர்த்திப் பேசி அதிக முக்கியத்துவம் கொடுக்கின்றீகள் இது சரியா ?**

மகரிஷியின் விடை:

நீங்கள் இந்த உலகத்திற்கு எப்படி வந்தீர்கள் ? உங்களை ஒரு மிக்கவர்கள் மதிக்கப்பட வேண்டியவர்கள் “.

பெண் அல்லவா தன் வயிற்றில் பத்து மாதம் வைத்து காத்து உருவாக்கினாள்!

அப்பொழுது அவள் உண்ட உணவை, அவள் சுவாசித்த காற்றை அல்லவா நீங்கள் பங்கிட்டுக் கொண்டீர்கள் ?

மேலும் முதலில் இந்த உலகிற்கு வந்தீர்களே, அங்கு உங்களுக்கு தன் இரத்தத்தை அல்லவா பாலாக மாற்றி முதல் உணவாக அளித்தாள்.

நாம் கடைகளில் சென்று ஒரு புதிய வாகனம் வாங்கும் பொழுது அந்தக் கம்பெனியே உங்களுக்கு முதல் பெட்ரொலை இட்டு நிரப்பி நீங்கள் சிறிது தூரம் வாகனத்தை இயக்குவதற்கு உதவி செய்வது போல், தாய் தானே உங்களக்கு தன் இரத்தத்தைப் பாலாக்கி முதல் உணவு (Fuel) அளித்து நீங்கள் உயிர்வாழ உதவினாள். அதற்கு மேலும் பல மாதங்கள் அந்த தாயின் பாலைக் குடித்துத்தானே வளர்ந்தீர்கள்.

(நாம் வாழ்ந்த சொர்க்கம் 'தாயின் கருவறை')

“அந்தப் பெண்மைதானே உங்களுக்கு வாழ்க்கைத் துணையாகவும் வந்து வாழ்நாள் முழுவதும் உங்கள் இன்ப, துன்பங்களில் பங்கு கொண்டு நீங்கள் வீடுபேறு அடையவும் உதவுகின்றாள்.

இதில் ஏதாவது ஒன்றை உங்களால் மறுக்க முடிமா ? இவ்வளவு பெருமை வாய்ந்த பெண்ணினத்தை போற்றுவதில் உங்களுக்குக் கஞ்சத்தனமும் பொறுக்க முடியாமையும் ஏன் வரவேண்டும் ?”

“பெண் வயிற்றிலுருவாகி பெண்பாலுண்டே உணர்ந்தாய்

பெண்துணையால் வாழ்கின்றாய் பெண்ணின் பெருமை உணர்,”

“எல்லையற்ற ஆற்றலுள்ள இறைவன் திரு உள்ளம் என்ன
எவ்வுயிரும் தோன்றுதற்கு ஏற்றதொரு திரு வழியாய்
வல்லமையாய் பெண்ணினத்தை வடிமைத்தான் அற்புதமே
வாழுகின்ற மக்களில் இவ்வளம் அறிந்தோர் எத்தனனை பேர்!

- மகரிஷி

பெண்துணையால் வாழ்கின்றோம். பெண்மையின் பெருமையை உணர்வோம். பெண்கள் நாட்டின் கண்கள்.

பெண்ணின் பெருமையை நமது அருட்தந்தை வேதாத்திரி மகரிசி அவர்கள் கூறியதுடன் பெண்ணினத்தின் விடுதலைக்கு வித்திட்டுள்ளார்கள்.

நம் நாட்டின் பண்பாட்டின்படி பெண்கள் இயற்கையிலேயே தியாகிகள். பெண்ணாக பிறந்ததற்கு பெருமை படுவோம்.

15. காய கல்ப யோகம் தந்த சித்தர்கள்.

இளமை காத்து நீண்ட காலம் இந்த நிலவுலகில் வாழ்வது என்பது மனிதனது சாதனைக்க உட்பட்டதே.

இதற்கான வழிவகைகைத் தமிழ் நாட்டுச் சித்தர்கள் எழுத்து வடிவில் விட்டுச் சென்றிருந்தாலும், அவர்கள் கையாண்ட சொற்றோடர்களின் முழுப் பொருளையும் விளங்காதிருந்த காரணத்திலே "காயகற்பப் பயிற்சி" பல நூற்றாண்டுகளாக மூடுமந்திரமாகவே இருந்தது.

சித்தர் சான்றுகள்.

'அஞ்சு யுகத்தில் அழியாமல் காயந்தான்
மிஞ்சிய கற்பம் விளம்பினோம் நூற்றெட்டுத்
தஞ்ச முறவே தாந்தின்ன வல்லோர்க்கு
பஞ்சு நரைபோய்ப் பதிந்தோங்கி வாழ்வரே'

- திருமந்திரம்.

"வாயு வழக் மறிந்து செறிந்தடங்கில் ஆயுட் பெருக்கமுண்டாம்,"

- ஔவையார்.

"நயன மிரண்டும்நாசிமேல் வைத்திட்

டுயர்வெழா வாயுவை உள்ளே அடக்கித்

துயரற நாடியே தூங்கவல் லார்க்குப்

பயனிது காயம் பயமில்லைத் தானே" - திருமூலர்.

"கூற்றலும் குதித்தலும் கைகூடும் நோற்றலின்

ஆற்றல் தலைப்பட்ட வர்க்கு" - திருவள்ளுவர்.

"மூலப் பிராணனை நோக்கும் - நோக்கின்

முத்தியின் வீடுமக்கே வந்து - சாய்க்கும்

வாலப் பிராயமும் - வாய்க்கும்

வாசியினேற்ற மிகழ்ந்த ளித்தான்" –குணங்குடி மஸ்தான்

"உச்சியில்ஓங்கி ஒளிதிகழ் நாதத்தை

நச்சியே இன்பங்கொள் வார்க்கு நமன்இல்லை

விச்சும் விரிசடர் மூன்றும் உலகுக்குத்

தச்சு மவனே சமைக்கவல் லானே" - திவம்பலச்சக்கரம்.

கற்பம் உடலைக் காக்கும். உற்ற நோயை அகற்றும். அது, உடலைக் கற்போல மாற்றும். கற்பம் உண்பவர் நீண்டநாள் வாழ்வார் என்றும் நோயற்ற நிலையடையலாம் என்பதும் மருத்துவ வழக்காக இருக்கிறது. உலக மருத்துவம் எதிலும் காணப்படாத அரிய முறை இது.

காயகற்பப் பயிற்சி முறைகளை அறியாதிருந்தால் யாருக்கு நட்டம்? தமிழகம் எத்தனையோ அரிய கலைகளை அறிந்திருந்தும் அவை பயன்படாமல் மறந்திருப்பதைப் போல, இதையும் மற்றவை போல மறந்து ஒதுக்கி விடலாகாது.

மனவளக் கலையில் காயகற்பப் பயிற்சி எனும் ஒரு அற்புதமான மனித வளப் பயிற்சி அளிக்கப்படுகிறது.



விந்து நாதம் எனும் மூலப்பொருட்களைத் தூய்மை செய்து அவற்றின் வலுவையும் அளவையும். தரத்தையும் உயர்த்தும் எளிய பயிற்சி ஆகும் அது. நாம் உண்ணும் உணவு.

1. ரசம்
2. ரத்தம்
3. சதை
4. கொழுப்பு
5. எலும்பு
6. மஜ்ஜை மற்றும்
7. சுக்கிலம்

என்ற ஏழு தாதுக்களாக முறையே ஒன்றிலிருந்து மற்றொன்றாக இறையாற்றலால் மாற்றப்படுகின்றன.

இந்த உடலியக்க விஞ்ஞானத்தைப் பற்றி சிந்தனையாளர்களுக்கும் மருத்துவ விஞ்ஞானிகட்கும் நன்கு தெரியும்.

இவற்றில் சுக்கிலம் (விந்து-நாதம்) எனும் 'சீவ இன அனைத்தடக்கப் பொருள்' தான் மனித உடலினது தோற்றம் தன்மை வளர்ச்சி இயக்கம் விளைவுகள் அனைத்துக்கும் அடிப்படை ஆற்றலான மிக மதிப்புடைய பொருளாகும்.

உயிரினங்களின் பிறப்பு இறப்பு இரண்டு நிகழ்ச்சிகட்கும் வித்து எனும் சீவசக்தியே காரணம் ஆகும்.

ஒரு விதையில் ஒரு முழு மரம் காந்த அலைவடிவில் சுருங்கி இருப்பதைப் போலவே விந்துநாதக் குழம்பில் உள்ள ஒவ்வொரு செல்லிலும் மனித வடிவமே சுருங்கி இருக்கிறது.

மேலும் பரிணாமத் தொடராக வரும் செயல்கள் எண்ணம் இவற்றின் அலைகளைச் சுருக்கிப் பதிவாக வைத்திருக்கும் கருமையத்தைத் தாங்கிக் கொண்டு இருக்கும் தெய்வீகத் திரவமும் வித்துவே (Sexual vital fluid) விந்து நாதத் திரவமே ஆகும்.

இத்தகைய மதிப்பு வாய்ந்த வாழ்க்கை நலநிதியான விந்துநாதத் திரவங்களை மனிதவள மதிப்பறியாமல் மக்களில் பெரும்பாலோர் வீணாக்கியும் கெடுத்தும் விடுகிறார்கள்.

இந்தக் குறைபாடு மனித வளத்தை மிகவும் தாக்கிச் சீரழிக்கின்றது. இதனால் தான் தனிமனிதன் குடும்பம் சமுதாயம் உலகம் என்ற அளவில் மனித இன வாழ்வில் கணிக்க முடியாத எண்ணிக்கையில் சிக்கல்களையும் துன்பங்களையும் விளைவிக்கின்றன.

இந்த உண்மைகளை அறிந்த சித்தர்கள் எனும் மனிதவள விஞ்ஞானிகள் வித்துவைத் தூய்மை செய்து வளப்படுத்தும் பயிற்சியை உலக மக்களுக்கு வழங்கியுள்ளார்கள். இந்தப் பயிற்சி தான் காயகற்பம் எனும் மனித வளப் பயிற்சியாகும்.

நீண்ட காலமாக இந்தக் காயகற்ப பயிற்சியானது மிகவும் ரகசியமாக வைக்கப்பட்டிருந்தது. எல்லாச் சித்தர்களுமே அவரவர்கள் எழுதிய நூல்களில் இந்தப் பயிற்சியைப் பற்றிச் சில குறிப்புகளை எழுதி உள்ளார்கள்.

எனினும் இதனைப் பயின்று பயன் பெற்றவர்கள் நேர்முகமாகக் கற்றுக் கொடுத்தால் அல்லாது எவருக்கும் எழுத்தின் மூலம் இந்தப் பயிற்சியினை விளங்கிக் கொள்ளமுடியாது.

உதாரணமாக

உருத்தரித்த நாடியில் ஒடுங்குகின்ற வாயுவைக்

கருத்தினா லிருந்தியே கபாலமேற்ற வல்லீரேல்
விருத்தரும் பாலராவார். மேனியும் சிவந்திடும்
அருள்தரித்த அம்மைபாதம் ஐயன்பாதம் உண்மையே!

காயகற்ப பயிற்சியைப் பற்றி சித்தர்கள் எழுதி உள்ள பாடல்களில் இது ஒன்று.

இது சுத்த தமிழ்தான் என்றாலும் இதனைப் படித்து விட்டுக் காயகற்பப் பயிற்சியை ஒருவர் தெரிந்து பழகமுடியாது.

எனவே குரு என்னும் ஒரு நபரிடமிருந்து நேர்முறைப் பயிற்சி தான் தேவையாகின்றது. இந்தக் காயகற்ப பயிற்சி காலத்தால் பல பிரிவுகளாக்கப்பட்டுத் தூரக் கிழக்கு நாடுகளில் சிதறிக் கிடக்கின்றன.

சித்த மருத்துவத் துறையில் எனக்கிருக்கும் ஆழ்ந்த பற்றுதலால் சித்தர்கள் அருளியுள்ள பல நூல்களையும் ஆராய்ந்ததோடு எனது அருள் தொண்டு பயணத்தின் போது நான் சந்தித்த பல கீழ்நாட்டு உடற்பயிற்சி ஆசிரியர்கள் மூலம்திரட்டிய பல பயிற்சி முறைகளையும் ஒன்று இணைத்து 'மனவளக் கலைக் காயகற்பப் பயிற்சி' என்ற பெயரில் போதித்து வருகிறேன்.

இப்பயிற்சியை இதுவரை சுமார் இரண்டு லட்சம் பேருக்குக் கற்றுக் கொடுத்திருக்கிறேன்.

இந்த மனவளக்கலைக் காயகற்பப் பயிற்சியில் எனது இருபது ஆண்டுகால செயல்முறை அனுபவங்களும் இணைந்துள்ளன.

இந்தப் பயிற்சியை மூன்று மணி நேரத்தில் ஒருவர் கற்றுக் கொள்ள முடியும். மனவளக் கலை மன்றங்களில் உறுப்பினராகி வாழ்க்கைவள விஞ்ஞானம் பயில்வேலார்களுக்கு இந்தப் பயிற்சியும் சேர்த்துக் கொடுக்கப்படுகின்றது.

முறை தவறிய வழிகளில் விந்துவை நாசப்படுத்தி கொண்டு படிப்பில் விருப்பமில்லாமலும் நினைவாற்றல் குறைந்து வாழ்வில் சோர்வும் ஏமாற்றமும் காண்கின்ற இளைஞர்களுக்கு அவர்கள் வாழ்வைப் புதுப்பித்துக் கொள்ள இது ஓர் உயர்ந்த சாதனைவழி.

ஆண் பெண் இருபாலரும் வயது பதினான்கு பதினைந்துக்கு மேல் காயகற்பப் பயிற்சியைக் கற்றுப் பயனடையலாம்.

திருமணம் வேண்டாம் என்று பொதுநல ஆன்மீகத் தொண்டில் ஈடுபட்டுள்ளவர்களுக்கும் இந்த அரிய காயகற்பக் கலை நல்லதோர் தோழனாகப் பயன்படும்.

1. ஆயகலை கள்மொத்தம் கணக்கெடுத்தோர்
அறுபத்தி நாலுஎன்றார் அனைத்தும் கற்றும்
காயகற்ப மெனும்கலையைக் கற்கா விட்டால்
கற்றதெல்லாம் மண்புக்கும் உடல்வி ழுந்தால்
மாயமெனும் காந்தம்உயிர் வித்து மூன்றில்
மறைந்துள்ள இரகசியங்கள் விளங்கி வாழ்ந்தால்
தீயவினை கள்கழிய உலகுக் கென்றும்
தெளிவான அருள்ஒளியாய் நிலைக்கும் ஆன்மா

2. கறைபோக்கி வித்ததனை உறையச் செய்யும்.
காயகற்பப் பயிற்சியினால் உளநோய் நீங்கும்
நிறைமனமும் ஈகையோடு பொறுமை கற்பு
நேர்நிறையும் மன்னிப்பும் இயல்பாய் ஓங்கும்
இறையுணர்வு விழிப்புநிலை அறிவுக் கூர்மை
இனியசொல் எண்ணத்தின் உறுதி மேன்மை
மறைபொருளாம் மனம் உயிர் மெய் யுணர்வு கிட்டும்.
மாதவமாய்ப் பிறப்பிறப்புத் தொடர் அறுக்கும்!

காயகல்பம் உள்ளிட்ட உடல்பயிற்சிகளை நாள்தோறும் ஒழுங்காகச் செய்துவந்தால் நோயின்றி வாழலாம். உடலில் உள்ள செல்கள் அனைத்திலும் உள்ள துருவ அமைப்பு சீராகும். மரபு வழியாக வந்த நோய்களைக் கூட சில மாதங்களில் போக்கி நலமடையலாம்.

சுருங்கச் சொன்னால் மனிதகுல வாழ்வில் உள்ள அனைத்துக் குழப்பங்களுக்கும் நீங்கி அமைதியும் நிறைவும் கொண்ட வாழ்வு அமையும்.

காயகற்பப் பயிற்சி பயன்கள்

1. உடல் நலம் சீரடையும்; ஆஸ்த்மா, சர்க்கரைவியாதி, குடல்புண், மூலம் போன்ற வியாதிகள் படிப்படியாக நீங்கும் / மட்டுப்படும்.
2. உடலின் நோய் எதிர்ப்புச் சக்தி பெருகும்.
3. முதுமையைத் தள்ளிப்போடவும், முதுமையிலும் இளமை காத்து இனிய வாழ்வு வாழவும் வழி கோலும்.
4. பயனுள்ள நீள் ஆயுள் வாழ ஏதுவாகும்.
5. மாணவர்ப் பருவத்தில் நினைவுக் கூர்மை, ஒழுக்கம், கடமையுணர்வு ஒங்கும்.
6. தம்பதியரிடையே இணக்கமான இனிய உறவு அமையும்.
7. மனித வாழ்வில் ஆன்மீக உணர்வு மேலோங்கி வளர உதவும்.

இப்பயிற்சியை 14 வயதிற்கு மேல் ஆண் / பெண் இரு பாலரும் (எல்லா மதத்தினரும்) கற்று இன்புறலாம்.

16. மனவளக்கலையில் சித்தர் நெறி தீட்சைகள்.

பழக்கத்திற்கும் விளக்கத்திற்கும் இடையே போராடிக் கொண்டு இருக்கிற மனிதன் பழக்கத்தை முறையாக மாற்றிக் கொண்டு விளக்கத்தை நல் விளக்கமாகப் பெற்றுக் கொள்ள வேண்டும்.

விளக்கத்தின் வழியே வாழ்க்கையை மாற்றி அமைத்துக் கொண்டு வாழ்வதற்கு முறையான பயிற்சி எதுவோ அதைத்தான் மனவளக்கலை என்று சொல்லுகிறோம்.

இந்தப் பயிற்சியை குடுமபத்திலுள்ள ஆண், பெண் இருபாலருமே பயிலலாம். பதினைந்து, பதினாறு வயது ஆனவுடனேயே இந்தப் பயிற்சிக்கான தகுதி எல்லோருக்கும் உண்டாகிறது.

மகரிசியின் மனவளக்கலை பயிற்சியில் முதலில் எளிய முறை உடற்பயிற்சி சொல்லித் தரப்படுகிறது.

பின்னர் சித்தர்களின் காயகல்ப பயிற்சி செயல்முறைகளோடு தகுதிவாய்ந்த ஆசிரியர்களால் கற்றுத் தரப்படுகிறது.

பின்னர் தவம் செய்வதற்கு தீட்சை அல்லது உபதேசம் வழங்கப்படுகிறது.

தீட்சை என்றால் என்ன?

ஆசானால் சீடனுக்கு ஆற்றல் பாய்ச்சப்படுவதே தீட்சை என வழங்கப்படுகிறது. தீட்ஷை என்ற வட சொல்லுக்குக் “கொடுத்துக் குறைப்பது” என்று பொருள்.

தீட்ஷை என்ற சொல்லைத் “தீ + ஷை” என்று பிரிக்கலாம். தீ என்ற வடசொல் “தே” என்ற மூலத்தின் திரிவு ஆகும்.

தே - என்றால் “கொடுத்தல்” என்று பொருள். “சைஷ” என்ற சொல்லுக்கு மூலம் “சைஷய” . “சைஷய” என்றால் குறைத்தல் என்று பொருள்.

தீட்ஷை என்றால் “கொடுத்துக் குறைப்பது” என்று பொருள். அதாவது, ஆசான் உயிராற்றலைப் பாய்ச்சி, நமது மலங்களை அல்லது பாவப் பதிவுகளைக் குறைப்பது என்று பொருள் கொள்ளலாம்.

அருள்தந்தை வேதாத்திரி மகரிசி வகுத்துக் கொடுத்திருக்கின்ற மனவளகலைப் பயிற்சியில் நாம் மேறகொள்ளுகின்ற தீட்சை முறைகளுக்கான சான்றுகள் சில சித்தர் பெருமக்களின் அடியொற்றியதாக அமைந்திருப்பதைக் காணலாம்.

தீட்சை முறைகள்.

பழங்கால முதல் மூன்று தீட்சை முறைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அவை.

1. தொடு தீட்சை அல்து ஸ்பரிஸ தீட்சை.
2. நயன தீட்சை அல்து சட்சு தீட்சை.
3. மானஸ தீட்சை அல்லது ஞான தீட்சை.

தொடு தீட்சை (ஆக்கினை தீட்சை)

மூலாதாரத்தில் இருந்து ஆறாவது சக்தி மையமான ஆக்கினை சக்கரத்தை பற்றி பார்போம்.

அமைப்பு: இரண்டு தாமரை இதழ்கள் கொண்ட கருநீல நிறத்தையும், முறையே இதழின் வலது பக்கம் சூரியனையும், இதழின் இடது பக்கம் சந்திரனையும், நடுவில் நீல நிற லிங்கத்தையும் கொண்ட சக்கரமாகும்.

இதன் அசைவுகளால் ஏற்படும் சப்தங்களை ஹ, ள என்ற எழுத்துக்களால் குறிக்கப்படுகின்றன.

ஆன்மிகத்தின் வாசல் என்று சொல்லபடுகிறது. இதற்குத் 'திரிகூடம்'' என்றும் பெயர்.

இடம்: புருவ மத்தியில், இந்த சக்கரம் நமது புருவ மத்திக்கு நேராக மூளையில் அமைந்திருப்பதாக குறிப்பிடப்படுகிறது.

இன்னும் சரியாக சொல்வதெனில் நமது நெற்றியில் உள்ள பள்ள முடிச்சுக்கு இனையாக இருக்கிறது.

இந்த ஆக்ஞா சக்கரமும் மற்ற சக்கரங்களைப் போல சுழுமுனை நாடியில் அமைந்துள்ளது.

ஆக்கினை தீட்சை நமக்கு இம்முறையிலேயே கொடுக்கப்படுகிறது. ஸ்பரிச தீட்சைக்கு உதாரணமாக நமது ஆசான் கோழி அடை காத்தலைக் குறிப்பிடுவார்கள்.

கோழி எவ்வாறு தனது உடல் வெப்பத்தினை, அதன் முட்டைக்குப் பாய்ச்சுகிறதோ, அவ்வாறே குருவும் தனது சீடனுக்குத் தனது கை மூலம் ஆற்றலைக் கொடுத்து, மூலாதாரத்திலிருந்து குண்டலினியை எழுப்புகிறார்.

இந்தத் தொடுமுறை தீட்சை மூவாயிரம் ஆண்டுகளுக்கு முன் பிருந்தே வழங்கி வருவதை நாம் திருமூலரின் பாடலினின்று அறியலாம்.

“உடல்பொருள் ஆவி உதகத்தாற் கொண்டு
படர்வினை பற்றறப் பார்த்துக் கைவைத்து
நொடியில் அடிவைத்து நுண்ணுணர் வாக்கி
கூடியப் பிறப்பறக் காட்டினான் நந்தியே!”

மேலும் “தொட்டுக் காட்டதா வித்தை சுட்டுப் பொட்டாலும் வராது” என்ற பழமொழியும் தொடுமுறை தீட்டசையினை உறுதிப்படுத்துகிறது.

புருவ மத்தியல் உணர்வு வரவேண்டுமென்பதற்காக அக்காலத்தில் சிலர் அங்கே சூடு வைத்துக் கொள்வார்கள் அல்லது சூடு போடப்படுவார்கள்.

ஆக்கினைக்கு வேறு பெயர்கள் - புருவமத்தி, மனோமையம், நெற்றிக்கண், புருவபுட்டு, முச்சந்தி.

ஆக்கினைப் பற்றி சித்தர்கள்.

“உறற்றுப்பார்க்க ஒளிதரும் ஆனந்தம் அதை
நெற்றிக்கு நேர் கண்டு டநிலைப்பது எக்காலம்?”-பத்திரகிரியார்

“ஊற்றைச் சடலமடி உப்பிருந்த பாண்டமடி
மாற்றிப் பிறக்க மருந்தெனக்குக் கிட்டுதில்லை
மாற்றிப் பிறக்க மருந்தெனக்குக் கிட்டுமென்றால்
ஊற்றைச் சடலம் விட்டே என் கண்ணம்மா
உன் பாதம் சேரேனா?”

மாற்றிப் பிறத்தல் என்பது கண்டலின் சக்தியை மூலாதராத்திலிருந்து ஆக்கனைக்கு மாற்றுவது.

“முத்து முகப்டியோ, முச்சந்தி வீதியிலே

பத்து இதழ் பரப்பி, பஞ்சனைமேல் இருத்தி
அத்தை அடக்கியல்லோ யாரும் இல்லா வேளையிலே
குத்து விளக்கேற்றி - என் கண்ணம்மா
கோலமிட்டுப் பாரேனோ." - அழுகணிச் சித்தர்.

முத்து முகப்படியோ	அழகான நெற்றி
முச்சந்தி வீதி	இருகண்கள் - (நாசி சந்திக்கும் இடம் (புருவமையம்)
பத்து இதழ் பரப்பி	பத்துவிதமான நாத ஒலிகள் எழுப்பும் நரம்புகள் கூடுமிடம் மோனநிலை. ஐந்து புலன்களை அடக்கி
பஞ்சணை	
மேலிருத்தி	எண்ணங்கள் குறுக்கிடாத நிலை
யாருமில்லா	
வேளையிலே	குரு தொட்டுக்காட்டி
குத்துவிளக்கேற்றி	அசைகின்ற உயிரை - நர்த்தனத்தை
கோலமிட்டு	

சாந்தியோகம்

ஆக்கினைச் சக்கரமாகிய நெற்றிக் கண் யோகத்தினால் குண்டலினி இயக்கம் சில சமயம் உடல் தாங்கும் ஆற்றலுக்கு மேலாக ஓங்கும். அப்போது தலை கனம் உண்டாகும்.

இந்தக் குறிப்பே சாந்தி யோகப் பயிற்சிக்கு ஏற்றதாகும். அப்போது ஆசானை அணுகி சாந்தி யோகப் பயிற்சியைத் தெரிந்து கொள்ள வேண்டும்.

வேறு முறைகள் மூலம் குண்டலினி ஏற்றம் பெற்றோர் சாந்தி யோக முறையறியாமல் பலர் குண்டலினி ஏற்றத்தைத் தாங்கும் சக்தியின்றி துன்புற்று வருந்துகிறார்கள்.

இத்தகையோர் உடனடியாகச் சாந்தி யோகம் தெரிந்துப் பயிலுதல் வேண்டும்.

1. சாந்தித் தவம் துவங்குகையில் மூலபந்தத்தில் இருந்து வரலாம், அது கவனத்தை ஆசனவாய்ப்பகுதியில் இருத்த உதவியாய் அமையவல்லது.

2. அசுவினி முத்திரையைத் தவறாது போட்டு வருபவர்களுக்கு மூலாதாரப் பகுதியில் கவனத்தை வைப்பது பழக்கமாய் மாறிவிடும். அத்தகையவர்கள் சாந்தி தவத்தில் எளிதில் கவனத்தை அப்பகுதிக்கு நகர்த்தி விடுவார்கள்.

3. புவிக்கு தன் மீது படும் எந்த ஒரு காந்தக்களதையும் தன்னுள்ளே ஈர்த்துக்கொள்ளும் பண்பு உண்டு [earthing]. நாம் சம்மணமிட்டு தவம் செய்கையிலே புவியின் மேற்பரப்புக்கு மிக அருகாமையிலே அதைத் தொடுமளவுக்கு நமது மூலாதாரம் வருவதினாலே, அங்கே தேங்கியுள்ள காந்தம், புவியின் காந்தக்களத்தோடு பின்னிப் பிணைய ஏதுவாகின்றது. இந்த நிகழ்வு கூட, மூலாதாரத்தில் உறங்கும் காந்தத்தை நாம் உணர முடியாமற் போவதற்குக் காரணமாக அமையக்கூடியதே.

இதைத் தவிர்க்கவே நாம் பாய் போன்றவற்றில் அமர்ந்து தவம் செய்கின்றோம்.

இக்காரணத்தாலே, சற்றே உயரமான தலையணை, மடித்த கம்பளிப் போர்வை போன்றவைகளின் மீது அமர்ந்து தவம் செய்வது மூலாதார உணர்தலை எளிதாக்கும். சேர் மீது அமர்ந்து தவம் செய்தலையும் முயற்சிக்கலாம்.

சாந்தி தவம் சில சிந்தனைகள்

1. தண்டுவட சுத்தி செய்யும் போது மூச்சு விடும் போது மூலாதாரத்தை கவனிக்க வேண்டும்
2. மூலதாரத்தில் சிறு பந்து வைத்து தவம் செய்யலாம்
3. பிருத்வி முதிதேரியல்(mutra) மனம் வைத்து மூலாதாரத்தை கவனித்தால் சாந்தி நன்கு பிடிபடும்.

இன்னும் சில உத்திகள்

1 . அக்கு பிரஷர் செய்யும் முதல் புள்ளி இடது கை மூன்று விரலில் வைத்துக்கொண்டு, வலது கை ஆல் காட்டி விரல் மூலாதாரத்தை தொட்டு ((முதுகு தண்டின் நுனிப்பகுதியை) தொட்டுக்கொண்டு இடது பக்கம் படுத்துக்கொண்டு செய்ய வேண்டும்.
தூக்கம் வரும் வரை (10 - 15 நிமிடங்கள்) மனம் விரல் நுனியை கவனித்தவாறு இருந்தால் நன்கு தூக்கம் வரும். சாந்தி தவம் நன்கு உணர முடியும்.

சாந்தித் தவம். அதிகம் மனதுக்கு (பிடிபடாததற்கு) தோன்றாததற்கு இதுவும் ஒரு காரணமாக இருக்குமோ?

நமக்கு ஒரு பதினைந்து வயது இருக்கும் போதே மூலாதாரத்திற்கு ஆற்றல் வந்து விடுவதால் நாம் முழுமையாய் தவம் கற்கும் காலம் வரை அங்கேயே (தாய்வீடு) இருந்ததால் புது இடத்திற்கு போனால் ஆக்கினை, துரியம்.இன்னும் பிற தவங்கள் மனதில் (உயிரில்) பதிகிறது வழக்கமாய் அங்கேயே இருப்பதால் தெரிவதில்லையோ?

சாந்தி தவத்தின் போது நாம் அங்கேதான் இருக்கிறோம். புது இடம்போல் பழகிய இடம் தோன்றாது.

யோகா சாதனையின் ஆற்றல் மிகுதியின் காரணமாகவோ, உணவின் காரணமாகவோ, ஆரத்சியின் காரணமாகவோ, அல்லது கோள்களின் நிலை காரணமாகவோ, தவக்கனல் மிகுந்தால், அதை உடனடியாக உணர்ந்து, தனித்துக் கொள்ளவும், அந்த தவக்கனளின் மிகுதியை உடல் நலனுக்கும், உள்ளத்தின் நலனுக்கும் பயனாக்கி கொள்ளவும் சாந்தி தவம் உதவுகிறது.

சாந்தி தவத்தினால் உடல் வெப்பம் தனியும், நரம்பு மண்டலம் அமைதி அடையும். தவத்தின் போது முழுமையான அனுபவம் ஏற்படும். உடலுக்கு மூலப்பொருளான வித்துக் குழம்பு பால் சுரப்பியில் தேங்கி கிடப்பதால் சாந்தி தவத்தால் தவ ஆற்றல் உடல் ஆற்றலாக மாறும்.

முதல் அறிகுறி ::

நாம் சாந்தி தவத்தை முழுமையாக செய்தால் முதலில் கண்கள் குளுர்ச்சி பெரும்.

1 .சாந்தி தவத்தால் நிலத்தை சார்ந்த ஆராய்ச்சி பற்றிய அறிவு அதிகமாகிறது.

2 .உடல் வலி, காய்ச்சல், அசீரணம் போன்ற நோய்கள் நீங்குகின்றன.

3 .உடலில் உயிரின் இயக்கம் சீராகிறது.

4 .உடல் சக்தி மனோ சக்தியாகவும், மனோ சக்தி உடல் சக்தியாகவும் மாற்றி பயன் பெறலாம்.

ஆரம்ப பயிற்சியாளர்கள் ஒவ்வொரு வேளை சாப்பிட்ட பிறகும் மூன்று நிமிடம் இறங்குபடி கவனிக்க வேண்டும்.

இதற்கு உட்கார்ந்து தவம் செய்ய வேண்டும் என்பதில்லை.

சாப்பிட்டு முடித்தபின் அடுத்த அடுத்த காரியங்களை பார்த்துக்கொண்டே, நினைவை மட்டும் மூலதாரத்தில் வைத்திருக்க வேண்டும்.

மூலதாரத்திளிருந்து உணர்வு மேல்லேழுப்பப் பெற்ற உணர்வுவலார்களுடைய உயிர் ஆற்றலனது சில சூழ்நிலைகளுக்கு உள்ளாகும் போது சிதைவையும் , இழப்பையும் ஏற்க வேண்டி வரும். அவை :

1 . மாத விலக்கில் இருக்கும் பெண்களின் அருகாமை
2 . நாயின் அருகாமை
3 . பன்றியின் அருகாமை மற்றும்
4 . பிணத்தின் அருகாமை.

முகத்திலோ, கண்ணிலோ சூடு தெரியலாம். ஜூரம் வரலாம். வயிற்று வலி, வயிற்று பொருமல் போன்ற உஷ்ண வியாதிகள் வரலாம். அப்படி வந்து விட்டால், உடனடியாக சாந்தி யோகம் கொடுத்து விட வேண்டும்.

சாந்தியை பல காலம் செய்வதால் எந்தப் பிரச்சினையும் வராது. மனதையும், உடலையும் அமைதி படுத்துவதால் தான் அதற்ககு சாந்தி தவம் என்றே பெயர்.

சாந்தி தவம் செய்வதால் உடல் குளிர்ச்சி அடையலாம் . உடல் செல்களின் காந்த துருவ இணைப்பு ஒரு ஒழுங்குக்கு வரும். நிலைக்கும். இதானால் நாள் பட்ட கர்ம நோயும் தீரும்.

கர்ம நோயை எதிர்க்க சாந்தி யோகம் செய்வதென்றால் தொடர்ந்து செய்து வர வேண்டும். தினந்தோறும் செய்ய வேண்டும். இரண்டு வேளையும் செய்து வர வேண்டும்.

மூன்று மாதம் செய்து வர வேண்டும். அதற்குள் அந்த நோயை அகன்று விடும். இல்லையென்றால் இன்னும் மூன்று மாதம் நீடித்து கொள்ள வேண்டும். இக்கலகட்டதில் மேல் தவம் எதுவும் செய்யக் கூடாது.

மூலாதாரம் மண்ணுக்குரிய மையமாகையினால், சப்த தாதுக்களில் மண்ணுக்குரிய வித்துவின் உற்பத்தி அதிகமாகும். அதனால் பால் உணர்வுகள் கூடுதலாகும்.

பால் உறவில் வல்லமை கூடும். இவற்றை சமாளித்து கொள்ள கூடிய அறிவு பலமும், குணா சிறப்பும் ஏற்கனவே பெற்றுக்க வேண்டும்.

பால் உணர்வில் வல்லமை இன்மையை போன்ற பலகீனக்களையும் இந்த தொடர்ந்த சாந்தி யோகம் சரிப்படுத்தும்.

மலட்டு தன்மை கூட சாந்தி யோகம் சரிப்படுத்தும். பால் உணர்வு கருவிகளுக்கு பக்கத்தில் மூலதாரம் இருப்பதால், பால் உணர்வு வெறியும் எந்த தவம் தொடர்ந்து செய்வதால் உண்டு பண்ணக் கூடும்.

சாந்தி யோகத்தால் பெரிய நன்மைகளையும் உண்டு பண்ணிக் கொள்ளலாம் அல்லது கஷ்டங்களை நீக்கிக் கொள்ளலாம்.

சீவ காந்த சிதைவு என்பது நாய், பன்றி, பூனை, ஆந்தை, கோட்டன் , வவ்வால் போன்ற உயிரினக்களில் உண்டு. அதை வளர்ப்பதிலும் , தொடுவதிலும் , கொண்டுழுவதையும் யோகிகள் தவிர்த்தே ஆகா வேண்டும்.

சீவ காந்த உறுதி நிலை அருகம் புல், வேம்ப்பு, துளசி, பசு, யானை, மயில், மான், குழந்தை, , நவரத்தின கற்கள், வெள்ளி, பொன், பெண்கள்ளிடத்திலும் அதிகம் இருக்கும்.

பிணத்தில் பக்கத்தில் போக கூடாது. ஆனால் தவிர்க்க முடியாத சூழ்நிலையில் இந்த மாதிரி சீவ காந்த சிதைவு நிலைகளை எதிர் கொள்ள வேண்டி வரும் போது நாம் சாந்தி யோகத்தில் இருந்து கொண்டால் சீவ காந்த சிதைவு ஏற்படாது.

மூலாதார படத்தில் உள்ள நான்கு எழுத்துகளும் முறையே மனம் ,புத்தி ,சித்தம் அகங்காரம் குறிக்கிறது என்கின்றனர் சித்தர் பெருமக்கள் ..

நாபிக்கு கீழே பன்னிரண்டு அங்குலம்
தாபிக்கு மந்திரம் தன்னை அறிகிலர்
தாபிக்கும் மந்திரம் தன்னை அறிந்த பின்
கூவிக் கொண்டு ஈசன் குடி இருந்தானே ......திருமூலர்

“மூலத்தது உதித்தெழுந்த முக்கோணச் சக்கரத்துள்
வாலை தனைப் போற்றாமல் மதிமறந்தோர் புரணமே”
– பட்டினத்தார்.

மூலாதாரத்தில் இருக்கக்கூடிய உயிர்ச்சக்தியை மதித்து தவம் செய்யாது இருந்து விட்டேன்.

சாந்தி தவம்: சில பயனுள்ள நுணுக்கங்கள்

1. தண்டுவட சுத்தி செய்யும் போது மூச்சு விடும் போது மூலாதாரத்தை கவனிக்க வேண்டும்.

2. பிருத்த்வி முதிதேரியல் (mutra) மனம் வைத்து மூலாதாரத்தை கவனித்தால் சாந்தி நன்கு பிடிபடும்.

3 .வெள்ளி கிழமை கலை தீப பயிற்சி செய்த பின்பு சாந்தி செய்தால் நன்றாக உணர முடியும். தினமும் தூக்கத்திற்கும் முன்பு சாந்தி செய்து பழகினால் நல்லது.

4. ஒரு சிறு கர்சீப்பை நீரில் நனைத்து, பிழிந்து பின் மூலாதாரப் பகுதியில் உருட்டி வைத்துக் கொண்டு தவம் செய்வது தாரணைக்கு எளிதாய் அமையும். மூலாதாரத்தின் உணர்வு நன்றாய் தோன்றிய பின் கர்சீப்பை எடுத்து விடலாம்.

5. அக்கு பிரஷர் செய்யும் முதல் புள்ளி இடது கை மூன்று விரலில் வைத்துக்கொண்டு, வலது கை ஆல் காட்டி விரல் மூலாதாரத்தை தொட்டு ((முதுகு தண்டின் நுனிப்பகுதியை) தொட்டுக்கொண்டு இடது பக்கம் படுத்துக்கொண்டு செய்ய வேண்டும்.

தூக்கம் வரும் வரை (10 - 15 நிமிடங்கள்) மனம் விரல் நுனியை கவனித்தவாறு இருந்தால் நன்கு தூக்கம் வரும். சாந்தி தவம் நன்கு உணர முடியும்.

6. ஆரம்ப பயிற்சியாளர்கள் ஒவ்வொரு வேளை சாப்பிட்ட பிறகும்

மூன்று நிமிடம் இறங்குபடி கவனிக்க வேண்டும். இதற்கு உட்கார்ந்து தவம் செய்ய வேண்டும் என்பதில்லை.

சாப்பிட்டு முடித்தபின் அடுத்த அடுத்த காரியங்களை பார்த்துக்கொண்டே, நினைவை மட்டும் மூலதாரத்தில் வைத்திருக்க வேண்டும்.

7. அசுவினி முத்திரையைத் தவறாது போட்டு வருபவர்களுக்கு மூலாதாரப் பகுதியில் கவனத்தை வைப்பது பழக்கமாய் மாறிவிடும். அத்தகையவர்கள் சாந்தி தவத்தில் எளிதில் கவனத்தை அப்பகுதிக்கு நகர்த்தி விடுவார்கள்.

8. புவிக்கு தன் மீது படும் எந்த ஒரு காந்தக்களதையும் தன்னுள்ளே ஈர்த்துக்கொள்ளும் பண்பு உண்டு [earthing].

நாம் சம்மணமிட்டு தவம் செய்கையிலே புவியின் மேற்பரப்புக்கு மிக அருகாமையிலே அதைத் தொடுமளவுக்கு நமது மூலாதாரம் வருவதினாலே, அங்கே தேங்கியுள்ள காந்தம், புவியின் காந்தக்களத்தோடு பின்னிப் பிணைய ஏதுவாகின்றது.

இந்த நிகழ்வு கூட, மூலாதாரத்தில் உறங்கும் காந்தத்தை நாம் உணர முடியாமற் போவதற்குக் காரணமாக் அமையக்கூடியதே.

இதைத் தவிர்க்கவே நாம் பாய் போன்றவற்றில் அமர்ந்து தவம் செய்கின்றோம்.

இக்காரணத்தாலே, சற்றே உயரமான தலையணை, மடித்த கம்பளிப் போர்வை போன்றவைகளின் மீது அமர்ந்து தவம் செய்வது மூலாதார உணர்தலை எளிதாக்கும். சேர் (Chair) மீது அமர்ந்து தவம் செய்தலையும் முயற்சிக்கலாம்.

9. சாந்தித் தவம் துவங்குகையில் மூலபந்தத்தில் இருந்து வரலாம், அது

கவனத்தை ஆசனவாய்ப்பகுதியில் இருத்த உதவியாய் அமையவல்லது.

10. ஒரு அன்பர் சொன்னது: குண்டலினி நமது முறையில் முதுகுத் தண்டுக்கு வல இடப்புறமுள்ள பிங்கலை, இட நாடிகளின் [உஷ்ண, குளிர் நாடிகள்] வழியாகத்தான் மேலெழும்புகின்றது.

மூலாதாரத்தவத்தைச் செய்யும் போது ஒரு நனைந்த ஈரத்தண்டை முதுகுத்தண்டின் மீது முழுக்கப்படுமாறு போர்த்திக் கொண்டால், உஷ்ண, குளிர் நாடிகளின் வழியாக அத்துணை எளிதில் உயிராற்றல் மேலெழும்பாது,

அப்படியே சற்றே எழும்பினாலும், நனைந்த துண்டு போர்த்தியமையால் அதை நம்மால் உணர இயலாது.

இவ்வாறு மனம் குண்டலினியோடு சேர்ந்து நகரா நிலையில், மூலாதாரத்தில் தேங்கியுள்ள ஆற்றலிலே தான் மனம் நிலைக்கும். இது சாந்தி யோகத்தை நல்லபடியாகச் செய்ய வழிவகுக்கும்.

நயன தீட்சை (துரியம்)

ஆன்மா தனது பழிச் செயல் பதிவுகளிலிருந்து தூய்மை பெற ஏற்றதோர் பயிற்சி துரியநிலை யோகமாகும்.

உயிராற்றல் மிக நுண்ணிய இயக்க நிலைக்கு இந்தப் பயிற்சியின் மூலம் திரும்பும். பிரபஞ்ச காந்த சக்தியோடு தொடர்பு கொள்ளும் ஆற்றல் ஓங்கி உள்ளுணர்வு (Intution) ஒளிரும்.

துரியநிலை யோகமானது ஆசான் தனது தவ ஆற்றலைக் கண்கள் மூலம் மாணவனுக்குப் பாய்ச்சிக் குண்டலினி சக்திக்கு ஒரு உயர் ஆற்றல் அளிக்கும் செயலாகும்.

மூளையின் நுண் பகுதிகளையெல்லாம் தூண்டி இயங்க வைக்கும் ஆற்றல் துரியநிலை யோகத்திற்கு உண்டு.

இதன் மேண்மையினை எழுதி விளக்குவது அரிது. அவரவர்கள் அனுபவத்தால் பயனடைந்து விளங்கிக் கொள்ளவேண்டியது.

உச்சி, ஆயிரம் இதழ தாமரை, பிரம்மரந்திரம் சதஸ்தராதரம் - அறிவ மையம், ஞானபுமி, சிற்றம்பலமேடு.......

“உச்சிக்கிடை நடுவே ஓங்கும் குருபதத்தை
நிசசயித்துக் கொண்டிந்துநேர்வதினி எக்காலம்” - பத்திரகிரியார்.

“உச்சி வெளியை உறுதியுடன் பாராமல்
அச்சமுடன் நானும் அறிவழிந்தேன் புரணமே” -பத்திரகிரியார்.
(புரணம் - இறைநிலை)

“காலன் வருமுன்னே கண்பஞ்சைடையும் முன்னே
பாலூண் கட்டை வாய் படு முன்னே - சுற்றம்
வரும் முன்றே - ஊரார் சுடுமுன்னே
குற்றாலத் தானை நினை” - பட்டினத்தார்.

(குத்தாலம் என்றால் உயிர்)

“எல்லாம் செயல் கூடும் என் ஆணை அம்பலத்தே
எல்லாம் வல்லான் தனைஏற்று” -வள்ளலார்.

“அல்லல்போம் வல்வினைப்போம்
அன்னை வயிற்றில பிறந்த தொல்லை போம்
போகாத் துயரம்போம் நல்ல குணமதிக
மாக் கருணை கோபுரத்தில் விற்றிருக்கும்
கணபதி கைத் தொழக் கால்.
(கோபுரம் - உச்சி -கணபதி-உயிர்சக்தி)

“தென்னாடுடைய சிவனே போற்றி
என்நாட்டவர்க்கும் இறைவா போற்றி”

(வடநாடு - கால் -தென்நாடு -உச்சி)

“ஒளிபடரும் குண்டலியை உள்ளி உணர்வால் எழுப்பி,
சுழிமுனையின் தாள் திறந்து தூண்டுவது எக்காலம்”

“மூல நெருப்பை மூட்டி விட்டு நிலா மண்டபத்தில்
பாலை இறக்கி உண்டு பசி ஒழிவது எக்காலம்”

“அறிவை அறிவால்அறிந்தே அறியும் அறிவு தனில்
பிரிவு படநில்லாமல் பிடிப்பது இனி எக்காலம்” - பத்திரகிரியார்.

குரு தனது ஆற்றலைத் தன் கண்கள் வழியாகச் சீடனின் கண்களுக்குப் பாயச்சுதலை நயன தீட்சை அல்லது துரிய தீட்சை இம்முறையிலேயே அளிக்கப்படுகிறது.

நயன தீட்சைக்கு உதாரணமாக மீனைக் குறிப்பிடுவார்கள். மீன் தனது கண்களால் முட்டைகளை உற்று நோக்கியே குஞ்சுகளைப்ப பொறிக்கும்.

“கண்ணினொளி பாய்ந்ததுவும் கருத்தறிந்து கொண்டதுவும்”
விண்ணினொளி கண்டதுவும் வெளிப்படுவதெக்காலம்?”

என்ற பத்திரகிரியாரின் மெய்ஞானப் புலம்பலில் வரும் பாடல் நயன தீட்சை உறுதிப்படுத்துகிறது.

மானஸ தீட்சை - துரியாதீதம்

தெய்வ நிலைக்கு உயிரை உயர்த்தி இரண்டு நிலைகளும் கலப்புறப் பயிலும் யோகமே துரியாதீதமாகும்.

இதனைச் சமாதியென்றும், சீவப்பிரம்ம ஐக்கிய முக்தி என்றும் கூறப்படுகின்றது. மனிதனாகப் பிறந்தவன் அறிந்து முழுமைபெற வேண்டிய விளக்கம் அனைத்தும் அந்த யோகத்தால் சித்தியாகும்.

முறையாக இத்தகைய எளிய முறைக் குண்டலினி யோகத்தைப் பயின்றால் மனிதன் தனது அறிவில் முழுமை பெறலாம்.

உணர்ச்சி வயப்படாமல் சம மன நிலையில் கடமையாற்றி மகிழ்ச்சியோடு வாழலாம். வாழப் பறந்தவர்கள், வாழ்வை விளங்கிக் கொண்டுதானே வாழவேண்டும்?

ஆகவே மெய்ஞ்ஞானம் எனும் அறிவின் விளக்கப்பேறு மனிதனுக்கு இன்றியமையாதது. ஆணாக இருந்தாலும் பெண்ணாக இருந்தாலும் வயதுக்கு வந்த உடன் பயின்று பலன் பெற வேண்டிய உளப்பயிற்சியே குண்டலினி யோகம்.

"கனவு கண்டால் போல் எனக்குக் காட்டிமறைத்தே இருக்க

நினைவைப் பரவெளியில் நிறுத்துவது எக்காலம்." பத்திரகிரியார்.

"உச்சிக்கே மேற் சென்று உயர்வெளி கண்டோர்

இச்சிப்பிங்கு ஏதுக்கடி குதம்பாய்" - குதம்பைச் சித்தர்.

(இச்சிப்பிங்கு - புலன் இச்சை - உயர்வெளி - பரவெளி)

"இன்று வருமோ, நாளைக்கே வருமோ

அல்லது மற்றொன்று வருமோ, அறியேன் என்போலே

துன்றுமல வென்மாயை அற்றுவெளிக்குள் வெளி

கடந்து சும்மா இருக்கும் சுகம்" - வள்ளலார்.

(வெளிக்குள் வெளி - சக்தி களம் கடந்து - சிவகளம்

சும்மா இருப்பது - எண்ணங்கள் இல்லாதது)

“மூலமாம் நகரமீதில் முளைத்தெழும் சுடரைக் கண்டு

காலத்தீ மேலேர யேற்றிக் கபாலத்தேன் அமுதுண்டு

கோலமோ மது வுண்டு குருபத தத் தன்னில் சேர்த்து

வால சுத்தரியால் நாகைலிங்கரை வணங்க நெஞ்சே”
- அகத்தியர்.

(சாந்தி - துரியம் - வெளி (குருபதம்)

வாலசுந்தரி - மனதால், நாகை லிங்கன் - இறைவெளி.

இம்முறையில் குரு தன் மனத்தின் ஆற்றலினால், மாணக்கனின் ஆற்றலை உயர்த்தி, இறைநிலையை உணர வைக்கிறார்.

இந்த ஞான தீட்சை முறையிலேயே நமக்குத் துரியாதீதம் அளிக்கப்படுகிறது.

இதற்கு உதாணரமாக, நமது மகரிசிகள் ஆமையைக் குறிப்பிடுவார்கள்.

ஆமையானது, கரையில் குழி தோண்டி முட்டையிட்டு விட்டு, அவற்றை மண்ணால் மூடி விட்டுச் சென்று விடும். என்றாலும், அம்முட்டைகளோடு தன் எண்ணத்தை இணைத்தவாறே இருக்கும்.

நல் பக்குவ நிலையை அம்முட்டைகள் எய்தி விட்டதாக ஆமை நின்கின்றபோது. முட்டையிலிருந்து குஞ்சு வெளி வரும்.

ஆராய்சியாளர்கள் இதைச் சேதித்துப் பார்க்க ஒரு முறை ஓர் ஆமை முடட்டையிட்டுச் சென்றவுடன், அதைப் பிடித்துக் கொன்று விட்டனர்.

பல மாதங்களாகியும் அம்முட்டைகள் பொறியவேயில்லை. தாய் ஆமையின் எண்ணத் தொடர்பு தடைப்பட்டதே அதற்குக் காரணம் என அவர்கள் விளங்கிக் கொண்டனர்.

“கருக்கொண்ட முட்டைதனைக் கடலாமை தானினைக்க
உருக்கொண்டு வாறதுபோல் உனையடைவதெக்காலம்?
- பத்திரகிரியார்

“கடலிலு திரியுமாமைக் கரையிலேறி முட்டையிட்டுக்
கடலிலே திரிந்தபோது ரூபமான வாறுபோல்
மடலுளே இருக்கமெங்கள் மணியரங்கச் சோதியை
உடலுளே நினைந்து நல்ல உண்மையான துண்மையே”
- சிவவாக்கியார்

“குளத்திலே கிடக்குமாமை குளக்கரை முட்டையிட்டுக்
குளத்துநீர்க் குள்ளிலிருந்து குறிப்புடன் நினைக்கும்போது
குளத்திலே புதைந்த முட்டை கருவுருவா னாற்போலுன்
உளத்திலே நாகைநாதர் உருவறிந் துணர்வாய்நெஞ்சே!”
- கணபதிதாசர்.

மேலே விளக்கப்பட்ட இந்த மூன்று தீட்சை முறைகளையுமே நாம் கவனித்தால் உதாரணங்களுக்கிடையே ஓர் ஒற்றுமை புலப்படும்.

மூன்றுமே பிறத்தலைக் குறிக்கின்றன. அதுவும் மறுபிறத்தலையே குறிக்கின்றன.

முட்டைகள் முதலிலேயே வெளி வந்து விட்டாலும், முழுப் பக்குவம் பெற்ற பின்னரே உயிராக வெளிப்படுகின்றன.

அதுபோல், நாமும் ஏற்கனவே உலகில் பிறந்து விட்டாலும், பக்குவ நிலையடையும் வரை, நாம் முழுமையடைவதில்ல.

குருவின் மூலம் தீட்சை பெற்ற பின்னரே நாம் முழுமை பெறுகிறோம். அதாவது மீண்டும் பிறக்கிறோம்.

மேலும் நம் பாரத நாட்டில் வழங்கி வருகின்ற “மாதா, பிதா, குரு, தெய்வம்” என்ற தொடரும் இதை உறுதி செய்கிறது.

நமது உயிர் முதலில் தாயினிடத்தில் இருக்கிறது. பிறகு தந்தையின் உயிர் சேருகின்ற போது உடல் உருவாகிறது.

நாம் பிறக்கிறோம். பின்னர் குருவின் மூலம் தீட்சை பெறுகின்ற போது தான் குருவின் உயிராற்றல் நம்முயிரோடு சேர்ந்து, அறிவு மேம்பாட்டை அடைகிறோம்.

மீண்டும் பிறக்கிறோம். நிறைவாக, அந்தத் தெளிவான அறிவோடு நமது உயிர் இறை நிலையை அடைகிறது.

ஆக வணங்குவதற்கான வரிசைப்படுத்தப்பட்ட “மாதா, பிதா. குரு, தெய்வம்” என்ற தொடர், நமது உயிரின் வரலாற்றையே கூறுகிறது.

17.சும்மா இருக்கும் சுகம்

மௌனம் ஒரு மகத்தான் ஞானம். அது தெய்வீகக் கலை. மனவளக்கலை மன்றங்களில் அன்பர்களுக்கு மௌன நோன்பு பயிற்சி தரப்படுகிறது.

மௌன வித்தை (பேசா மந்திரம்) ரகசியம் !!!

மந்திரங்களில் பேசும் மந்திரம், பேசா மந்திரம் என்றநிலைகள் உண்டு. பேசா மந்திரம் என்னவென்று தெரிந்தவர்கள் ஞானிகள் என்கின்றனர் சித்தர்கள்.

பேசா மந்திரத்தை மௌனம் என்று குறியீட்டின் மூலம் சித்தர்கள் தங்கள் பாடல்களில் குறிப்பிடுகின்றனர்.

1882 ல் வெளியிடப்பட்ட சட்டைமுனி நாயனார் முன்ஞானம், பின் ஞானம் என்ற புத்தகத்தில் சட்டைமுனிநாயனார் பின்ஞானம் என்ற பாகத்தில் பேசா மந்திரம்எனப்படும் இந்த மௌன வித்தை பற்றி குறிப்பிடப்பட்டிருக்கிறது.

மௌனவித்தை யாருக்கு யார் கொடுத்தார்கள் என்பதை கீழ்க்கண்ட பாடல்கள் விளக்குகின்றன.

"கிட்டினோங் கைலாய பரம்பரையினாலே
கேளுமக்களாலாச்சாயங் கொங்கணா; தான்
சென்று,கிட்டினோ மென்று சொல்லியீசானத்தே
கெடியானரசமுண்டு சட்டைபோக்கிக்,
கிட்டினோ மீசானந்துதித்தோ மென்று
கெடியாக தவசிருந்து முத்தனாகி,கிட்ட
மினோமென்று சொல்லி தச்ஷணாமூர்த்தி
பதம்பிடித்து பணிந்திட்டாரே"

"தவம் பல செய்து கர்மவினைகளை கழித்து, ஒன்பதுவாசலை அடைத்து பத்தாவது வாசலைத் திறந்து,அமுதத்தை பருகி, கயிலாயம் சென்று தசஷணாமூர்த்தி பாதம் பணிந்து, ஞானத்தை அடையக் கூடிய வழியைஎனக்;குக் காட்டுங்கள்" என்று கொங்கணர் வேண்டினார.;

"பணிந்திட்ட கொங்கணரைப் பார்த்து நாயன்
பாருலகிற்பிறந்தவனோவிப்படி தானானாய்,
மணிந்திட்டச் சடம்போக்கிக் கைலாயத்
தேகமானதுதான் வெகுகடினமதிகமெத்த,
கனிந்திட்ட கனிவாலே வீறத்தாலேகலங்காமற்
சமாதியுற்று கயிலாயத்திற், றணிந்திட்ட
புத்திகொண்டுயிங்கே வந்தாய்
சாதகமாயொருவரைங்கண்டிலேனே"

கால்களில் வீழ்ந்த கொங்கணரைப் பார்த்து, தட்சிணாமூர்த்தி மனிதர்கள் வாழக்கூடிய பூவுலகில் பிறந்து தவங்கள் பலசெய்து சித்திகள் பல பெற்று எப்படி இந்த நிலையைஅடைந்தாய்.

மனிதர்கள் இறந்தால் அவர்கள் தங்கள்உடலை உதிர்த்து விட்டு செய்த தவப் பயனால்; உயிராகத்தான் இந்த கயிலாய மலையை அடைய முடியும்.

அத்ததைகய நிலை பெற்றவர்கள் தான் இந்த கயிலாயமலைக்கு அதிகமாக வந்தவர்கள்.

ஆனால் நீ ஜீவசமாதிஅடைந்த   பின்பு   உடலை ஜீவசமாதியில் வைத்து விட்டுஉயிராக இந்த கயிலாய மலைக்கு எப்படி வந்தாய், இப்படிவந்த ஒருவரையும் நான் இதுவரை கண்டதில்லை என்று தட்சினா5ர்த்தி   கூறுகிறார்.

“கண்டிலேனாச்சாயங்கமா ரனேபாருங்கலந்தந
ற்சென்மமிவா; கைலாயமானா;,
ஒண்டிபேநாலதுக்கு மகத்து
வந்தானென்னவுற்ற சிவ விந்துவின்னிலப்
படிதானாச்சு, கன்டிலேனிவரைப்
போற்சித்தா;காணேன் காரணமாயிவனுக்கு
தீசஷிப் பேனான்,பண்டிலேன் கொங்கணரை
மயங்க வேண்டாம்பரம்பரமாய் வந்து தந்த
மௌணந்தானே”

இது எவ்வளவு பெரிய ஆச்சரியம் . இந்த ஜென்மத்திலேயே கர்மவினைகளை கழித்து கயிலாயம் வந்திருக்கிறார்.கயிலாயம் வர வேண்டுமென்றால், விந்து நாதம், இரண்டுஎட்டு, இடகலை பிங்கலை, ஆகியவற்றின் பொருள் தெரியவேண்டும்.

மேலும் சிவனின் விந்து என்று சொல்லப்படுவது எது என்ற ரகசியமும் தெரிந்திருக்க வேண்டும்.

இவர் கயிலாயம் வர முக்கிய காரணம் சிவ விந்துவின் ரகசியம் தெரிந்து, அதன் வழி நடந்திருப்பதனால் தான்இவர் கயிலாயம் வர முடிந்தது.

இவ்வளவு சிறப்புகள்வாய்ந்த கொங்கணரைப் போல ஒரு சித்தரை நான்கண்டதில்லை என்று அவருக்கு ஞானம் அடைவதற்கு உரியவழியை சொல்லி தீட்சை கொடுத்தார்.

அந்த ரகசியம் தான்பேசா மந்திரம் எனப்படும் மௌன வித்தை எனப்படுகிறது.

இந்த மௌன வித்தை சித்தர் பரம்பரை என்றுசொல்லப்படும் குரு சீடன் பரம்பரையாக ஒருவர் மாறிஒருவராக வந்து கொண்டேயிருக்கிறது.

“மௌனவித்தை மூலருக்கு முன்னே
சொன்னேன்மருவியவா காலாங்கிக்கதுவே
சொன்னர், மௌனவித்தைகாலாங்கி போகருக்கு
சொன்னா; மகத்தானபோகருந்தானுனக்குச்
சொன்னா; மவுனவித்தையகண்டாதியறிந்து
கொள்ளூ மற்றொன்று மயக்க
மற்றுமௌனத்தாh;க்கு, மௌனவித்தை
யெய்தாக் கால்வனேஞானி வாய் திறந்து
பேசாதே மகாரம் நன்றே”

கொங்கணர் பேசா மந்திரம் எனப்படும் மௌனவித்தையை திருமூலருக்கு சொன்னார்.

திருமூலர் காலங்கிநாதருக்குசொன்னார்; காலங்கி நாதர் போகருக்கு சொன்னார்; போகர்உனக்குச் சொன்னார் என்று சட்டைமுனி நாயனாரைக்குறிப்பிடுகிறார்.

மௌன வித்தை என்ன என்பதை கண்டுகொள்ள வேண்டும் மௌன வித்தையைக் கண்டுகொண்டால் மட்டுமே இவ்வுலக மாயையிலிருந்து தப்பிக்க முடியும்.

ஞான வழியைக் காட்டுகிறேன் என்று சொல்லும் ஏமாற்று வித்தைக் காரர்களிடமிருந்து விலகி இருக்கமுடியும் மௌன வித்தை என்று சொல்லப் படுகிற பேசாமந்திரத்தை தெரிந்து கொண்டு, அதனை செயல்படுத்துபவனே ஞான நிலையை அடைய முடியும். அவனேஞானி என்று அழைக்கப்படுகிறான்;

அகாரம்; உகாரம்; மகாரம் என்று அழைக்கப்படுகிற மூன்றில் பேசா மந்திரம் மகாரம் மஎன்ற எழுத்தால் குறிக்கப்படுகிறது என்று கொங்கணர்சொல்கிறார்.

மௌன வித்தையின் சிறப்புகள் பற்றி கீழ்க்கண்ட பாடல்கள்விளக்குகின்றன:

“சித்தாகுஞ் சித்தியுமாமெட்டெட்டு மாடுந்
திறமாகநின்றவா;க்;கு மந்திரஞ்சித்தி பத்தாகும்
வேதத்தில்மந்திரத்தைப் பாவி பல பலெனப்
பேசியவா;சேவிப்பா; கோடி கத்தாதும் நாய்
போலே கற்றியென்னகாசிக்கு மாகாது
சித்தியில்லை, முத்தான மௌனம்விட்டால்
மௌனம் பாழாச்சு மோசமிந்தவேதமெல்லாம்
பொய்யென்பாரே”

மௌன வித்தை தெரிந்தவருக்கு மட்டும் தான் மந்திரங்கள் எல்லாம் சித்தியாகும் வேதங்களில் உள்ள மந்திரங்களை உச்சாடணம் செய்து கோடி முறை உரு ஏற்றினாலும், நாய்போல உலகமெல்லாம் சுற்றினாலும், காசி போன்ற புனிதமான இடங்களுக்குச் சென்றாலும் மந்திரங்கள் சித்தியாகாது. கடவுள் நிலை உணர முடியாது.

மௌனவித்தை தெரியாதவருக்கு, வேதங்களில் உள்ள ரகசியங்கள்தெரியாது. வேதங்களில் உள்ள ரகசியங்கள் தெரியாதகாரணத்தினால், வேதங்களே பொய் என்பர்.

“பொய்யென்று யெண்ணியெண்ணி
யுலகங்கெட்டுப்போச்சப்பாவதனாலேயுக
பேதமாச்சு, கையென்றுயோகத்தில்
மௌனமுட்ட கடுஞ்சித்தியறிவு மட்டுங்கலந்துதாக்கு,

கையென்ற நித்தமப்பா
ஆறிற்காணுஞ்சாதகமாய் மேல்மூலந்தாண்டி

க்காணும், மெய்யென்றுபிடித்தாக்காலவனே
யோகி விரைந்துயிதையறியாவிட்டால்
விருதமாடே”

மௌன வித்தை தெரியாத காரணத்தினால், காராணங்கள், உபநிஷத்துக்கள் ஆகியவைகளில் உள்ள கருத்துக்களைப் புரிந்து கொள்ளமுடியவில்லை.

கடவுள் என்றால் என்னஎன்றும்,; கடவுளை அடையக் கூடிய வழி எது என்றும்கேட்பவர்களுக்கு சரியான விளக்கங்கள் கொடுக்கமுடியவில்லை.

அதனால் கடவுள் உண்டா இல்லையா என்றநிலை உருவாகி, ஆத்திகர,; நாத்திகர் என்ற பிரிவுஉண்டாகி உலகம் இரண்டாகி பிளவு பட்டு நிற்கிறது.

மௌனவித்தையை தெரிந்து ஆறு ஆதாரங்களைக் கடந்து சென்று பிரம்மரந்திரத்தில் தன் ஜீவனை இணைப்பவனே யோகி.இதை அறியாவிட்டால் ஒன்றுக்கும் உதவாத மண்ணுக்குச் சமம் என்கிறார் சட்டைமுனி நாயனார்.

“நன்றான மௌனத்திற் கடிகை சேர
நல்வினையுந்தீவினையும் நாசமாகும்,
நன்றான மௌன மென்றுநினைக்க முத்தி
நல்லோ;கள் நினைப்பா;கள் மற்றோ;காணா;,
நன்றான மௌனமல்லோ ஷிகள்
சித்தா;நாலுதிக்குஞ் சொரூபத்தைக் கண்டா;
கண்டா, நன்றானமௌனமல்லோ சாத்திரங்கள்
தோறும் நலமாகக்கூப்பிடுது கண்டிலாரே”

மௌன வித்தை தெரிந்தவர்கள் மட்டுமே அதை செயல்படுத்தி கர்ம வினை என்று சொல்லப் படுகிற பாவபுண்ணியங்களை கழிக்க முடியும்; பாவ புண்ணியங்களைக்
கழித்தால் மட்டுமே முக்தி அடைய முடியும்;

அதனால்மௌன வித்தை தெரிந்தவர்களால் மட்டும் தான் முக்திஅடைய முடியும் என்பதை உணர வேண்டும்.

மற்றவர்கள்எந்த வழிகளில் முயற்சி செய்தாலும் முக்தி அடையமுடியாது. மௌன வித்தை தெரிந்ததால் தான் சித்தர்கள்அனைத்திலும்; அதாவது துhணிலும், துரும்பிலும்,கடவுளைக் கண்டனர்.

வேதங்கள், உபநிஷத்துகள் மற்றும்அனைத்து சாத்திரங்களும் கூறுவது, மறை பொருளாகவிளக்குவது, குறியீடுகளாகக் குறிப்பிடுவது இந்த மௌனவித்தையைத் தான் என்பதை யாரும் அறியாமல் இருக்கின்றனர் என்கிறார் சட்டைமுனி நாயனார்.

"கண்டிலா; மௌனத்திலனேக சித்தி
காணுமப்பாசொல்கிறே நன்றாய்க் கேளு,
மண்டிலர்; மந்திரங்கள்செபிக்கும் போது
அப்பனே மௌனமென்ற தீசைஷகேளு,
ஒண்டிலாய் வாய் மூடி பேச்சு மற்று
ஒருசேரை சமைத்துண்டு ஒரு போதப்பா,
விண்டிலாதென்னேரஞ் செபித்தாயானால்
விளங்கியதோரேழுலஷமந்திரமுஞ் சித்தே"

மௌனவித்தை தெரிந்து செய்தால் அஷ்டமா சித்தி உட்படபல்வேறு சித்திகளும் கிடைக்கும் என்பதை அறியாமல்இருக்கிறார்கள்.

மௌனவித்தையின் சிறப்புகளை சொல்லுகிறேன் கேள், நீ மந்திரங்களைச் செபிக்கும் போதுமௌன வித்தை தெரிந்தவர்களிடம் , மௌனவித்தைதீட்சை உனக்கு சொல்லித் தரும்படி கேள்.

தனியானஅமர்ந்து வார்ததை எதுவும் பேசாமல் வாயை மூடிஅமைதியாக மௌன வித்தையை தொடர்ந்து செய்துகொண்டே இரு.

காலை, மதியம், மாலை, இரவு என்றுநேரம் பார்க்காமல் எந்த நேரமும் தொடர்ந்து செய்துகொண்டே இருப்பாயேயானால் ஏழு லட்சம் மந்திரம்மட்டுமில்லை, அதற்கு மேலும் மந்திரங்கள் சித்தியாகும்.

மந்திரங்கள் சித்தியாக வேண்டுமென்றால் மௌன வித்தைதெரிந்திருக்க வேண்டும் என்கிறார். மௌன வித்தை என்பது சித்தர்கள் கலை.

அது தகுதியானவர்களுக்கு மட்டுமே கிடைக்க வேண்டும் என்பதற்காகவே சித்தர்கள் தங்கள் பாடல்களில் அமளன வித்தையை மறைத்து வைத்திருக்கிறார்கள்.

மௌனவித்தையின் ரகசியம் தெரிந்து, அதை செய்து வருகிற ஒருசில பேர் தமிழகத்திலேயே இருக்கிறார்கள்.

முயற்சி, முன்வினை, ஆராய்ச்சி ஆகியவற்றின் மூலமேஒருவர் மௌனவித்தையின் ரகசியத்தை தெரிந்து கொள்ளமுடியும்.

பழமொழிகளின் விளக்கத்தை சரியாக புரிந்து கொள்ளவேண்டும் என்பதற்காகவே பின்வரும் ஒரு பாடலின்விளக்கத்தை இங்கே தெரிந்து கொள்வோம்.

திருமூலர் “நாயோட்டு மந்திரம் நமனை வெல்லும்” என்கிறார்.

நாயோட்டு மந்திரம் என்றால் நான் என்னும் அகந்தையை ஓட்டும் மந்திரம். நான் என்ற அகந்தையை எந்த மந்திரமும் ஓட்டாது.

மௌன வித்தை என்ற பேசா மந்திரம் மட்டும்தான் ஓட்டும். சாதாரண மந்திரங்களால் நமனை அதாவது இறப்பை வெல்ல முடியாது.

நான் என்னும் அகந்தையை ஓட்டும் மௌன வித்தைஎன்னும் பேசா மந்திரம் மட்டும் தான் இறப்பை வெல்லும்.மோன வித்தை என்னும் பேசா மந்திரத்தை சொல்கிறவர்களுக்கு மரணம் இல்லை என்பது தான் இதன்பொருள்.

சும்மா இருப்பதுவே சுகம். ஞானம் அடைந்தவர்களுக்கு கர்மம் தேவை இல்லை என்பது கீதையின் கருத்து.

“சும்மா இரு! சொல்லற!” என்றலுமே
அம்மா பொருளன்றும் அறிந்திலனே!”

என்பார் அருணகிரி நாதர்.

”சும்மா இருக்க வைத்தான் சூத்திரத்தை நானறியேன்
அம்மா பொருளிதென அடைய விழுங்கினண்டி.”

என்பார் பட்டினத்தார்.

அவர் சீடர் பத்திரகிரியாரும்,”

ஆங்காரம் உள்ளடக்கி ஐம்புலனை சுட்டறுத்து தூங்காமல் தூங்கி சுகம் பெறுவது எக்காலம்" என்று புலம்புகிறார்.

வள்ளலாரும்

"இன்றுவரு மோநாளைக் கேவருமோ அல்லதுமற்
றென்றுவரு மோஅறியேன் எங்கோவே-துன்றுமல

வெம்மாயை யற்று வெளிக்குள் வெளிகடந்து
சும்மா இருக்கும் சுகம்." என்பார்.

தாயுமானவரும்,

"கந்துக மதக்கரியை வசமா நடத்தலாம்
கரடி வெம்புலி வாயையுங்
கட்டலாம் ஒரு சிங்க முதுகின்மேற் கொள்ளலாம்
கட்செவி யெடுத்தாட்டலாம்
வெந்தழலின் இரதம்வைத்து ஐந்து லோகத்தையும்
வேதித்து விற்றுண்ணலாம்
வேறொருவர் காணாமல் உலகத் துலவலாம்
சந்ததமும் இளமையோடிருக்கலாம் மற்றொரு
சரீரத்தி லும்புகுதலாம்
சலமேல் நடக்கலாம் கனல்மேல் இருக்கலாம்
தன்னிகரில் சித்திபெறலாம்
சிந்தையை அடக்கியே சும்மா இருக்கின்ற
திறன் அரிது சத்தாகியென்
சித்தமிசை குடிகொண்ட அறிவான தெய்வமே
தேசோ மயானந்தமே."

என்கிறார்.

‘மவுனத்தில் எனை அமர்த்தி மனத்தை உள்ளுள் ˙ஈர்த்து
மாபெரிய பேரண்ட ˙ரகசியங்கள் தம்மை
மவுனமாக உணர்த்திவிட்டாய் மா அறிவாய் நின்று
மற்றும் நான் எனது வாழ்வில் கடமை தேர்ந்து ஆற்ற
மவுனம்தாய் ˙அறிவினது பூ ரணமாய் மாந்தர்

மனத்துக்கு உட்பொருளாய் விளங்கும் பேரறிவே'   - ஞா. க. 209.

என்கிறார் வேதாத்திரி மகரிசி.

இப்படி சித்தர்களும், ஞானிகளும், மகான்களும் சும்மா இருப்பதைப் பற்றி பலவிதமாகச் சொல்லியிருக்கையில் நம் காஞ்சி மகா பெரியவர் என்ன சொல்கிறார் என்று பார்ப்போமா ?

"சும்மா இரு" உபகாரமோ, அபகாரமோ, நல்லதோ, பொல்லாததோ எப்படி எப்படி நடக்கின்றதோ அப்படியே நடக்கட்டும். நாம் சும்மா இருந்தால் போதும்.

அதுவே நாம் மற்றவர்களுக்கு செய்யும் மிகப் பெரிய உபகாரம். இதை நான் சொல்லவில்லை.

ஆதி சங்கரர் சொன்னதாக மகா பெரியவர் சொல்லியிருக்கிறார். ஏன் அப்படி ஒரு முடிவுக்கு வந்தார். அதற்கான விளக்கத்தையும் பெரியவர் சொல்கிறார்.

சன்னியாசி என்றால் ஒரு இடத்தில் இருக்கக்கூடாது என்கிற நியதிப்படி சஞ்சாரம் செய்ய ஆரம்பித்தார் ஆச்சார்யர்.

காசிக்கும் சஞ்சாரம் மேற்கொண்டார்.காசி என்பது சப்த மோட்ச ஸ்தலங்களில் ஒன்று.

காசி, காஞ்சி, அயோத்தியா, மதுரா, மாயா, அவந்திகா, துவாரகா என்கிற மோட்ச ஸ்தலங்களில் ஞானம் வருகிறதோ இல்லையோ, அங்கே மரணம் அடைந்தால் மோட்சம் என்பார்கள்.

சன்னியாசிகள் கூட அங்கே எத்தனை நாட்கள் வேண்டுமானாலும் வாசம் பண்ணலாம்.

அங்கே செத்தாலே மோட்சம் என்பதனால் அங்கே இருப்பதனால் எத்தனை அழுக்கு ஒட்டிக் கொண்டால்தான் என்ன ?

ஆகையால் சப்த மோட்ச புரிகளில் மட்டும் சன்னியாசிகள் தங்கலாம் என்று விலக்கு கொடுத்திருக்கிறார்கள்.

56 தேசங்களில் உள்ள ஜனங்களும் காசிக்கு வருவார்கள். எனவே ஆச்சார்யரின் கீர்த்தி லோகமெங்கும் பரவியது. ப்ரம்ம சூத்திரத்திற்கு பாஷ்யம் எழுதிக் கொண்டு வந்திருக்கிறார்.

அபார தேஜஸ்வியாக இருக்கிறார் என்று எல்லா இடங்களும் பரவ அனைவரும் வந்து ஆச்சார்யரின் சரணத்தில் வீழ்ந்து அவர் பாஷ்யாம்ருத ச்ரவணத்தைக் கேட்டு ஆனந்தப் பட்டார்கள்.

எல்லா தேசத்தில் உள்ளவர்களின் அன்பை கண்டு மகிழ்ந்த ஆச்சார்யர் இந்த லோகத்துக்கு ஏதாவது செய்ய வேண்டும் என்று ஆசைப்பட்டார்.

என்ன செய்யலாம்? ஒருவருக்கு உபகாரம் பண்ணுவது என்றால் இன்னொருவருக்கு அபகாரமாகப் போய்விடுகிறது. ஒரு தேச்துக்கு உபகாரம் செய்தால் மற்ற தேசத்துக்கு விரோதமாகப் போய்விடுகிறது.

ஒரு ஜாதிக் காரனுக்கு உதவி செய்தால் அது இன்னொரு ஜாதிக் காரனுக்கு கஷ்டமாக இருக்கிறது. ஒரு மதத்தை சேர்ந்தவனுக்கு உபகாரம் செய்தால் அடுத்த மதத்தை சேர்ந்தவன் எதிரியாகி விடுகிறான்.

இது மட்டுமா ? ஒவருவன் கஷடப்படுகிறானே என்று அவனுக்கு 10 ரூபாய் கொடுத்து உதவினால், அவன்போய் சொல்லி இனிஒருவன் வந்து கேட்கிறான். நம்மிடம் இல்லை.

எனவே இல்லை என்று சொன்னால் , நமக்கு மட்டும் இல்லை என்று சொல்லிவிட்டானே என்று அவன் வருத்த மடைகிறான்.

ஆச்சாரியர் தங்கியிருந்த ஒரு பழைய காலத்து மடம் ஒன்றில் ஒரு உளுத்தப் போன உத்திரம் இருந்தது.

ஒட்டுக் கட்டிடம், நடுவில் முற்றம். முற்றத்திலே செடிகள் வைப்பதற்காக தளம் போடாமல் மண்தரையாகவே பாதி இடம் இருந்தது.

ரீங்காரம் பண்ணியபடி பறக்கின்ற பெரிய வண்டுகள் உத்திரத்தில் துளையிட்டு அந்தத் துளையில் வாசம் செய்தன. சில சமயம் அவை முற்றத்தில் வந்து புரளும். அங்கு கட்டை எறும்புகள் சாரிசாரியாய் போய்க் கொண்டிருக்கும்.

இந்த வண்டு வந்து தலை குப்பிற விழுந்து புரள முயற்சி செய்து கொண்டிருக்கும் போது 10, 15 எறும்புகள் இந்த வண்டைப் பிடித்து வெடுக் வெடுக் என்று அதன் காலைப் பிடித்து கடிக்கும். வண்டு துடிக்கும்.

ஐயோ பாவம் என்று எண்ணி வண்டை புரட்டிப் போட்டால் அது உடனே இந்த எறும்புகளைப் பிடித்து சாப்பிட ஆரம்பித்து விடுமாம். ஆச்சார்யர் பதறிவிடுவாராம்.

இது உபகாரமா, அபகாரமா ? அப்போதுதான் முடிவு செய்தாராம். ஒன்றுமே செய்யாமல் சும்மா இருப்பது என்று.

ஆனால் உலகத்துக்கு ஏதாவது செய்ய வேண்டுமே ? என்ன செய்வது ?யாருக்கும் உபத்திரபம் இல்லாத ஒன்றைச் செய்ய வேண்டும் . என்ன செய்யலாம். யோசனை பண்ணினார் ஆச்சார்யர்.

ஒரு முடிவுக்கு வந்தார். இந்த சும்மா இருக்கும் விஷயத்தையே உலகுக்கு சொல்லிவிடுவோம். யாருக்கும் உபத்திரபம் இல்லாமல் போகும் என்று முடிவு செய்தார்.

அதையே சொன்னார். உபகாரமோ, அபகாரமோ, நல்லதோ, பொல்லாததோ, எப்படி எப்படி நடக்கிறதோ அப்படியே நடக்கட்டும். நாம் சும்மா இருந்தால் போதும்.

சும்மா இருப்பதுதான் நாம் பிறருக்கு செய்யும் உபகாரம். அவர் சொல்லிவிட்டார். வாஸ்தவத்தில் சும்மா இருப்பதுதான் ரெம்பக் கஷ்டம்.

மௌனம் - மகரிசி

நாம் கருத்தொடராகப் பெற்ற வினைப் பதிவுகளையும், பிறவி எடுத்த பின் ஆற்றிப் பெற்ற வினைப் பதிவுகளையும் தன்மைகளாகப் பெற்றவர்களாவோம்.

நம் வினைப்பதிவுகள் அனைத்தும் புதையல் போல உயிர் எனும் இயற்கை கம்யூட்டரில் அடங்கியுள்ளன.

காலத்தால் மலரும் அப்பதிவுகளின் வெளிப்பாடுகளே எண்ணங்கள், செயலார்வம், நோய்கள், இன்ப துன்பங்கள் யாவுமாகும்.

ஒரு தொழிலதிபர் அல்லது வணிகர் மாதந்தோறும் அல்லது ஆண்டுதோறும் இருப்பிலுள்ள பொருள்களைக் கணக்கெடுப்பது போல எல்லோருமே மாதத்திற்கு ஒரு நாளோ அல்லது ஆண்டுக்குச் சில நாட்களோ ஒதுங்கிக் கொண்டு நம் இருப்பைக் கணக்கெடுக்க மௌன நோன்பு அவசியம்.

இந்தக் கருத்தோடு, தவத்தால் அறிவை அமைதிக்கும், கூர்மைக்கும் கொண்டு வந்து, அகத்தாய்வால் நமது இருப்புகளைக் கணக்கெடுத்து, புதிய திட்டத்தால் ஆக்க வாழ்வுக்கு வழி செய்து கொள்ள வேண்டும்.

மௌன நோன்பின் உண்மை நோக்கமறிந்து விழிப்புடன் காலத்தைப் பயன்படுத்தி, ஆன்மத் தூய்மையும், வாழ்வின் வளமும் பெறுவோம். தான், குடும்பம், உற்றார், ஊர், உலகம் என்ற ஐந்து பிரிவுகளையும் பல தடவை வாழ்த்தி அமைதி காண்போம்.
- அருட்தந்தை வேதாத்திரி மகரிசி

Top of Form

மௌன காலம் - - அருட்தந்தை வேதாத்திரி மகரிசி

மௌனத்தில் பழகிப் பழகித் தான் எண்ணங்களை வெற்றி கொள்ள வேண்டும்.

மௌனத்தில் கிடைக்கக்கூடிய நல்ல எண்ணங்கள், முன் செய்த நல்ல எண்ணங்கள், முன் செய்த நல்ல செயல்களின் பதிவுகள் எல்லாவற்றையும் குறிப்பெடுத்துக் கொண்டு அவற்றைச் செயல்படுத்தி விட்டோமானால், வாழ்க்கையில் மேம்பாடு வரும்.

இவைகளை எல்லாம் அனுபவத்தில் நீங்கள் பார்க்கலாம் நாம் பேசிக் கொண்டிருக்கும்போது, உணர்ச்சிவயப்பட்ட நிலையில் இருக்கிறோம்.

நமக்கு யார் யாருடைய கருத்துக்கள் வான் காந்தத்திலிருந்து வரும் என்றால், உணர்ச்சிவயப்பட்ட நிலையில் உள்ளவர்களின் கருத்துத் தான் வரும். அதை எல்லாம் அனுபவித்துப் பார்க்கலாம்.

ஆனால், மௌனத்தில் பேரமைதி நிலைக்கு வந்தால், அமைதியாக இருந்து ஆராய்ச்சி செய்து, இறைநிலையை உணர்ந்து, அதோடு தொடர்பு கொண்டால், அந்த நிலையை உணர்ந்த பெரும் மகான்கள், அவர்களுடைய ஆற்றல்கள், எண்ணங்கள் எல்லாம் நம்முடைய எண்ணங்களாக வரும்.

அதை எல்லாம் அனுபவித்துப் பார்க்கலாம். அனுபவித்துப் பார்ப்பதற்கு ஏற்ற காலம் தான் மௌன காலம்.

எவ்வளவு காலம் மௌனம் மேற்கொள்ளலாம்?

நீங்கள் ஒரு நாள் மௌனம் இருக்கலாம். இரண்டு நாளும் இருக்கலாம்.

ஆனால், அந்த மௌன காலத்தில் கிடைத்த பயன்களை நினைவில் பதிய வைத்துக் கொள்ளுங்கள். வாழ்க்கையில் அவற்றைப் பயன்படுத்திக் கொள்ளவும் வேண்டும்.

போகப்போக ஒரு மணி நேரம் மௌனம் இருந்தால் கூடப் போதும். ஆனாலும், அந்த ஒரு மணி நேரமும் வெற்றி அளிப்பதாக இருக்கும். இங்கேயும் அங்கேயும் மனதை ஓடவிடாது வைத்து இருக்க முடியும்.

அப்படி இருந்து பழகிவிட்டோம் என்று வைத்துக் கொள்ளுங்கள், எந்தச் செயல் செய்தாலும் பதிவாகி அந்தப் பதிவுகள் அவ்வப்போது எண்ணங்களாக வருகின்றன அல்லவா?

அதேபோல மௌன காலத்தில் நீங்கள் இறைநிலையில் இருந்து ஏற்படுத்திக் கொண்ட மௌனப் பதிவும் சாதாரண காலங்களில் கூட மேலே வந்து அவ்வப்போது அமைதி நிலைக்கு மனதை அழைத்துச் செல்லும்.

மனம் வெளுக்கும் மருந்து

நமது மனதின் பதிவுகளுக்குள்ளாக உள்ள நமக்குத் தேவையானது, தேவையில்லாதது எல்லாம் மௌனத்தில் உட்காரும்போது வெளியில் வரும்.

இதில் எது எது நமக்குத் தேவையில்லாதது, துன்பம் செய்வது என்பதைத் தெரிந்து கொண்டு, அதையெல்லாம் குறித்துக் கொள்ளுங்கள்.

“இந்த இந்தச் செயலைத் திருத்திக் கொள்வேன், இவரது பேரில் விரோதம் இருக்கிறது, அது தேவைதானா? தேவையில்லை” எனக் கண்டு அவர்களை நினைக்கும் போதெல்லாம் வாழ்த்திக் கொண்டே இருந்தால் இரண்டு, மூன்று நாட்களுக்குள்ளாக அந்த விரோதமே இருக்காது.

அம்மாதிரியான எண்ணங்களால் ஏற்பட்டுள்ள பதிவுகள் எத்தனை வைத்திருக்கிறீர்களோ, அவற்றை எல்லாம் எடுத்து வழித்து எறிந்து விட வேண்டும். அப்போது மனம் தூய்மையாக இருக்கும்.

மறுபடியும் அதே பதிவுகள் எண்ணத்தில் மேலோங்கி வந்தால், மறுபடியும் சங்கல்பங்களைப் போட்டுச் சரிபடுத்திக் கொள்ளலாம்.

மனம் வெளுக்க மருந்து உண்டு

வினைத்தூய்மை வேண்டும் என்று சொல்வார்கள். வினைத்தூய்மைக்கு முன்னதாக மனத்தூய்மை வேண்டும். மனத்தூய்மைக்கு மௌனத்தைவிட ஒரு சிறந்த பயிற்சி வேறு இல்லை.

எங்கே வேண்டுமானாலும் மழை பெய்யலாம். அந்த மழை எங்கே போய் நிற்கிறது என்று பாருங்கள். பள்ளம் எங்கே இருக்கிறதோ அங்கே போய்த்தான் அந்த மழை நீர் நிற்கும்.

மௌன காலங்களில் நாம் ஜீவகாந்தச் சக்தியைச் சேகரிக்கிறோம். செலவு செய்யாமல் மௌனத்தில் அப்படியே ஜீவகாந்த சக்தி சேருகிறது. அந்தச் சக்தி அழுத்தம் பெறும்போது உடலுக்குள்ளாகவே தேங்கி நிலைத்து நிற்கும்.

மனவளம் என்பது தான் மனவளக்கலை மன்றத்தில் பயிற்சி முறைகளில் நல்ல நோக்கம். மனம் எவ்வளவு சிறப்பானது உயர்வானது எனப் புரிந்து கொள்ள வேண்டுமானால் மனதிற்கு ஓர் ஆழம் வேண்டும். நாம் எல்லாம் ஒவ்வொருவரும் மனோசக்தியின் அணைக்கட்டுகள். அணைக்கட்டு என்றால் நீர் வந்து தேங்குமிடம்.

வினைத் தூய்மைக்கு மௌனத்தைவிட ஒரு சிறந்த பயிற்சி வேறு இல்லை. எங்கே வேண்டுமானாலும் மழை பெய்யலாம். அந்த மழை எங்கே போய் நிற்கிறது பாருங்கள். பள்ளம் எங்கே இருக்கிறதோ அங்கே போய்தான் மழைநீர் நிற்கும்.

மௌன காலங்களில் நாம் சீவகாந்தச் சக்தியைச் சேகரிக்கிறோம். செலவு செய்யாமல் மௌனத்தில் அப்படியே சீவகாந்த சக்தி சேருகிறது. அந்த சக்தி அழுத்தம் பெறும் போது உடலுக்குள்ளாகவே தேங்கி நிலைத்து நிற்கும்.

மூன்று நாட்கள் மௌனம் இருக்கும்போது சிலருக்குப் பெரிய மாற்றம் வரும். அதாவது சீவகாந்த சக்தியின் அழுத்தம் தருகின்ற உந்துதலினால் எப்போது வாய் திறந்து பேசலாம் என்றிருக்கும். அதற்காக சில நாள் நாம் மௌனத்தில் இருந்தால் போதும்.

மௌனம் குறித்த ஒரு ஜென் கதை.........

ஒரு பெரிய அறிஞர். அவருக்கு ஜென் கற்க ஆசை. ஒரு குருவைத் தேடி வந்தார். வணக்கம் போட்டார். விஷயத்தைச் சொன்னார்.

அவர் பேசுகிறவிதத்தை ஊன்றிக் கவனித்த குருநாதர் சொன்னார். 'இதோ பாரப்பா, உன் மனசு ஒரு நிலையில் இல்லை. நீ ரொம்பக் குழம்பியிருக்கிறாய்.

இப்போது ன் உனக்கு ஜென் சொல்லிக்கொடுத்தால் பிரயோஜனம் இருக்காது. அநாவசியமாக நம் இருவரின் நேரமும் வீணாகும்.' இதைக் கேட்ட அறிஞரின் முகம் சுருங்கிவிட்டது

'குருவே, நீங்களே இப்படிச் சொன்னால் நான் எங்கே போவேன்?' என்று அழாக்குறையாகக் கெஞ்சினார்.

எப்படியாவது நீங்கதான் எனக்கு உதவி செய்யணும். என் மனசில இருக்கற சந்தேகங்களைத் தீர்த்துவைக்கணும்.'

'சரி. உன்னை நான் சிஷ்யனா ஏத்துக்கறேன். ஆனா ஒரு நிபந்தனை.'
'சொல்லுங்க குருவே!'

'இங்கே நீ ஆறு மாசம் மௌன விரதம் இருக்கணும்.'

'மௌன விரதமா?' வந்தவர் அதிர்ந்தார். 'அப்புறம் அப்படி நான் என்னோட சந்தேகங்களைக் கேக்கறது?'

'அதையெல்லாம் மனசுல குறிச்சுவெச்சுக்கோ. எல்லாத்துக்கும் நான் பதில் சொல்வேன். ஆனா இப்போ இல்லை. 6 மாசம் கழிச்சுதான்.'

அறிஞருக்கு ஒன்றும் புரியவில்லை. ஆனாலும் வேறு வழியில்லாமல் சம்மதித்தார். ஆசிரமத்தில் சேர்ந்தார். மௌன விரதத்தைத் தொடங்கினார்.

அடுத்த பல மாதங்கள் அவருடைய நேரம்முழுவதும் தியானம், பிரார்த்தனை, வாசிப்பு, குருவின் சொற்பொழிவுகளைக் கேட்பது என ஓடியது. மெல்ல அவரது மனம் தெளிந்தது.

முன்பு குழப்பியடித்த விஷயங்கள் இப்போது நிதானமாக யோசித்தபோது புரிந்தன.
ஆறு மாதங்கள் முடிந்தன. குரு அவரை அழைத்தார். 'நீ மௌன விரதம் இருந்தது போதும். இப்போது உன் கேள்விகளைக் கேட்கலாம்.'
அறிஞர் அமைதியான குரலில் சொன்னார். 'கேட்பதற்கு ஒன்றும் இல்லை குருவே!'

18.சித்தர்கள் தந்த கராத்தே

ஆன்மா என்றால் உயிர். உயிரை உணர்ந்தால்தான் ஆன்மிகம். உயிரை உணர்ந்து அதன்மேல் மனம் வைத்துப் பயிற்சி செய்வததான் தவம். இந்த தவத்தைச் செய்து வெற்றி பெற ஒரு குறிப்பிட்ட காலம் ஆகும்.

அக்காலத்தில் புறச் சூழ்நிலைகள் ஒரு சங்கடமாக அமையாதிருந்தால் நலம். அத்தகு சூழ்நிலையைக் கொண்டதாக நமது தமிழ்நாடு கால காலமாக அமைந்திருக்கிறது.

கொஞ்சம் பழகிக்கொண்டால் போதும் - மிகக் குறைந்த ஆடையொடு ஆண்டு முழுவதும் இனிமையாக வாழலாம்.

தமிழகத்தில் கடுங்குளிர் கிடையாது. கடும் வெப்பம் கிடையாது. கன மழை கிடையாது. கொடும் வறட்சி கிடையாது.

எனவே இயற்கையை எதிர்த்துப் போராடிக்கொண்டிருப்பதில் நேரத்தையும், முயற்சியையும் செலவிட வேண்டியதில்லை.

அந்த நேரத்தையும் முயற்சியையும் நேரே ஆன்மிக மேம்பாட்டுக்கே செலவிடலாம்.

எனவேதான், தமிழகத்தில் ஆன்மீகம் தழைத்தது. உயிர்மேல் மனம் வைத்துத் தவம் செய்யும் முறையான ஆன்மீகத்துக்கத் தமிழ்நாடு ஏற்றதாக அமைந்து.

இங்கே உயிருணர்வாளர்கள் அதிகமாக வாழ்ந்தார்கள். உயிருக்குச் “சித்”, “சித்தம்” என்றும் பெயருண்டு. அதனால் இவர்களுக்கு சித்தர்கள் எனப் பெயர் வந்தது.

தவத்திற்குப் பொருத்தமான தட்ப வெப்பம் ஆண்டு முழுவதும் இனிமையான பருவங்களாக நிலவி வந்ததால் உலகில் வேறு பாகங்களிலிருந்தும் வந்த “ஆன்மிக ஆர்வலர்கள்” (Truth Seekers) தமிழ் நாட்டிற்கு வந்து சேர்ந்தனர்.

இங்குச் சிலகாலம் வாழ்ந்து ஆன்ம சாதனை செய்து, வெற்றி பெற்றபின் தங்கள் நாட்டுக்கு மீண்டு சென்றனர்.

இயேசுநாதர் வரலாற்றில் அவருடைய 12 ஆண்டு காலம் வரலாறு மறைக்கப்பட்டிருக்கும். அந்த காலத்தில் அவர் இமயமலையில் இருந்து தவம் புரிந்தார் என்ற பல ஆராய்சியாளர்கள் தெரிவித்துள்ளனர்.

தமிழ்நாட்டில் “அகத்தியர்” என்ற ஒரு சித்தர் பெயர் கூறுகிறோம். அவர் “அகஸ்டஸ்” என்ற மேலை நாட்டவர். தமிழ் நாட்டில் அகத்தவம் பயின்று இங்கு வாழ்ந்து அகத்தியர் என்று பெயர் கொண்டார்.

அதே போன்று “டைகர்” என்ற ஆராய்ச்சியாளர் தமிழ்நாட்டிற்கு வந்து தங்கி, யோகம் பயின்று நிறைவடைந்தார். அவரைத்தான் நாம் “புலிபபாணிச்சித்தர்” என்கிறோம்.

“போகர்” என்ற பெயர் கொண்ட சித்தர் சீனாவிலிருந்து வந்தவர்.

நம் நாட்டுச் சித்ர்களின் ஆன்மிக நெறியை இங்கு வந்து தங்கி பயின்று - தங்கள் தங்கள் நாட்டிற்கும் அவர்கள் எடுத்துச் சென்றனர்.

ஆனால் வாழ்க்கைப் பண்பாடாக அவர்கள் தமிழ்நாட்டில் கற்றுக் கொண்டதெல்லாம் வேற நாடுகளில் முழுமையாகப் பின்பறறப்படவில்லை.

ஒரு சில குறிப்பிட்ட உடற்பயிற்சிகளும், வேறு சில வித்தைகளும் மட்டும் அயல் நாட்டில் ஏற்றுக் கொள்ளப்பட்டது.

“வர்மைக்கலை”. வர்மக்கலை என்றால் என்ன? முரடர்களும் மூடர்களும் தரும் தொந்திரவிலிருந்து தங்களைக் காத்துக் கொள்ள சித்தர்கள் ஒரு ரகசியமான தறிமையை வளர்த்துக் கொண்டார்கள்.

ஆயுதம் வைத்திருக்கும் எதிராளியிடமிருந்து ஆயுதமே இல்லாமல் வெறுங் கையைக் கொண்டே தங்களைச் காத்துக் கொள்ளத் சித்தர்கள் உருவாக்கி வளர்த்துக் கொண்ட வித்தையே வர்மக்கலை.

இந்த அரிய கலையைக் கொண்டு நோயைப் போக்கவும்முடியும். இந்கத் கலையில் ஒரு குறிப்பிட்ட வித்தையை பிரயோகித்தால் எதிரிக்கு உடனே ஒன்றும் ஆகாவிட்டாலும், சில நாட்களில தானே இறந்து போவான்.

அவ்வளவு வீரியம் பொருந்தியது இந்த வர்மைக்கலை. அதை சித்தர்கள் இரசியமாகவே வைத்திருந்தனர். அதனால் அது தமிழகத்தில் அனேகமாக மறைந்தே விட்டது என்கிறார் மகரிசி.

19. சித்தர்கள் நெறியே மனவளக்கலை.

இறைவனை அடையும் வழிமுறைகளை வகுத்து தந்த நம் முன்னோர்கள் 1. சரியை 2. கிரியை 3. யோகம் 4. ஞானம் என்று நான்கு நிலைகளாக தந்தனர்.

இதனை தசமார்க்கம், சற்புத்திர மார்க்கம், சகமார்க்கம், சன்மார்க்கம் என்றும் கூறுவர்.

இதில் யோகம் என்னும் சகமார்க்கத்தில் இறைவனை சக தோழனாக பாவித்தல் என்பார்கள்.

வாசியோகம் என்றும், உறடயோகம் என்றும், குண்லினி யோகம் என்றும், இன்னும் பலப்பலவான யோக முறைகளில் மிக கடினமானதும், குடும்பத்தில் உள்ளவர்களுக்கு செய்ய முடியாது என்று கூறப்ட்ட, குண்டலினி யோகத்தை வேதாத்திரி மகரிசி அவர்கள் தேர்வு செய்து அதனை, எளிமைப்படுத்தியும் தந்துள்ளார்கள்.

யோகம் என்றால் இணைதல் அல்லது இலயமாதகுதல் என்று பொருள்படும்.

பதஞ்சலி முனிவரின் யோகநெறி

நமது உடலுக்கும்உயிருக்கும், உயிருக்கும் மனதுக்கும், மனதுக்கும் இறைநிலைக்கும், ஒரு இணக்கத்தை ஏற்படுத்த வேண்டும்.

மேலும் தனி மனிதனுக்கும், சமுதாயத்திற்கும் ஒரு இணக்கத்தை ஏற்படுத்த வேண்டும். அதுதான் யோகம்.

பல்வேறு வகையான யோக முறைகளை, பல கோணங்களில் ஆய்வு செய்து. முழுமையான யோக முறைக்கு ஓர் இலக்கண வரை தந்தார் பதஞ்சலி முனிவர்.

இவர் கிமு. 2ஆம் நற்றாண்டில் வழ்ந்தவர் என்று தெரியவருகிறது.

யோக சூத்தரம் வழங்கிய பதஞ்சலி முனிவரின் குருநாதர் “உறிரண்ய காப்பர்” என்ற முனிவராவாபு. இவர்தான் முதன்முதலில் “யோக கைவல்யம்” என்ற இலக்கண நூலை வழங்கியுள்ளார்.

ஆனால், அந்நூல் நமக்குக் கிட்டவில்லை. காலத்தால் சிதைந்தும் மறைந்தும் போயிருக்கலாம்.

பதஞ்சலி முனிவர் அருளிய யோக சூத்திரம் என்பது 195 சூத்திரங்களால் ஆனது. இதனை நான்க பாகமாக பிரித்துள்ளார்.

அவை 1. வியுக பாகம்.2 சாதன பாகம் 3. வைல்ய பாகம் 4. சமாதி பாகம் என்பனவாகும்.

பதஞ்சலி முனிவர் வழங்கிய கோக சூத்திரத்திற்குப் பின்னாளில் பல மகான்களால் விளக்க உரை வழங்கப்பட்டுள்ளர்.

- கி.பி. 9 ம் நூற்றாண்டில் வாசஸ்பதி மிக்ரர் என்பராலும்
- கி.பி. 11ம் நூற்றாண்டில் போஜர் என்பராலும்
- கி.பி. 15ம் நூற்றாண்டில் ராமானந்த ஸ்வாமி என்பராலும்
- கி.பி. 16ம் நூற்றாண்டில் விஸ்வஞான பிட்சு என்பராலும்
- கி.பி. 18ம் நூற்றாண்டில் நாகோஸபட்டர் என்பராலும்
- கி.பி. 19ம் நூற்றாண்டில் சதாசிவ பிரம்மேந்திரர் என்பராலும்

விளக்க உரை வழங்கப்பட்டுள்ளது.

கோரக்கர்என்ற சித்தரால் “யோக மாத்தாண்டம்” எனும் இல்கண நூல் வழங்கப்பட்டுள்ளது.

பாரதியார் அவர்களால் பதஞ்சலி யோக சூத்திரத்தில் சமாதி பாகத்துக்கும், பின்னாளில் தஞ்சையை சேர்ந்த குப்புசாமி ராஜி என்பராலும், கடலங்குடி நடேச சாஸ்திரகளாலும், நான்கு பாகத்துக்கும்தமிழில் விளக்க உரை எழுதப்பட்டுளளது,

மொகஞ்சதாரோவில் அகழ்வராய்ச்சி செய்தபோது கி.மு.400 வருடங்களுக்கு முந்தைய தவம் செய்யும் முனிவரது கற்சிலை கிடைத்துள்ளது.

ஆக பல ஆயிரம் வருடங்களாக இந்த யோக முறைநமது நாட்டில் கையாளப்பட்டுள்ளது என்று தெரிகிறது.

யோக இலக்கணம் வகுத்துத் தந்த பதஞ்சலி முனிவர் தனது சூத்திரத்தில் யோக முழுமை நிலை அடைய , ஆறு ஆதாரங்களையம் ஐந்து அவஸ்தைகளையும் அஸ்டாங்க யோகத்தையும் கடந்து வரவேண்டும் எனக் குறிப்பிட்டுள்ளார்.

இதில் 4 இதழ் மூலாதாரத்திலிருந்து 2 இதழ் ஆக்கினைக்கு உயிச்சக்தியைக் கொண்டு வரவேண்டும் எனவும், இதற்கு தீட்சை என்று ஒரு குருமூலம் மேலே கொண்டு வரவேண்டும்.

இதனைத்தான் "நாலை இரண்டாக்கி நலம் பெறுவது எக்காலம்? என்று கூறுவார் பத்திரகிரியார்.

ஐந்து அவஸ்தைகள்

1. சாக்கிரதம் (நினைவு)
2. சொப்பனம் (கனவு)
3. சுழுத்தி (உறக்கம்)
4. துரியம் (பேரூறக்கம்)
5. துரயாதீதம் (உயிர்ப்பு)

பாமர மனிதன் மூன்று அவஸ்தைகளில் நின்று விடுகின்றான். (காக்கிரதம், சொப்பனம், சுழுக்தி)

ஆனால் மனிதப் பிறவி எடுத்ததே துரியம், துரியாதீதம் என்ற நிலைகளை அவசியம் அடையத்தான்.

துரியம் என்றாலே "துரிசு" குற்றம் வினைகள் களைதல் என்பர். துரியம் என்றாலே நான்காவது நிலை என்றும் கூறுவர்.

அட்டாங்க யோகமும் மனவளக்கலையும்.

இமயம் (புலனடக்கம்)

தீய குணங்களான பொய், கொலை, களவு, கள் உண்ணல், காமுறுதல் இவற்றைத் தவிர்த்து நற்குணங்களோடு, நீதி தவறாமல இருந்து சமுதாயத்தோடு இணைந்து வாழும் தன்மை பெற்று சிறந்து விளங்குவது.

மனவளக்கலை அகத்தாய்வில் புலனடக்கத்திற்கான பாடங்கள் கற்றுத்தரப்படுகின்றன.

நியமம் (ஒழுக்கத்தில் நிற்றல்)

நியமத்தில் நிற்பவனுக்குரிய கணங்கள் உள்ளும் புறமும் தூய்மையாய் இருத்தல். அருளுடைமை, ஊண் முதலியவற்றைச் சுருக்கி சிக்கனமாய் வாழ்தல், பொறுமை, நேர்மை, உண்மை, மானம் ஆகியவற்றைக் காத்து களவு, கொலை, இவற்றை தீமையென்று ஒதுக்குதல் ஆகும்.

மனவளக்கலையில் தரப்படும்- துரியநிலை யோகத்தால் ஆன்மா தூய்மையடைந்து வரும்போதே- தற்சோதனைப் பயிற்சியினைத் தொடங்க வேண்டும்.

எண்ணம், சொல்,செயல் இவற்றின் விளைவறிந்து- செயலாற்றும் -ஒழுக்கப் பயிற்சியிலிருந்து தான் நான் யார்? என்று தெளிந்து கொள்ளும்- முழுமைப் பேறு வரையில்- இப்பயிற்சி விரிவடைந்து பயன் தருகின்றது.

ஒழுக்கம், கடமை, ஈகை,உயிர் விளக்கம், மெய் பொருள் விளக்கம் அனைத்தும்- தற்சோதனை பயிற்சியினால் பெறப்படும்.

ஆசனம். (இருக்கை)

ஆசனம் உடலைச் சரிசெய்வதற்கும் நாம் தியானம் செய்ய உடலைத் தயார் படுத்தவும் நோய் அணுகாமலும் பாதுகாக்கிறது. யோகத்தில் வெற்றி பெற ஆசன பயிற்சிகள் உதவுகின்றன.

மனவளக்கலையில் எளிய முறை உடற்பயிற்சியும், காயகற்பப் பயிற்சியும் கற்றுத்தரப்படுகின்றன.

பிராணாயாமம் (முச்சை கட்டுப்படுத்துவது)

பிராணாயாமம் என்பது வெளியே இருக்கும் காற்றை இடமு மூக்கு துவாரத்தின் வழியாக உள்ளே இழுத்து பினாறு மாத்திரை கால அளவு சுழி முனை நடுவில நிறுத்தி பறிகு முப்பதிரண்டு மாத்திரையளவு வலது மூக்னின வழியே விடுவதாகும்.

மனவளக்கலை உடற்பயிற்சியில் மூச்சுப் பயிற்சியும் உண்டு.

பிரத்தியாகாரம் (மனதை உள்ளே நிறுத்தி பழகுதல்)

மனதை வெளியே செல்ல விடாமல்உள்ளேயே நிறுத்திப் பழகுவது பிரத்தியாகாரம்.

எந்த இறைவனை வேதங்கள் தேடிக் கொண்டு இருக்கிறதோ அந்த இறைவனை அகத்தே கண்டு இன்புறுவதே பிரத்தியாகாரம்.

அது ஆனந்த பரவசத்தை உண்டு பண்ணும் உள்ளம் வலுவடையும்.

மனவளக்கலையில் மனம் என்றால் என்ன? அதனை எப்படி வசப்பபடுத்துவது என்ற அகத்தாய்வு பயிற்சியும் உண்டு.

தாரணை (உள்ளே நிறுத்திய மனதை நிலைப்படுத்துதல்)

மனம் புலன்களைப் பற்றிக் கொள்ளும் தன்மை உடையது. அதைக் கண்படடி அலையவிடாமல் அடக்க வேண்டும்.

அடக்கிய பின் உணர்வுக் கண் கொண்டு இறைவனை உற்று நோக்குதல் ஆகும். அப்போது கண் காது முதலிய கருவிகளின்றியே காண்பதும் கேட்பதும் சாத்தியமாகும்.

தியானம். (இடைவிடாமல் நினைத்தல்)

தியானம் என்பது இடைவிடாது நினைத்திருத்தல். தியானம் என்பது இறைநிலையை நம் சிந்தனையில் வைப்பதன்றி வேறு ஒன்றும் இல்லை.

மனதில் விளங்கும் சோதியை மெலேழுப்பி சினம் என்கின்ற தீயைப் போக்க எல்லாவற்றையும் விளக்கி நிற்கும் இறைநிலையை சுழுமுனை என்ற திரியைத் தூண்ட இறைநிலையானது மங்காத தீபமாய் மனதில் ஒளிவிடும்.

தியானத்தில் ஆணவம் கன்மம், மாயை என்ற முக்குணங்களின் இருள்நீங்கி உச்சியில் ஒளி காணும்.

மகரிசியின் பயிற்சியில் ஆக்கினை, சாந்தி, துரியம், துரியாதீதம், பஞ்சபூத நவக்கிரக தவம், பஞ்சேந்திரிய தவம், பிரணவ தவம் போன்ற தவங்கள் பயிலலாம்.

மனதை அடக்க நினைத்தல் அடங்காது. மனதை அறிய நினைத்தால் நிலைப்படுத்த முடியும் என்பதை பயிற்சியாக மனவளக்கலையில் கற்றுத்தரப்படுகிறது.

சமாதி (உயிரும் இறைநிலையுடன் ஒன்றி நிற்றல்)

ஆன்மாக்களுக்கு ஆணவ மறைப்பால் உண்டாகும் உபாதைகள் ஏழு.

இறையின்மை, அற்ப அறிவுடைமை, அளவுபட்ட தன்மை, மாயையோடு கூடிய தன்மை, குறைந்த அளவிலான ஆற்றல், சுதந்திரமின்மை, கண்டறியும் திறனின்மை ஆகும்.

இறைநிலையில் உபாதிகள் (செயல்) ஏழு அவை. இறைமை, முற்றறிவு, எங்கும் தானாதல், மாயையின்மை, அளவு கடந்த ஆற்றல், தன்வயப்படுதலர், ஒன்றியுணர்தல் ஆகும்.

ஆன்ம உபாதை ஏழும் நீங்கி இறைவனின் உபாதி ஏழும் பொருந்தி தவத்தால் இறைநிலையைச் சேர்வதே சமாதியின் பயனாகும்.

“ ஒன்றி ஒன்றி நின்று அறிவைப் பழக்க
உறுதி, நுட்பம், சக்தி இவை யதிகமாகும்
அன்று அன்று அடையும் அனுபவங்கள் எல்லாம்
அறிவினிலேநிலைத்து விடும். ஆழ்ந்து ஆய்ந்து
நன்று என்று கண்டபடி செயல்கள் ஆற்றும்
நற்பண்பு புலன்களுக்கு அமைந்து போகும்
என்றென்றும் கருவிடத்தே அறிவை ஒன்றும்
இயற்கைமுறை சிறப்புடைத்து ஈதே தவமாம்.”(ஞா.க.)

மனவளக்கலை எனும் எளியமுறைக் குண்டலினியோகம்.

அருள்தந்தை மகரிசி அவர்கள் வகுத்துள்ள மனவளக்கலை என்னும் யோகமுறையில் ஆறு ஆதாரங்களையும் கடந்து வருகின்றோம். ஐந்து அவஸ்தைகளையும் அடைகின்றோம்.

அஸ்டாங்க யோகத்தையும் முழுமையாக கடைப்பிடிக்கினறோம்.

ஆதலால் இந்த யோக முறை முழுமையானது. தெளிவானது, பூரணமானது. பாதுகாப்பனது என்று உறுதியாகக் கூறலாம்.

வேதாத்திரி மகரிசி அவர்கள் யோகத்தில், குண்டலினி யோகத்தையும், தத்துவத்தில் மிக உயர்வானதும், விஞ்ஞான பூர்வமானதும் ஆன அத்வைதக் கோட்பாட்டையும் எடுத்துக் கொண்டு மிகவும் எளிமைப்படுத்தி தனது அனுபவத்தையும் இணைத்துத் தந்துள்ளார்.

நேரடியாக பரம்பொருளோடு இணைந்து தவமிருப்பது முதலிலேயே முடியாது. அதற்குப் பல படித்தளமாகப் பயிற்சிகள் வேண்டும்.

அந்தப் பயிற்சியைத் தான் நாம் இங்குச் சொல்லிக் கொடுக்கிறோம், மனவளக்கலையிலே.

மனவளக்கலை வெறும் யோகம் மட்டும் அல்ல. அது மனிதன் வாழ்வாங்கு வாழ்வதற்குரிய வாழ்க்கைக் கலைகள், வாழ்வியல் நெறிமுறைகள், கோட்பாடுகள் என்று கூறலாம்.

துணைநின்ற நூல்கள்.

1. சித்தர் இலக்கியம் - மீ.ப. சோமு
2. பதினெண் சித்தர்கள் வரலாறு - சி.எஸ்.முருகேசன்
3. பெரிய ஞானக்கோவை - எஸ்.பி.ராமச்சந்திரன்
4. அன்பொளி மாத இதழ்கள்
5. ஞானக்களஞ்சியம் - வேதாத்திரி மகரிசி
6. ஞானக்களஞ்சியம் - வேதாத்திரி மகரிசி
7. இண்டர்நெட் தகவல்கள்
8. வேதாத்திரி மகரிசி சொற்பொழிவுகள்
9. வேதாத்திரியச் சிந்தனைகள், தமிழ்ப்பல்கலைக் கழகம், தஞ்சாவூர்.
10. வேதாத்திரியத்தில் சமூகவியல் இறையியல் சிந்தனைகள், உலகத் தமிழராய்ச்சி நிறுவனம்.
11. வேதாத்திரி மகரிசியின் பொன்மொழிகள் 5000, பானுகுமார்
12. **சித்தமெல்லாம் நிறைந்த சித்தர்கள் –சம்பத் குமார்**
13. **திருமூலரின் வெட்டவெளிப் பயணம்- அகமுகநாதர்**
14. **உலகப் பெருஞ்சித்தர் திருமூலர் செய்த அருட்புரட்சி- மணிவாசகம்**